பக்கங்கள்: 24 FREE COPY விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 17, ஞாயிற்றுக்கிழமை 30.04.2017 | கதிர் 175

கண்கவர் ஆடைத் தெரிவுகளுக்கு
சரவணா ரெக்ஸ்
இல.526.529 பருத்தித்துறை வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

## வெளிநாட்டு நாணயங்களுடன் இருவர் கைது!

கொழும்பு, ஏப். 30

12 கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயங்களுடன் இந்தியர்கள் இருவர் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளினால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

14 நாடுகளின் நாணயங்கள் இவர்களிடம் இருந்தன எனவும் சந்தேகநபர்கள் இந்தப் பணத்தை சிங்கப்பூருக்கு எடுத்துச் செல்ல தயார் நிலையில் வைத்திருந்தனர் எனவும் சுங்கப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர். (ம)

# தமிழருக்கு நிச்சயம் விரைவில் தீர்வு!



## இது விடயத்தில் அரசு எவருக்கும் அடிபணியாது என்கிறார் மங்கள

கொழும்பு, ஏப்ரல் 30

**தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசு நிச்சயமாக விரைவில் நல்ல தீர்வை வழங்கும். இதில் எந்தச் சந்தேகத்துக்கும் இடமில்லை. ஆனால் இது விடயத்தில் அரசு எவருக்கும் அடிபணியப் போவதில்லை.**

பக்கம் 22 »

# நாட்டின் பிரச்சினைகளுக்குக் காரணம் சமாதானத்தை விரும்பாத பிரகிருதிகளே!

## இனங்கள் இடையே முறுகலை ஏற்படுத்துவதே அவர்களின் சிந்தனை




மட்டக்களப்பு, ஏப். 30

நாட்டில் மக்கள் சமாதானமாக வாழ்வதை விரும்பாத பிரகிருதிகள் உள்ளனர். எப்படிப் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம் என்பதே அவர்களின் கைங்கரியம் – சிந்தனை எல்லாம். திடீரெனப் புத்தர் சிலையை அடிப்படையாகக் கொண்டு பிரச்சினையை எழுப்புவார்கள். பௌத்த விகாரை, இந்து ஆலயங்கள், முஸ்லிம்

பக்கம் 22 »

நீதிமன்ற கட்டளை அவமதிப்புத் தொடர்பில்

# பகிரங்க மன்னிப்புக் கோருகின்றனர் மட்டு.வேலையற்ற பட்டதாரிகள்



மட்டக்களப்பு,ஏப்.30

திருகோணமலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது நீதிமன்ற கட்டளை அவமதிக்கப்பட்டமை தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் பகிரங்க மன்னிப்புக் கோரியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட

பக்கம் 22 »

## ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சை மீள் திருத்தப் பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்டன

கொழும்பு, ஏப். 30

கடந்த 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையின் மீள் திருத்த பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்டுள்ளன என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேற்படிப் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த ஜனவரி மாதம் வெளியிடப்பட்டன. தொடர்ந்து

பக்கம் 22 »

அளப்பு அருணாசலம்



நாட்டின் சிக்கல்களுக்கெல்லாம் உந்தக் காவியுடைக்காரர்தான் காரணம் என்கிறாரோ உவர் பெரியவர்....!

# முள்ளிக்குளம் மக்களின் காணிகளை நேற்று விடுவித்தனர் கடற்படையினர்!

## அறவழிப் போராட்டத்திற்கு வெற்றி



மன்னார், ஏப்.30

மன்னார் – முள்ளிக்குளத்தில் கடற்படையினர் ஆக்கிரமித்திருந்த பொதுமக்களின் காணிகள் நேற்று விடுவிக்கப்பட்டன. தமது காணிகளை விடுவிக்க வலியுறுத்தி முள்ளிக்குளம் மக்கள் மேற்கொண்டுவந்த தொடர் அறவழிப் போராட்டத்தின் 38

பக்கம் 22 »

# பேரினவாதிகளுடன் பேச்சு நடத்தி தமிழர் உரிமையைப் பெற முடியாது

## இதனை அன்றே சிவராம் கூறிவிட்டார் நினைவேந்தல் நிகழ்வில் முதல்வர் விக்கி

கிளிநொச்சி, ஏப்.30

பேரினவாதிகளிடம் இருந்து தமிழர்களுக்கான உரிமைகளை எந்தப் பேச்சின் மூலமும் பெற்றுக் கொள்ள முடியாது என்ற உண்மையை ஊடகவியலாளர் மாமனிதர் சிவராம் அன்றே உலகுக்கு எடுத்துரைத்துவிட்டார்.

நாங்கள் இன்றும் அவ்வாறான சிந்தனையில் இருந்தாலும், ஆயுதத்தை ஒதுக்கி வைத்து ஆளுமையமிக்க நெருக்குதல்கள் மூலம் நிலைமையில் முன்னேற்றத்தைக் கொண்டுவர முடியும் என்ற எண்ணத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

–இவ்வாறு வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி

பக்கம் 22 »

# பொன்சேகா விவகாரம் ஒரு 'ஜோக்'

கொழும்பு, ஏப். 30

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு இராணுவத் தளபதி பதவியை வழங்குவதற்கோ, தொழிற்சங்க நடவடிக்கைகளால் அத்தியாவசிய சேவைகள் தடைப்படும்போது, நிலைமையைக் கையாள்வதற்கான குழுவுக்குப் பொறுப்பாகநியமிப்பதற்கோ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கனவுகாணவில்லை என்று அமைச்சர் ஜோன் செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்துவெளியிட்ட அவர், ஜனாதிபதி நகைச்சுவையாகக் குறிப்

பக்கம் 21 »

# எமது உறவுகள் எங்கே உள்ளனர்?

## காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகள் ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் கேள்வி



வவுனியா, ஏப்.30

எமது உறவுகள் எங்கே உள்ளனர் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகள் கேள்வி எழுப்பியுள்ளன.

வவுனியாவில் போராட்டத்தை மேற்கொண்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அரச அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் அரச அதிபர் ரோஹன புஸ்பகுமாரவை சந்தித்து, பல்வேறு கோரிக்கைகளை தாங்கிய மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

அந்த மகஜரிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

எமது உறவுகள் உயிருடன் இருக்கின்றார்களா? இல்லையா?, உயிருடன் இருந்தால் அவர்கள் எந்த இரகசிய சித்திரவதை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்?, உயிருடன் இல்லாவிட்டால் அவர்களுக்கு என்ன நடந்தது? யாரால்? எப்படி? கொலை செய்யப்பட்டுஎங்கேபுதைக்கப்பட்டுள்ளார்கள்? என்பவற்றை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டுள்ள எமது உறவுகள் உயிருடன் இருப்பின் அவர்கள் தத்தமது குடும்பத்தினருடன் இணைந்து வாழ்வதற்கு உடனடியாகவழிவிடுவதோடு, சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும், படையினர் நிலை கொண்டுள்ள அனைத்து தமிழ் மக்களின் காணிகளும் உடன் ஒப்படைக்கப்பட வேண்டும்.- என்றுள்ளது.

இந்த மகஜரை பெற்றுக்கொண்ட வவுனியா அரச அதிபர் உடனடியாக ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# 160 தொழிற்சங்கங்கள் இணைந்து பெரிய போராட்டம் நடத்த தீர்மானம்

கொழும்பு, ஏப்.30

சைட்டம் தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிராக பரந்தளவிலான ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கூறியுள்ளது.

அதன்படி எதிர்வரும் 3 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை இந்த வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று அந்தச் சங்கம் கூறியுள்ளது.

சைட்டம் தனியார் மருத்துவ கல்லூரி தொடர்பில் எழுந்துள்ள முரண்பாடு சம்பந்தமாக பேசுவதற்கு நேற்று முன்தினம் இரவு கூடிய அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற் குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

முன்னெடுக்கப்படவுள்ள வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு மேலும் பல தொழிற்சங்கங்கள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளன என்றும் மே மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னர் அரசு சரியான தீர்வொன்றை வழங்காவிட்டால் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்க நேரிடும் என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கூறியுள்ளது.

இந்த போராட்டத்தின் போது சுமார் 160 தொழிற்சங்கங்கள் இணைந்துகொள்ள உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## நூல்வெளியீடு

விருட்சம் கலைமன்றத்தின் வெளியீட்டில் நிலாமகள் பிரபாசரன் விதுஜாவின் 'முடிவில்லை' நூல் வெளியீடும், எ.ஜெ.எ.புரடெக்ஷன் ஏற்பாட்டில் கலைஞர் கௌரவிப்பும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்குத் திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் இடம் பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாணசபை உறுப்பினர் இமானுவேல் ஆனோல்ட், கௌரவ விருந்தினராக கிருபா உரிமையாளர் அ.கிருபாகரன், சிறப்பு விருந்தினராக ரில்கோ உணவக உரிமையாளர் தவராசா திலகராஜ் ஆகியோர் கலந்து கொள்வர்.

# கூட்டுறவாளரின் மே தினப் பேரணி இம்முறை புதுக்குடியிருப்பில்!

## முதலமைச்சர் கொடி அசைத்து ஆரம்பித்து வைப்பார்

வடக்கு மாகாண கூட்டுறவாளர்களின் மே தினப் பேரணி முல்லை மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு சிவன் கோவில் முன்றிலில் இருந்து பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பேரணியை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கொடியசைத்து ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

மேதினப்பொதுக்கூட்டம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மண்டபத்தில் முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவரும் மே தின ஏற்பாட்டுக் குழுத் தலைவருமாகிய விநாயக மூர்த்தி சர்வானந்தராஜா தலைமையில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பேரணியில் கூட்டுறவாளர்களால் முன்வைக்கப்படவுள்ள கோரிக்கைகள் வருமாறு:-

★கூட்டுறவுச் சங்கங்களுக்கு வரி நீக்கம் செய்யப்படல் வேண்டும்.

★மக்களின் சொத்துக்கள், காணிகள் மக்களிடமே ஒப்படைக்கப்படல் வேண்டும்.

★தமிழ் அரசியல் கைதிகள் விரைவில் விடுவிக்கப்படல் வேண்டும்.

★காணாமற்போனவர்களுக்குச் சரியான முடிவு காணப்படல் வேண்டும்.- என்பனவாகும். (இ)

# குப்பைகளில் இருந்து மின்சாரம்; தயாரிப்பது தொடர்பாக ஆராய்வு!

கொழும்பு, ஏப்.30

எதிர்காலத்தில் குப்பைகளில் இருந்து மின்சாரம் பெறுவது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. குப்பை முகாமைத்துவம் தொடர்பில் எதிர்வரும் காலங்களில் விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் அரசு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவாதத்தின் போதே இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

குப்பையை நீக்கிக் கொள்வது அத்தியாவசிய சேவையாக மாற்றிக் கொள்வதற்கான வர்த்தமானி அனுமதி பெற்றுக்கொள்வதற்காக விசேட நாடாளுமன்ற கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன் போது, மீதொட்டமுல்ல குப்பை மேடு தொடர்பில் விவாதங்கள் இடம்பெற்றன. 6 மாதங்களுக்குள் மீதொட்டமுல்ல குப்பை மேடு அகற்றப்படாதென விவாதங்களின்போது தெரிய வந்துள்ளது.

மீதொட்டமுல்லவில் தொடர்ந்து குப்பை கொட்டப்படும் என்று விவாதத்தில் இணைந்து கொண்ட அமைச்சர் பைஸர் முஸ்தப்பா, தெரிவித்துள்ளார்.

குப்பை கொட்டுவதற்கான வேறோர் இடம் அடையாளம் காணப்படும்வரை, மீதொட்டமுல்லவில் குப்பைகள் கொட்டப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்போதே துறைமுக நகர குப்பைகளைக் கொண்டு மின்சாரம் தயாரிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையில் தொடரும் வறட்சி காரணமாக நீர்நிலைகள் வற்றியுள்ளன. இதன் காரணமாக மின்சார உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் மின்விநியோகம் தடைப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், இவ்வாறான புதிய முயற்சி மூலம் மின்சாரம் பெற்றுக் கொள்ளப்படுமாயின் அது நாட்டுக்கு சாதகமான நிலைப்பாடு என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சியின்

# மனித நேய மே தினத்தில் ராஜித சேனாரத்ன பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஏப்.30

'வடக்கும் தெற்கும் சங்கமிக்கும் மனிதநேய மே தினம்' என்னும் தொனிப்பொருளில் உலக உழைப்பாளர்கள் தினத்தை நாளை திங்கட்கிழமை ஜனநாயக தேசிய முன்னணியுடன் இணைந்து செம்மணி வீதியில் அமைந்துள்ள சங்கிலியன் பூங்கா (கிட்டு பூங்கா) மைதானத்தில் நடத்துவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம் என்று முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

முற்போக்குத் தமிழ்த் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் எஸ்.விஜயகாந் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் ஜனநாயக தேசிய முன்னணியின் போசகரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன, முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சத்துரு சேனாரத்ன ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றவுள்ளனர். (ஐ)

# ஆறு அமைப்புக்கள் ஒன்றிணைந்து யாழ். பல்கலையில் மே தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.30

ஆறு அமைப்புகள் ஒன்றிணைந்து யாழ். பல்கலைக்கழகத்தில் மே தின நிகழ்வுகளை நடத்தவுள்ளன.

இலங்கை ஆசிரியர் சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம், அரச செயற்பாட்டுக் குழு, தமிழ் மக்களின் வாழ்வுரிமைக்கான செயற்பாட்டு மையம், சமூக விஞ்ஞான ஆய்வு மன்றம் ஆகிய ஆறு அமைப்புக்கள் ஒன்றிணைந்து நாளை திங்கட்கிழமை மாபெரும் மே தின நிகழ்வை நடத்தவுள்ளன.

காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றிலில் ஆரம்பமாகும் மே தினப் பேரணி கந்தர்மடம் ஆத்தி சூடி வீதி, பலாலி வீதியூடாகப் பல்கலைக்கழக முன்றிலைச் சென்றடையும்.

அதன் பின்னர் பல்கலைக் கழக முன்றிலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராஜா தலைமையில் மே தினக் கூட்டம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து தொழிற் சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் தலைவர்களின் உரைகள் இடம்பெறும்.

தேசம், இறைமை, சுயநிர்ணய அடிப்படையில் அரசியல் தீர்வை முன்வை, வட-கிழக்குத் தமிழ்மக்களின் பாரம்பரிய தேசம் என்பதை அங்கீகரி, அரசியல் கைதிகளை விடுதலை செய், காணாமற் போனோருக்கு நீதி வழங்கு, மக்களிடம் பறித்த அனைத்து நிலங்களையும் உடனடியாகக் கையளி! உள்ளிட்ட 15 கோரிக்கைகளை முன்வைத்து இந்த மாபெரும் மே தின நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் உழைக்கும் மக்கள், தமிழ்த் தேசிய சக்திகள், முற்போக்கு ஜனநாயக சக்திகள் உட்பட அனைத்துத் தரப்பினரையும் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாக

# காணாமற்போனோரின் உறவினர்கள் 53 ஆவது நாளாகப் போராட்டம்



முல்லைத்தீவு, ஏப்.30

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று 53 ஆவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டனர். நேற்றைய தினம் கோயில்குடியிருப்பு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் போராட்டக் களத்திற்குச் சென்று அந்த மக்களுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

மேற்படி காணாமற்போனோரின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக வீதி ஓரத்தில் கூடாரம் அமைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசாங்கம் தங்களை இதுவரை கண்டுகொள்ளவில்லை என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று அவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கிய கோயில்குடியிருப்பு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி கருத்துத் தெரிவிக்கையில் –

நாங்கள் இன்று ஒருநாள் இந்தத் தகரகொட்டகையில் இருக்கும்போதுதான் இவர்களின் வேதனைபுரிகிறது. இந்த வீதிவழியாக செல்கின்றபோதெல்லாம் இவர்களைப் பார்த்தோம். எமது இரத்தம் கொதித்தது.

அதனால், நாங்களும் இன்று இவர்களுக்கு ஆதரவு வழங்கிப் போராட்டத்தில் கலந்துகொண்டுள்ளோம். இதேபோல, ஏனைய அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களும் ஆதரவு வழங்க வேண்டும். – என்றார். (ம-81)

# யாழ். நகரில் இன்று ஜே.வி.பியின் மே தின ஊர்வலமும் கூட்டமும்

யாழ்ப்பாணம், ஏப். 30

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பியின்) யாழ்ப்பாண மே தின ஊர்வலமும் கூட்டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெறும்.

யாழ். ரயில் நிலையத்துக்கு அருகில் – மூலவைச் சந்தியில் ஊர்வலம் ஆரம்பமாகும். ஊர்வலம் யாழ். முற்றவெளியை அடைந்து அங்கு பிற்பகல் 3 மணியளவில் கூட்டம் இடம்பெறும்.

இன்றைய கூட்டு மே தினக் கூட்டம் மற்றும் ஊர்வலம் மக்கள் விடுதலை முன்னணியுடன் இடதுசாரி அமைப்புகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக ஆசிரியர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், மீனவ சங்கப் பிரதிநிதிகள், மாணவர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடன் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பியின் செய்திக் குறிப்பில் :-

30 வருட கால யுத்தத்தின் வேதனைகளைமட்டும் உணர்ந்திருந்த வடபகுதி மண்ணில் பல தசாப்தங்களுக்குப் பின்னர் உழைக்கும் மக்களின் சக்தியையும் எழுச்சியின் ஓசையையும் கட்டியெழுப்புவதற்காகப் பல தசாப்தங்களாகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவாத, மதவாத, சாதிய ஒடுக்கு முறை, தொழில் ரீதியானவேற்றுமைகள்போன்ற அரண்களைத் தகர்த்தெறிந்து, உழைக்கும் மக்கள் என்ற வகையில் ஒரே மக்கள் அரணாக, மக்கள் சக்தியாகக் கட்டியெழுப்புவதற்காகவும் தேசிய ஒற்றுமையை, சமத்துவத்தைக் கொண்ட சோஷலிச இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காகவும் –

அதன்முதற்கட்டமாக இன்று யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் உழைக்கும்மக்களின்ஊர்வலம் மற்றும் மே தினக் கூட்டத்தில் அனைவரும் குடும்ப அங்கத்தவர்களுடன் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம். – என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## புதுவருட விசேட நிகழ்ச்சி இன்று மாலை கொக்குவிலில்

"டெய்லி பூட்சிசிற்றி" நிறுவனத்தின் புதுவருட விசேட நிகழ்ச்சி, இன்று மாலை 4.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

இந்த விசேட நிகழ்வில் அனைவரும் பங்குகொள்ளலாம் என்று அதன் நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (அ)

## வாகனத்தில் சென்றவர்கள் வைத்தியரைத் தாக்கினர்

டிக்கோயாமாவட்ட வைத்தியசாலையின் வைத்தியர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. டிக்கோயாவிலிருந்து கொழும்புநோக்கி காரில்சென்ற போதே பிரஸ்தாப வைத்தியர் வாகனங்களில் சென்றோரால் தாக்கப்பட்டார் எனத் தெரிய வருகின்றது.

ஹட்டன்நகரிலுள்ள இரண்டு பிரபல பாடசாலைகளின் நட்பு ரீதியான மாபெரும் கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு இடம் பெற்றவாகனபவனியில்சென்றவர்களே நேற்றுக்காலை 10 மணியளவில் வைத்தியரைத் தாக்கினர் என்று பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்காகிய வைத்தியர் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (ம)

# புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் ஐ.நா. சட்டங்களை உள்ளடக்கியதாம்

**விரைவில் நடைமுறைக்கு வரும் என்கிறது அரசு**

புதிய பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு அரசாங்கத்தின் அனுமதிகிடைக்கப்பெற்றுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

இந்த புதிய தடைச்சட்டம் விரைவில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளதுஎனவும் ஐக்கிய நாடுகள் சபையின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப இது தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

தற்பொழுது அமுலில் உள்ள பயங்கரவாதத்தடைச்சட்டம், எதிர்வரும் நாள்களில் மாற்றப்படும் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அரசாங்கம் அறிவித்துள்ளது. புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம் பல தடவைகள் சீர்திருத்தத்துக்கு உட்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பழையபயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் முன்னாள் புலி உறுப்பினர்கள் 96 பேரும், பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடையதாக கைது செய்யப்பட்ட சிங்களவர்கள் 5 பேரும் தற்போதும்தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் எனக்கூறப்படுகின்றது. (ம)

## நெல்லியடி வர்த்தக நிலையங்களுக்கு நாளை விடுமுறை

நெல்லியடி, ஏப். 30

சர்வதேச தொழிலாளர் தினமாகிய நாளை திங்கட்கிழமை நெல்லியடி வாணிபர் கழகத்திற்கு உட்பட்ட சகல வர்த்தக நிலையங்களுக்கும் விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது என நெல்லியடி வாணிபர் கழகம் தெரிவித்துள்ளது.

எனவே, அனைத்து வர்த்தகர்களும் தமது வர்த்தக நிலையங்களைப்பூட்டுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ம)

# பொதுமக்களின் உயிர்களில் அக்கறையின்றி வாகனம் ஒன்றைத் துரத்திச்சென்ற பொலிஸார்

**பருத்தித்துறையில் நேற்றிரவு சம்பவம், மக்கள் கடும் விசனம்**

பொதுமக்களின்உயிர்களைப் பொருட்படுத்தாமல் வாகனம் ஒன்றைத் துரத்திச் சென்ற பருத்தித்துறைப் பொலிஸாரின் செயல் குறித்து பொதுமக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

நேற்றிரவு 7.15 மணியளவில், சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற ஹன்ரர் வாகனம் ஒன்றைப் பொலிஸார் மறித்தபோது அது நிற்காமல் துன்னாலை ஊடாகத் தப்பிச் சென்றது.

இதனால் பொலிஸார் அந்த வாகனத்தைத் துரத்திச் சென்றனர். வாகனத்தின் விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டு அது மிக வேகமாகத் தப்பிச் சென்றபோதிலும் பொலிஸார் விடாமல் துரத்திச் சென்றனர்.

அந்த வாகனத்தைக் கண்ட பொதுமக்கள் தமது வாகனங்களை விட்டு இறங்கி வீதிகளில் ஓரமாக நின்றனர் எனவும் இதனால் விபத்துக்கள் தடுக்கப்பட்டன எனவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

பொதுமக்களின் உயிர்களைப் பொருட்படுத்தாமல் மேற்படி வாகனத்தைத் துரத்திச் சென்ற பொலிஸாரின் செயல் குறித்து பலரும் விசனம் வெளியிட்டுள்ளனர். (ம-40)

துன்னாலை கோஷ்டி மோதல் சம்பவம்:

# பிரதான சந்தேகநபரின் மனைவி நேற்று பொலிஸாரால் கைது!

நெல்லியடி, ஏப். 30

துன்னாலைப் பகுதியில் கோஷ்டி மோதலில் ஈடுபட்ட பிரதான சந்தேக நபரின் மனைவியைத் தாம் கைதுசெய்துள்ளனர் என நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பகுதியில் கடந்த வாரம் கோஷ்டி மோதல் ஏற்பட்டமையை அடுத்து வாள் வெட்டுக்கு இலக்கான நிலையிலும், அடிகாயங்களுக்கு இலக்கான நிலையிலும் ஏற்கனவே ஆறு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

பருத்தித்துறை நீதிவானின் கடும் உத்தரவுக்கமைய சிலர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டபோதிலும் பிரதானசந்தேகநபர் இதுவரை கைதுசெய்யப்படவில்லை.

இந்நிலையில் நேற்று மாலை காங்கேசன்துறைப் பிராந்தியத்தில் உள்ள வேறு பொலிஸ் நிலையங்களில் இருந்து மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டு துன்னாலைப் பகுதியில் பெரும் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதான சந்தேக நபர் தப்பிய நிலையில் அவரின் மனைவியைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதனால் நேற்று மாலை நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பகுதியில் பெருமளவான மக்கள்கூடிநின்றதைக் காணக் கூடியதாக இருந்தது. (ம-40)

# புளியம்பொக்கணை நாகதம்பிரானுக்கு பஞ்சதளம் கொண்ட இராஜ கோபுரம்

**நாளை அடிக்கல் நடும் நிகழ்வு**

கிளிநொச்சி, ஏப். 30

வரலாற்றுச் சிறப்பு மிக்க கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய இராஜ கோபுர நிர்மாணத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை 10 மணிக்கு பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

இந்த அற்புத இராஜகோபுரம் சிற்பக் கலை அம்சங்கள் மற்றும் வரலாற்று அம்சங்களுடன் 55 அடி உயரம் கொண்டதாக அமையப்பெறும் என்று ஆலய பரிபாலன சபை உறுப்பினர் எஸ்.சுவாமிநாதன் காலைக்கதிருக்குத் தெரிவித்தார்.

இந்தியச் சிற்பக் கலைஞர் புருசோத்தமன் குழுவினரின் கைவண்ணத்தில் இந்த பஞ்சதள கோபுரம் அமைக்கப்படும்.

இந் நிலையில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன், நல்லை ஆதீன குருமுதல்வர் திருஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் ஆலய தர்மகர்த்தாக்கள், குருமார்கள் உட்பட பக்தர்கள் எனப் பலர் கலந்து கொள்வர். (இ-22)



சர்வதேச நடனதினத்தை முன்னிட்டு யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற ஆடல் அரங்கம் நிகழ்வின் சில காட்சிகள். (ம)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## மைத்திரியும் அதே வழியிலா?

"ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதாகத் தெரிவித்து, ஆட்சிக் கட்டுக்கு வந்த நல்லாட்சி அரசு, சர்வாதிகாரப் போக்கில் செல்கின்றது. அதன் அஸ்தமன காலம் தொடங்கிவிட்டது".

- இப்படித் தெரிவித்திருக்கின்றார் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து, நாடாளுமன்றத்துக்குப் பதில் கூறக் கூடிய பிரதமரின் கீழான ஆட்சி முறையை ஏற்படுத்துவோம் என்று தெரிவித்து, ஆட்சிக்கு வந்த இந்த அரசு, இப்போது சர்வாதிகாரத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. மக்களின் பொதுப் பிரச்சினையை பலாத்கார முறையில் அடக்குவதற்கு அது திட்டமிடுகின்றது எனவும் அவர் குற்றம் சுமத்துகின்றார்.

குப்பை அகற்றல் விடயம் மக்களின் சிரத்தைக்குரிய விவகாரம். அது சம்பந்தமாகத் தமது கருத்துணர்வை ஜனநாயக வழிகளில் வெளிப்படுத்துவதற்குரிய உரிமை மக்களுக்கு உண்டு. மீதொட்ட முல்ல அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அப்பாவிப் பொதுமக்கள்தான். என்ன நடந்தது என்பது புரிவதற்கு இடையில், வீடுகளில் இருந்து அப்பாவிகள் 33 பேர் புதையுண்டு இறந்த போனார்கள். எனவே, அந்த அச்சம் காரணமாக, தமது பிரதேசத்தில் குப்பை கொட்டப்படும் என அறியும் மக்கள் கொதித்து எழுகின்றமை தவிர்க்க முடியாததே.

கொழும்பு உட்பட பிரதான நகரங்களில் காணப்படும் குப்பைகளை அகற்றுவதற்கும் சேர்த்துத்தான் மக்கள் வரிப்பணம் செலுத்துகின்றனர். எனவே, குப்பை அகற்றல் செயற்பாட்டில் அவர்களின் கருத்து உள்வாங்கப்பட்டு, அவர்களின் அச்சம் நீக்கப்பட வேண்டும்.

அதற்கு வழி, அவர்களுடன் கலந்துரையாடுவதும் அவர்களுக்குத் தெளிவுபடுத்துவதுமாகும்.

அதைவிடுத்து, குப்பை அகற்றல் மற்றும் கொட்டுதல் தொடர்பான சேவையை அத்தியாவசியச் சேவையாகப் பிரகடனப்படுத்தி, அதற்கு எதிராகத் திரளும் மக்கள் மீது அதிகாரத்தை ஏவிவிடுவதற்கு வழி செய்யும் வர்த்தமானி அறிவித்தலை அவசர அவசரமாக வெளியிடுவதும், அத்தகைய நடவடிக்கைகளைக் கையாள முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தலைமையில் தனிப்படைப் பிரிவு அமைக்க முயல்வதும் பொருத்தமான நடவடிக்கைகளே அல்ல.

இத்தகைய நடவடிக்கைகள் எதேச்சாதிகாரத்துக்கும் சர்வாதிகாரத்துக்குமே வழி வகுக்கும்.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியமை போல, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதாக வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த இந்த அரசு, அதற்கு மாறாக அந்த நிறைவேற்று அதிகாரத்தை மேலும் கூர்மைப்படுத்துவதாகவே இந்த நடவடிக்கை அமையும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை முற்றாக நீக்குவோம் என்று தேர்தல் கால வாக்குறுதியை அளிப்பதும், அந்த வாக்குறுதி மூலம் ஜனாதிபதி பதவியை எட்டிப்பிடிப்பதும், அதன் பின்னர், அந்தப் பதவியை முழு அளவில் ருசித்து, ரசித்து, அனுபவித்து விட்டு, மற்றொரு பதவிக்காலத்துக்கும் அப்பதவியில் தொடர்ந்து விட்டு, அந்த ஆட்சி முறைமையை நீக்குவதற்கு ஏதும் செய்யாமல் விலகிச் செல்வதும் இலங்கையில் ஒரு வழக்கமாகி விட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதைத்தான் செய்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதனை இன்னும் மோசமான முறையில் செய்தார்.

2005 இல் முதல் ஜனாதிபதி தேர்தலைத் தாம் சந்தித்த போது, அந்த ஒரு தடவையோடு நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறைமையை அடியோடு ஒழிப்பார் என எழுத்து மூலம் அவர் வாக்குறுதி வழங்கினார்; ஒப்பந்தம் செய்தார்.

ஆனால், முதல் தேர்தலில் வென்றதும் அந்த வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டார். இரண்டாவது தடவையும் தேர்தலில் நின்று வென்றார். வென்றதும் எத்தனை தடவையும் தாம் ஜனாதிபதியாக வரக்கூடிய விதத்தில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அரசமைப்புச் சட்டத்தையே மாற்றினார்.

அதிஷ்டவசமாக மைத்திரி - ரணில் கூட்டு அவரை வீட்டுக்கு அனுப்பி, அவர் கொண்டு வந்த அரசமைப்புச் சட்டத் திருத்தத்தையும் மாற்றி அமைத்தது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் செய்த தவறையே இப்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னெடுக்கின்றாரோ என்ற பென்னம் பெரு சந்தேகம் எழுந்துள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்குவது தொடர்பில் தமது ஜனாதிபதித் தேர்தல் காலத்திலும், அதிகாரத்துக்கு வந்தவுடனும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பேசிய பேச்சுக்கும், வெளிப்படுத்திய - பிரதிபலித்த - கருத்து நிலைப்பாட்டுக்கும் இப்போது அவ்விடயத்தில் அவர் காட்டும் ஈடுபாட்டுக்கும் இடையில் நிறையவே வித்தியாசங்கள் இருக்கின்றமை துலாம்பரமாகத் தெரிகின்றது.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் கூறுகின்றமை போல, முன்னைய ஜனாதிபதி வழியில் மைத்திரிபால சிறிசேனவும் சர்வாதிகாரத்தை நோக்கி நகர்கின்றாரா? காலம் விரைவில் அதற்குப் பதில் கூறும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு ஐ.தே. கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. எல்லாம் தயார். அது நடந்தால்தான் சு.க.வின் தலைமைப் பதவிக்கு சுலபமாகத் தாம் வரமுடியும் எனக் கருதுகின்றார் மஹிந்த ராஜபக்ஷ. அதனால் அவரது கூட்டு எதிரணியும் கூட அதற்கு நிச்சயம் இணங்கும். மைத்திரிபால தமது பதவி ஆசையை விட்டுக் கொடுப்பாராயின், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது அவ்வளவு ஒன்றும் கஷ்டமே அல்ல.

# பாதிக்கப்பட்ட மக்களின் காணிகளின் உரிமை தொடர்பான செயற்பாடு தேவை

## இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி உனா மெக்குலே தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.30

பாதிக்கப்பட்ட மக்களின் காணிகளின் உரிமை தொடர்பான செயற்பாடுகள் அடையாளம் காணப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி உனா மெக்குலே தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மக்களது காணிகள் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டியது அவசியம். அவ்வாறு காணிகளை மீள வழங்க முடியாவிடின் காணி உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படவேண்டும் என்பதுதான் ஐக்கியநாடுகள் சபையின் நிலைப்பாடு.

நல்லிணக்க செயற்பாடுகளை அடையாளம் காணும் விடயத்தில் இலங்கை அரசுடன் ஐக்கிய நாடுகள் சபை செயற்பட்டு வருகின்றது.

அந்த வகையில் நல்லிணக்கச் செயற்பாடுகளில் காணிகளை விடுவிக்கும் காரணியானது மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

அதாவது சமூகங்களுக்கு மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதில் இந்தக் காரணி முக்கிய பங்காற்றும்.- என்றார். (ஐ)

# வடக்கு மீனவரின் ஒப்புதலுடனேயே இந்தியப் படகுகள் விடுவிக்கப்படும்

## அமைச்சர் மஹிந்த அமரவீர கூறுகிறார்

கொழும்பு, ஏப்.30

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகள் வடக்கில் உள்ள மீனவ சங்கங்களின் ஒப்புதலுடனேயே விடுவிக்கப்படும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர மீண்டும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் படகுகள் இலங்கை கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும்போது, தமிழக மீனவ படகுகளை விடுவிப்பது தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொள்ள அரசு தீர்மானிக்கவில்லை.

வடக்கில் உள்ள மீனவ சங்கங்களின் ஒப்புதலுடனேயே, தமிழக மீனவர்களின் படகுகள் விடுவிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# அதிக வருவாய் ஈட்டியுள்ளது வேலை வாய்ப்புப் பணியகம்

வரலாற்றில் முதல் முறையாக இலங்கையின் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அதிகளவு வருமானத்தை ஈட்டியுள்ளது என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சமகாலத்தில் 120 கோடி ரூபா இலாபத்தை பெற்றுள்ளது என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரல தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, 45 சதவீதம் வருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

2015 ஆம் ஆண்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் வருமானம் சுமார் 34 கோடி என்றும் 2016ஆம் ஆண்டு 64 கோடி என்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரல குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் முறையான திட்டமிடல் இல்லை

## தினேஷ் குணவர்தன எம்.பி. விசனம்

கொழும்பு, ஏப்.30

அனர்த்த நிலைமைகளின் போது முகங்கொடுக்கும் விதத்தில் சரியான திட்டங்கள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன கூறியுள்ளார்.

குப்பைகளை அகற்றுவது சம்பந்தமாக மற்றும் மீதொட்ட முல்ல குப்பைமேடு சம்பந்தமாக நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் குப்பை அகற்றுவதை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் விடுக்கப்பட்ட உத்தரவு தொடர்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் கருத்துரைத்த அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க, கழிவு முகாமைத்துவத்துக்காகப் பொறுப்புள்ள நிறுவனம் ஒன்றின் தேவை அவசியம். வைத்திய சாலைகளின் மருத்துவக் கழிவுகள் தொடர்பிலும் கவனம் எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (ஐ)




விபத்தற்ற பயணமே விருப்பத்துக்குரிய பயணம்!

கணப்பொழுதில், கணபேர் உயிரிழப்பது ஜீரணிக்க முடியாத பெருந்துன்பம்!

மற்றைய வாகனங்களுடன் போட்டியிட்டு ஓடுவதற்கு வீதி ஒன்றும் விளையாட்டுத் திடல் அல்ல என்பதை மனத்தில் கொள்வோம்! எமது சாரதியத்தால் உயிரிழப்பு ஏற்படின் சிறையில் இருக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதை மனத்தில் கொள்வோம்!

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை/ மாநகரசபை, யாழ்ப்பாணம்.


## நாளை

01.05.2017
திங்கட்கிழமை

நட்சத்திரம்: பரணி மா. 6.25 வரை
திதி: பிரதமை பி.ப. 4.06 வரை

சுபநேரம்: 7.29 - 8.59 வரை
இராகுகாலம்: 1.29 - 2.59 வரை

# விடுதலைப் புலித் தலைவர்களுக்கு ஐ.நா. அகதி அடையாள அட்டை!



கொழும்பு, ஏப். 30

நாட்டை விட்டு தப்பிச் சென்ற விடுதலைப் புலித் தலைவர்களுக்கு ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர்நிறுவனம் அடையாள அட்டை வழங்கியுள்ளது.

நாட்டை விட்டு தப்பிச் சென்ற சுமார் 50 புலித் தலைவர்களுக்கு இவ்வாறு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

சுவிற்சர்லாந்து, ஜேர்மன், பிரான்ஸ், பிரித்தானியா, நோர்வே மற்றும் மலேஷியா ஆகிய நாடுகளில் குறித்த புலித் தலைவர்கள் தங்கியுள்ளனர்.

இவ்வாறு புலித் தலைவர்களுக்கு அகதி அடையாள அட்டை வழங்கிய விவரங்கள் பற்றிய தகவல்களை வழங்க ஐக்கிய நடுகள் அமைப்பு மறுத்து வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வான்படைப் பிரதித் தலைவர் குசாந்தன் என்பவருக்கு இவ்வாறான ஓர் அடையாள அட்டை வழங்கப்பட்டதனால் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்தின் அகதி அந்தஸ்துடைய அடையாள அட்டை வழங்கப்பட்ட எந்தவொரு புலித் தலைவரையும் கைது செய்து இலங்கைக்கு கொண்டு வர முடியாது என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# இரவு நேர விடுதியில் மோதல்; இளைஞர் ஒருவர் வெட்டிக் கொலை!

கொழும்பு, ஏப். 30

தலங்கம பகுதியிலுள்ள இரவுநேர விடுதியில் ஏற்பட்ட மோதலில் இளைஞர் ஒருவர் வெட்டி கொலை செய்யப்பட்டுள்ளார்.

தலவத்துகொட பகுதியில் அமைந்துள்ள இரவு நேர விடுதியில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட மோதலிலேயே இளைஞர் வெட்டி கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துருகிரிய மஹஜன மாவத்தையை சேர்ந்த எல்லகொட கமகே இசுரு சம்பத் எனப்படும் லொக்கு பர்டி என்ற 25 வயதுடைய இளைஞரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.



முச்சக்கர வண்டிச் சாரதியாக செயற்படும் இந்த இளைஞர் கடந்த 27ஆம் திகதி இரவு நண்பர்களுடன் தலவத்துகொட பிரதேசத்தில் உள்ள இரவு நேர விடுதிக்குச் சென்றிருந்தார்.

இந்நிலையில், அங்கு ஏற்பட்ட வாய்த்தகராறு முற்றியமையினால் அதிகாலை 3.10 மணியளவில் விடுதியை விட்டு வெளியே வந்த சந்தர்ப்பத்தில் சிலரினால் கூர்மையான ஆயுதத்தால் அவரது ஒரு கால் வெட்டப்பட்டுள்ளது.

காயத்துடன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு முயற்சித்த போது அவரை துரத்தி சென்று மற்றைய காலையும் வெட்டியுள்ளனர்.

காயமடைந்தவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பழைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் சில குழுக்களினால் இந்த இளைஞர் இரவு நேர விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு இவ்வாறு வெட்டி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இந்த அடிப்படையில் விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# இலங்கையின் ஒரு பகுதி இந்தியாவிடம் என்று கூறுகிறார் மஹிந்த!

கொழும்பு, ஏப். 30

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின்போது இந்தியாவுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் ஊடாக நாட்டின் ஒரு பகுதி இந்தியாவுக்கு ஒப்படைக்கப்படுகின்றது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணம் குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இப்போது இந்த அரசால் நாடு விற்கப்படும் விதத்தைப் பாருங்கள். இந்தியாவுடன் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் மற்றும் துறைமுகம் போன்றவை இந்தியாவுக்குக் கொடுக்கப்படுகின்றன.

இதனூடாக நாட்டின் ஒரு பகுதி இந்தியாவிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்படுகின்றது. இந்தத் திட்டத்தை அமைச்சர்கள் பலரும் எதிர்த்துள்ளனர்.

நாம் நடத்தும் மே தினக் கூட்டத்தில் இதற்கான பெரும் எதிர்ப்பை மக்கள் வெளிப்படுத்துவார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பலரும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். வரலாற்றில் பதியப்படும் மே தினக் கூட்டமாக இந்தக் கூட்டம் அமையும் .- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


# நொதேண் சென்றல் வைத்தியசாலை

**யாழ்ப்பாணத்தில் நவீன தொழில்நுட்பத்துடனான அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரே ஒரு வைத்தியசாலை**

லப்பராஸ்கோபி (Laparoscopy) என்றால் என்ன?

வயிற்று உட்பகுதியுறுப்புக்களை வயிற்றில் சிறிய துளைகளிட்டு மெல்லிய குழாயினை உட்செலுத்தி பரிசோதிக்கும் ஒரு தொழில்நுட்பமாகும்.

வழமையான சத்திரசிகிச்சையிலிருந்து லாப்ரோஸ்கோபி எவ்வாறு வேறுபடுகின்றது?

- பெரிய வெட்டுக்காயங்கள் வராது
- சத்திர சிகிச்சையின் பின்னர் விரைவில் இயல்பு நிலைக்குச் செல்லமுடியும்
- கிருமித்தொற்றுகள் ஏற்படும் வாய்ப்புகள் மிகக்குறைவு
- நீண்ட நாள்களாக வைத்தியசாலையில் தங்கியிருக்கத் தேவையில்லை


பின்வரும் உடற்பரிசோதனைகளுடன் சத்திர சிகிச்சைகளையும் இத்தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி செய்துகொள்ளலாம்.

- Appendicectomy
- Diagnostic laparoscopy
- Cholecystectomy
- Hernia
- Hydrocele
- Paraumblical hernia
- Inguinal hernia
- Endometriosis
- Laparoscopic Radical Trachelectomy (LRT)
- Ovarian cyst



வெரிகோஸ் வெயின் (Varicose vein) பிரச்சினையிலிருந்து உடனடித் தீர்வு!

- உங்களுக்கு அவ்வப்போது கால் பகுதியில் வலியும்,வேதனையும், குடைச்சல் போன்ற உணர்வும் ஏற்படுகின்றதா?
- இதனை நீங்கள் அலட்சியப்படுத்துபவரா?
- உங்களுக்கு இவ்வறிகுறிகள் இருப்பின் அது வெரிக்கோஸ் வெயின் (Varicose vein) என்ற நோய்நிலையாகவும் இருக்கலாம்.




கவலை வேண்டாம்!
வெரிகோஸ் வெயின் பிரச்சினையிலிருந்து உடனடித் தீர்வு!
நொதேண் சென்றல் வைத்தியசாலையில் இப்பொழுது அதி நவீன லேசர் தொழில்நுட்பம்!

வெட்டுக்காயங்களின்றி, குறுகிய நேரத்தில் சிகிச்சை பெற்றுக்கொள்வதுடன் வைத்தியசாலையில் தங்கியிருக்கத் தேவையில்லை.

நொதேண் சென்றல் கண் சிகிச்சை மையம்
Northern Central Hospital EYE CARE

- வடக்கின் முன்னணி கண் சத்திரசிகிச்சை வல்லுநர்களின் ஆலோசனைகள்
- இலவச கண் பரிசோதனைகள் (Vision testing)
- பார்வைச் சக்திக்குரிய சோதனை (Optical biometry)
- காலதாமதமின்றிய சத்திரசிகிச்சை முற்பதிவுகள்
- Cataract சத்திரசிகிச்சைக்கு வேண்டிய உயர்தர லெனஸ் மற்றும் அனைத்து பொருள்களும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே இடம்.
- நவீன லேசர் முறையில் மிகக் குறுகிய நேர சத்திரசிகிச்சை
- சத்திரசிகிச்சையின் பின் வைத்தியரின் ஆலோசனை தவிர விடுதியில் தங்கியிருக்கத் தேவையில்லை

(C/375)





**Northern Central Hospital**
342, Palaly Road, Thirunelvely, Jaffna.
T.P: 021 221 9988, 021 221 9977, 021 222 2263 Fax: 021 221 6677
E-mail: nchjaffna@gmail.com Website: www.nchjaffna.com

# சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் தலைமைகள் இணைந்து செயற்படுகின்றமை வரவேற்கத்தக்கது!

## மாயக்கல்லி விவகாரம் தொடர்பில் ஜனாதிபதியுடனான சந்திப்பில் சாதகமான தீர்மானங்கள் என்கிறார் கிழக்கு முதலமைச்சர்

சிறுபான்மையினருக்கான நலன்களுக்குத் குந்தகம் ஏற்படுகின்றபோது தமிழ், முஸ்லிம் தலைமைகளான எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் ஒன்றிணைந்து செயற்படுகின்றமை வரவேற்கத்தக்க விடயம்.

-இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அம்பாறை, இறக்காமம் மாயக்கல்லி மலை விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கிடையிலான சந்திப்பில் பல்வேறு சாதகமான தீர்மானங்கள் எட் டப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் மாணிக்கமடு மாயக்கல்லிமலை விவகாரம் தொடர்பில் பேசப்பட்டது. இறக்காமம் மாணிக்கமடு மாயக்கல்லி மலையை அண்டிய பகுதியில் சிறுபான்மையினரின் காணிகளே உள்ளன. அவர்களின் காணி உறுதிகள் உள்ளிட்ட ஆவணங்கள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன. இது தொடர்பில் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

கிழக்கில் சிறுபான்மையினரின் காணி ஆக்கிரமிப்புக்கள், அத்துமீறல்கள் தொடர்பிலும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இதன்போது ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தார்.

மேலும், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் மாணிக்கமடு தொடர்பில் ஜனாதிபதியிடம் பல அழுத்தமான கோரிக்கைகளை விடுத்தனர்.

இவ்வாறான தருணங்கள் சிறுபான்மையின அரசியல் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட



வேண்டியவை ஆகும். தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள் இணைந்து குரல் கொடுப்பதன் ஊடாக பல வெற்றிகளை ஈட்ட முடியும். -என்றார். (ச)

## தமிழ் மக்களின் பலத்தை மே தினக் கூட்டத்தில் உறுதி செய்ய வேண்டும்!

ஆலையடிவேம்பு,ஏப்.30



அம்பாறை மாவட்டத்தில் நடைபெறவுள்ள மே தினக்கூட்டத்தில்தமிழ்மக்கள் அனைவரும் பங்கேற்று தமது பலத்தை மீளவும் உறுதிசெய்யவேண்டும். இது காலத்தின் தேவை.

-இவ்வாறு அம்பாறை மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அக்கரைப்பற்று தர்ம சங்கரி மைதானத்தில் நடைபெற்ற சித்திரைப் புத் தாண்டு விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியத்துவம் வாய்ந்த தேசிய மே தினக் கூட்டம் அம்பாறை மாவட்டத்தில் நடத்துவதற்கான சந்தர்ப்பம் எமக்கு கிடைத்துள்ளது. இந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். இதில் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பல செய்திகளை எதிர்பார்க்கின்றோம்.

இதேவேளை, தமிழ், சிங்களப் புத்தாண்டு கொண்டாட்டங்களை கொண்டாட முடியாமல் நாம் பயந்து ஒடுங்கியிருந்த காலம் போய், புத்தாண்டை சிறப்பாக கொண்டாடக் கூடிய நிலை தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலை ஏற்படுத்திக் கொடுத்த இந்த அரசுக்கு நாங்கள் நன்றி கூற வேண்டும். இங்கு இன, மத,மொழி வேறுபாடின்றி அனைவரும் ஒற்றுமைப்பட்டு இந்த நாட்டுக்கு உகந்த நற்பிரஜைகளாக வாழ வேண்டும். -என்றார். (ச)

## மதில் சரிந்து விழுந்து சிறுமி சாவு!

ஏறாவூர்,ஏப்.30

ஏறாவூர்பொலிஸ்பிரிவுக்குட்பட்ட ஏறாவூர் 4 ஆம் குறிச்சியிலுள்ள வீட்டு மதில் சரிந்து விழுந்ததில் ஏழு வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று சனிக்கிழமை பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் படமாளிகை வீதியைச் சேர்ந்த சண்முகராசா ஷாருக்கா (வயது-7) என்ற சிறுமியே உயிரிழந்தவர் ஆவார்.

பிரஸ்தாப சிறுமியும் அவரது சகோதரனும் விளையாடிக் கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. மேற்படி மதில் கடந்த 4 நாள்களுக்கு முன்னர்தான் கட்டி முடிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமடைந்த சிறுமியை ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதும், ஏற்கெனவே அவர் உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலையில் கடமையிலிருந்த வைத்திய உத்தியோகத்தரால் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ச)

## மட்டக்களப்பில் மரமுந்திரிக்கு கிராக்கி!

மட்டக்களப்பு மாவட்டத்தில் வரலாற்றில் என்றுமில்லாதவாறு மரமுந்திரிகைப் பழங்களுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

மரமுந்திரிகை அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில், மிகவும் அதிக விலைக்கு மரமுந்திரிகைப் பழங்கள் விற்பனையாகின்றன. சாதாரணமாக இரண்டு ரூபா முதல் மூன்று ரூபா வரை விற்பனையான ஒரு பழம், தற்போது 10 ரூபாவாக உயர்ந்துள்ளது. 10 பழங்களைக்கொண்ட ஒரு பை மரமுந்திரிகைப் பழம் 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இம்முறை மட்டக்களப்பில் பருவ மழை இன்மை மற்றும் அதிக வெப்பம் என்பன காரணமாக மரமுந்திரிகை உற்பத்தியில் விளைச்சல் மிகக் குறைவாக உள்ளமையே இதற்குக்காரணம் என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ச)



மட்டக்களப்பு ஓட்டமாவடி மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்று சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன், மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட், நாடாளுமன்ற உறுப்பினர்களான அலிஸாஹிர் மௌலானா, சீ.யோகேஸ்வரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.சுபைர் மற்றும் சிப்லி பாறூக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களையும், 3 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட பாடசாலை நிர்வாகக் கட்டடத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திறந்து வைக்கின்றமையையும், மாணவர்களின் புத்தாக்க காட்சிகளையும் படங்களில் காணலாம்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது!

திருகோணமலை,ஏப்.30

திருகோணமலையில் ஹெரோயின் வைத்திருந்த ஒருவரைப் பிராந்திய போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் நேற்று சனிக்கிழமை கைதுசெய்தனர்.

இவரிடம் இருந்து 120 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

திருகோணமலை சமுத்திராகம பிரதேசத்தைச் சேர்ந்தவரே கைது செய்யப்பட்டவர் ஆவார்.

பிரஸ்தாப நபர் மேலதிக விசாரணைக்காக திருகோணமலைத் தலைமையகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜனோசன் தெரிவித்தார். (ச)

# ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை எதிர்வரும் 15 ஆம் திகதி கிடைக்கும்!

## பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 30

இலங்கைக்கு மறுக்கப்பட்டிருந்த ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதி உத்தியோகபூர்வமாக உறுதிசெய்யும் என்று எதிர்பார்க்கிறோம் எனவெளிவிவகார பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

மனித உரிமை விடயங்கள் முறையாக கையாளப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்த ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை கடந்த 2010ஆம் ஆண்டு,ஐரோப்பிய ஒன்றியம் இடைநிறுத்தியது.

இதனால், நாட்டிற்கு 150 தொடக்கம் 200 மில்லியன் யூரோ வருமானம் இழக்கப்பட்டது.

இந்த நிலையில், ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை இலங்கைக்கு மீண்டும் வழங்குவது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பு குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சில் நடத்தப்பட்டது.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கைக்கு ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை வழங்கப்படக் கூடாது எனும் பிரேரணைக்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றத்தில்வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் 751 நாடாளுமன்ற உறுப்பினர்களில் பிரேரணையை எதிர்த்து 436 பேரும் பிரேரணைக்கு ஆதரவாக 119பேரும்வாக்களித்தனர். மேலும் 22 பேர் வாக்களிப்பிலிருந்து விலகியிருந்தனர்.

இலங்கை அரசு மீது ஐரோப்பிய ஒன்றியம் கொண்டுள்ள நம்பிக்கையின் வெளிப்பாடாகவே இந்த வெற்றி எமக்குக் கிடைத்துள்ளது. இலங்கைக்கு எதிராக வாக்களித்த நாடுகள் இலங்கை அரசு மீது எவ்வித தனிப்பட்ட ஆதங்கங்களையும் கொண்டிருக்கவில்லை.

அவை தமது உள்நாட்டுப் பிணக்குகள் மற்றும் வலுவான கம்யூனிஸக் கொள்கை போன்ற காரணங்கள் காரணமாகவே தமது பாரம்பரிய வாக்கெடுப்பு முறைப்படியே எதிர்த்தோ அல்லது வாக்கெடுப்பிலிருந்து விலகியோ இருந்தன.

உலகவங்கியின்நடைமுறை விதிகளுக்கு அமைவாக மூன்றாம் உலக நாடுகளின் தனிநபர் வருமானம் 4, 036 யூரோ அடிப்படையில் குறைவடைந்துள்ளமையைக் காரணம் காட்டியே இலங்கைக்கு ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை கிடைக்கப்பெற்றது.

இழக்கப்பட்ட ஜீ.எஸ்.பி வரிச்சலுகை மீளக் கிடைத்தாலும் ஆகக்கூடியது மூன்று வருடங்களுக்கு மட்டுமே இந்த வரிச்சலுகை இலங்கைக்கு கிடைக்கும். நாட்டின் ஏற்றுமதி அதிகரித்து தனி நபர் வருமானம் கூடியதும் ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் இலங்கைக்கு இச் சலுகையை வழங்காது என்பதனால் இதற்கான வேலைகளை ஆரம்பிக்கு மாறுபிரசல்ஸிலுள்ளஇலங்கைத் தூதுவருக்கு நான் ஆலோசனைகளை வழங்கியுள்ளேன்.

இந்தச் சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி அடுத்த கட்டமாக ஐரோப்பிய ஒன்றியத்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கானகளத்தை உருவாக்கும் முயற்சியில் இலங்கை அரசு கவனம் செலுத்தவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து எதிர்வரும் இரண்டு வருடங்களில் பிரித்தானியா விலகிச் செல்லும். இதனால், பிரித்தானியாவின் ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்டு, வேறு வர்த்தக ஒப்பந்தங்களை முன்னெடுப்பது தொடர்பில் அரசு ஆராயும்.

பொருளியல் இராஜதந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு நாடுகளை ஒன்றிணைப்பதற்காக இலங்கை அரசு பெரிய திட்டங்களை தீட்டியுள்ளது.

சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கை வழங்குவதற்கு முன்னதாக ஜீ.எஸ்.பி பிளஸ் மூலம் கிடைக்கும் இலாபத்தின் குறிப்பிட்ட சதவீதத்தைத் தொழிலாளிகளுக்கு வழங்குவதற்கு உடன்படுமாறு இலங்கையை நிர்ப்பந்தித்தனர்.

அச்சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட தீர்மானத்தையோ பொய் வாக்குறுதிகளையோ வழங்க நான் விரும்பாதமையால் அவற்றுக்கு உடன்பட மறுத்து விட்டேன்.- என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# திருகோணமலையில் அமெ. கடற்படை முகாம்!

## நாம் ஆபத்தை எதிர்கொள்கின்றோம் என்கிறார் முன்னாள் அமைச்சர் விதாரண



கொழும்பு, ஏப். 30

திருகோணமலையில் கடற்படை முகாம் ஒன்றை அமைப்பதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளது என்று முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தியா அமெரிக்காவுடன் அணு ஆயுத ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது. அணு உற்பத்திக்குத் தேவையான யுரேனியத்தை இந்தியாவுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு அமெரிக்கா இந்த ஒப்பந்தத்தின் ஊடாக இணங்கியுள்ளது. அதன் அடிப்படையில் இந்த இரண்டு நாடுகளும் இராணுவ மட்டத்திலும் ஒப்பந்தம் செய்துள்ளன.

இதனை அப்படையாகக் கொண்டு பல நடவடிக்கைகளை இந்த இரண்டு நாடுகளும் மேற்கொண்டு வருகின்றன. இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான இடமாக இருப்பது திருகோணமலை துறைமுகம் தான். இந்தத் துறைமுகத்தைக் கைப்பற்றும் நடவடிக்கையில்தான் இந்த இரண்டு நாடுகளும் ஈடுபட்டுள்ளன.

இலங்கை கடற்படையினருக்கு பயிற்சி வழங்குதல் என்ற போர்வையில் அமெரிக்க கடற்படையினர் இலங்கைக்குள் நுழையவுள்ளனர். திருகோணமலை துறைமுகத்தை அடிப்படையாகக்கொண்டே இந்தப் பயிற்சி நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

இலங்கையும் அமெரிக்காவும் இதற்கான இணக்கப்பாட்டை எட்டியுள்ளன என்று ஓரிரு மாதங்களுக்கு முன் ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

சர்வதேச சக்திகள் இன்று இலங்கைக்குள் மிக இலகுவாக நுழைந்து அதன் தேவையை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு இடங்கொடுத்துள்ளது. நாம் பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளோம்.

இந்த ஆபத்தில் இருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் ஒரு லட்சம் இளைஞர்கள் பங்குபற்றுவர்!



கொழும்பு, ஏப். 30

கண்டி கட்டம்பே மைதானத்தில் நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் ஒரு லட்சம் இளைஞர்கள் பங்கேற்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என கட்சியின் இளைஞர் முன்னணித் தலைவர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

மே தினக் கூட்ட ஏற்பாடுகள் தொடர்பில் கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கட்டம்பே மைதானத்தில் நடைபெறும் கூட்டத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தி ஒரு லட்சம் இளைஞர், யுவதிகள் பங்கேற்கச் செய்யப்படுவர்.

கட்டம்பே மைதானம் நோக்கிச் செல்லும் இரண்டு மே தினப் பேரணிகளில் ஒன்றை சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணியே ஆரம்பித்து வைக்கும்.

இரண்டாவது பேரணி தொழிற் சங்கத் தலைவர்களால் ஆரம்பித்து வைக் கப்படும்.

மே தினக் கூட்டத்தில் பங்கேற்கும் கட்சியின் உறுப்பினர்களுக்காகப் போதியளவு போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

அதிகூடிய இளைஞர், யுவதிகள் மற்றும் உழைக்கும் மக்கள் பங்கேற்கும் மே தினக் கூட்டமாக கட்டம்பே மைதானத்தில் நடைபெறும் சுதந்திரக் கட்சியின் மேதினக்கூட்டம் வரலாற்றில் இடம்பிடிக்கும்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# முகநூல் தொடர்பில் 850 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஏப். 30

இந்த ஆண்டில் இதுவரையில் முகநூல் பயன்பாடு தொடர்பில் 850 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை கணினி அவசர பதிலளிப்புப் பிரிவால் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

முகநூல் தொடர்பான முறைப்பாடுகளில் 80 வீதமானவை பெண்களால் செய்யப்பட்டுள்ளன என்று பிரிவின் தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர் றொசான் சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

போலியான கணக்குகளைத் தயாரித்தல், முகநூலில் படங்களை தரவிறக்கி வேறும் தேவைகளுக்குப் பயன்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் முகநூல் தொடர்பில் 2 ஆயிரத்து 250 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முகநூல் பயன்பாடு தொடர்பில் ஏதேனும் முறைப்பாடுகள் இருந்தால் 0112-691692 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?



## 30.04.2017 இல் இருந்து 06.05.2017 வரை

ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத்திங்கள் 17 ஆம் நாள் பஞ்சமித்திதி இரவு 12.49 வரை. பின்னர் சஷ்டி. நட்சத்திரம்: மிருகசீரிடம் காலை:8.23 வரை. பின்னர் திருவாதிரை சித்தயோகம் முழுவதும். ராகுகாலம்: மாலை 4.47 முதல் 6.20 வரை. சுபநேரம்: காலை 8.54 முதல் 10.24 வரை. திவசம் செய்ய வேண்டிய திதி:சித்திரை மாத வளர்பிறை பஞ்சமி. பிறந்த நட்சத்திர வழிபாடு திருவாதிரை.

**சந்திராட்டமநாள்:** விசாகம் 4 ஆம் கால் அனுசம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் உதயமானோர் அரசியல் நற்கருமங்களில் ஈடுபடுவதை விலக்கவும்.



**மேஷம்:** மத்திமமான வாரம் ஆகும். பொருளாதார நிலையில் மந்தமான சூழ்நிலை உருவாகும். கருத்து வேறுபாடுகளால் சில காரியம் தடைப்படும். வியாபாரிகளுக்கு தொழிலாளர் ஒத்துழைப்பு குறைவாக இருக்கும். வெளியூர்ப்பயணமும், வாகன அலைச்சலும் உண்டாகும். சிறு வியாபாரிகளுக்கு ஓரளவு வியாபாரம் விருத்தியடையும். நீண்ட நாள் கடன் ஓரளவு குறைந்து மனநிம்மதியைத் தரும். தொழிலாளர் அதிக பிரயாசைப்பட்டு வேலை வாய்ப்புக்களைப் பெறுவார்கள். உத்தியோகத்தர்களுக்கு சக உத்தியோகத்தர்களுடன் ஒற்றுமை உண்டாகும்.



**ரிஷபம்:** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதார நிலை உயர்வாக அமையும். செயற்பாடுகளில் வேகம் இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக அமையும். வெளிநாட்டுத் தொடர்புகளால் இவ் வேலைகளைச் சிரமமின்றி முடிப்பார்கள். வியாபாரத்தில் முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும். எதிரிகளின் தொல்லை நீங்கும். பெண்களின் கூட்டு முயற்சிகள் நல்ல பலனைத் தரும். கலைத்துறையில் இருக்கும் பெண்களுக்கு முன்னேற வாய்ப்புகள் கிட்டும். பட்டப்படிப்பிலும் மாணவர்கள் திறமையான கல்வி மேன்மையைப் பெறுவார்கள்.



**மிதுனம்:** அதிர்ஷ்டமான வாரம் ஆகும். பணபலம் அதிகரிக்கும். பெண்களுக்குப் பெருமை சேரும். குடும்ப உறவு பலப்படும். வாகன யோகமும், வீடு கட்டும் சூழ்நிலையும் உருவாகும். வெளிநாட்டு வாய்ப்புகள் பயனுள்ளனவாக அமையும். சிலர் தொழில் ரீதியாக வெளிநாடு செல்ல நேரும். சமூகத்தில் செல்வாக்கும், கௌரவமும் உயரும். எடுத்த காரியத்தில் வெற்றியும், ஆதாயமும் கிடைக்கும். உத்தியோகத்தில் எதையும் சாதிக்கும் திறமை உண்டாகும். பூர்வீக சொத்துகள் தடையின்றி வந்து சேரும். பெரும் தொழிலதிபர்களின் நட்பும், வியாபார விருத்திக்கு தேவையான ஒத்துழைப்பும் கிடைக்கும்.



**கடகம்:** அலைச்சல் மிகுந்த வாரம் ஆகும். தொழிலில் பிரயாசையும், அலைச்சலும் அதிகமாகும். சிலர் அரசாங்க வேலை தேடி அலைவார்கள். சிலர் கொடுத்த பணத்தை வசூல் பண்ண அலைந்து திரிவார்கள். பணம் தட்டுப்பாடாக உள்ளதால் கடன் வாங்க அலைவார்கள். சிலர் தம் பிள்ளைகளை ஆரம்பப் பாடசாலையில் சேர்ப்பதற்கு தகுந்த பாடசாலையைத் தேடித் திரிவார்கள். சுயதொழில் செய்ய விரும்பும் சிலர் வங்கிகளின் உதவியை நாடுவார்கள். உடல் நலக் கோளாறுகளால் சிலர் மருத்துவ உதவியை வேண்டுவார்கள்.



**சிம்மம்:** உயர்வான வாரம் ஆகும். பணப் புழக்கம் தாராளமாக இருக்கும். எதிர்பார்த்த காரியம் கைகூடும். குடும்பத்தில் புரிந்துணர்வு அதிகரிக்கும். பணியில் இருந்த சிரமம் குறையும். சிலருக்கு கௌரவப் பதவிகள் கிடைக்கும். சமூக அந்தஸ்து உயரும். சகோதர உறவு வலுவடையும். வியாபாரத் தொழிலில் கூடுதல் வருவாய் கிடைக்கும். புதிய வீடு கட்டும் திட்டம் சிலருக்கு நிறைவேறும். உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்கு நல்ல வரவேற்பும், முகமலர்ச்சியும் அமைதியான வாழ்க்கைச் சூழ்நிலையும் மனதுக்கு மகிழ்ச்சியைத் தரும்.



**கன்னி:** இவ்வாரம் சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். தொழிலில் அதிக முதலீடு போடுவதைத் தவிர்ப்பது நல்லது. வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. உத்தியோகத்தர்கள் உயரதிகாரிகளிடத்தில் சற்று நிதானமாக நடந்து கொள்வதும், சொல்லும் வேலையைச் செய்வதன் மூலம் வரும் இடர்களைத் தவிர்க்கலாம். வியாபாரத்தில் இருப்பதைத் தக்க வைக்கப் பெரும்பாடுபடுவார்கள். கொடுக்கல், வாங்கலைத் தவிர்க்க வேண்டும்.



**துலாம்:** யோகமான வாரம். தனலாபம் அதிகரிக்கும். செய்யும் தொழிலில் உயர்வும், வெளிநாட்டுத் தொடர்புகளும் பயனுள்ளனவாக அமையும். வியாபாரத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். சுயதொழில் செய்பவர்கள் நன்மையான பலன்களைப் பெறுவார்கள். எடுத்த காரியத்தில் வெற்றியும், சென்ற இடங்களில் செல்வாக்கும் ஏற்படும். புதிய வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். பிரிந்த உறவு ஒன்று சேரும்.



**விருச்சிகம்:** துயரமான வாரம் ஆகும். பணவரவு குறையும். தெளிவற்ற முடிவுகளால் சில நேரம் குழப்பம் உண்டாகும். மன அமைதிக்கு அடிக்கடி தொல்லை வரும். வேலையில் கவனமின்றி அடிக்கடி பல தரப்பட்ட சிந்தனைகளில் இருப்பார்கள். குடும்ப அமைதி குறையும். தொலை தூர முயற்சிகளில் சில தடைகள் உண்டாகும். தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்க முயற்சிகளைச் செய்ய வேண்டி வரும். பணியாளர்களின் ஒத்துழையாமையால் சில தடைகளும், கால தாமதமும் உண்டாகும்.



**தனுசு:** மத்திமமான வாரமாகும். வருமானம் சுமாராக இருக்கும். தொழிலில் சிரமம் உண்டாகும். உறுதியான செயற்பாடுகளைச் செய்ய முடியாமல் தவிப்பதுடன் கடன் தொல்லை தரும். காரியத்தடையும், முரண்பாடான செயல்களைச் செய்ய வேண்டி வரும். எதிலும் எச்சரிக்கையாய் இருப்பது நல்லது. நெருங்கிய நண்பர்கள் கூட சிலநேரம் ஏமாற்றி விடுவார்கள். சொத்து சம்பந்தமான வழக்கு மன வருத்தத்தை தரும். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை.



**மகரம்:** மேன்மையான வாரம் ஆகும். எடுத்த காரியங்கள் தடையின்றி நடக்கும். நீண்ட நாள் தேங்கிக் கிடந்த வேலைகள் முடிவுக்கு வரும். தடைகள் நீங்கி, சுபீட்சம் உண்டாகும். உத்தியோகத்தர்கள் கூடுதல் சம்பளமும், ஊக்கத் தொகையும் பெறுவார்கள். பூர்வீகச் சொத்துக்களால் இருந்து வந்த பிரச்சினைகள் தீர்வாகும். உறவுகளுடன் இருந்த கருத்து வேறுபாடுகள் மறையும். வியாபாரத்தில் ஏற்றமான சூழ்நிலையும் திருப்திகரமான வருவாயும் உண்டாகும். திருமணமாகாதவர்களுக்கு நல்ல வரன் அமையும்.



**கும்பம்:** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். சுயதொழில் செய்பவர்களும், அழகு சாதனப் பொருள்கள் விற்பனையாளர்களும் சிறப்பான முன்னேற்றம் காண்பார்கள். வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு வேலை கிடைக்கும். வெளிநாட்டு பயணம் செய்ய நினைப்பவர்கள் முயற்சி செய்தால் வாய்ப்புகள் கிட்டும். மாணவர்கள் பட்டப்படிப்புகளில் முதன்மை பெறும் வாய்ப்புகள் உண்டாகும்.



**மீனம்:** கவலையான வாரம் ஆகும். பணவரவு குறையும். உடலில் ரோகங்கள் உண்டாகி, மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் உண்டாகும். கடன் தொல்லை அதிகரிக்கும். சிலர் மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் ஆபத்தில் மாட்டிக் கொள்வார்கள். எதிலும் எச்சரிக்கை தேவை. சகோதரியைப் பற்றிய கவலை மனதை வாட்டும். தாயாரின் உடல்நிலை பாதிப்படையும். தொழிலில் சக பணியாளர்களுடன் கருத்து மோதல் உண்டாகும்.

# வடக்கின் கல்வி நிலையை உயர்த்த சாதாரணதர மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சை அவசியம்

## வடக்கு முதல்வரிடம் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 30

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை முடிவுகளின் அடிப் படையில் நோக்கும் போது வடக்கு மாகாணம் தொடர்ந்து பின்னடைவையே சந்தித்து வருகிறது.

இத்தகைய நிலைமையை மாற்றியமைக்க சாதாரணதர மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சை நடத்தப்பட வேண் டியது அவசியம்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மகஜர் ஒன்றை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வ ரன் ஒப்பமிட்டு முதலமைச் சருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட் டுள்ளவை வருமாறு:-

2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு மாகாணம், கல்வியில் பின்னடைவைச் சந்தித்து வருகின்றது. இதற்கு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் சான்றாக உள்ளன.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை போட்டிப் பரீட்சையாக உள்ளது. கல் விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களே உயர்தரத்துக்குச் சென்று பரீட்சையைச் சந்திக்கின் றனர். ஆகையால் க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறு பேறுகள் கணிப்பீட்டுக் கருவியாக அமையாது.

ஆனால், க.பொ.த. சாதாரணதர பரீட்சை என் பது அப்படியல்ல. தரம் ஒன்றில் இருந்து தரம் பதினொன்று வரை கற்ற மாணவர்கள் அனைவரும் தோற்றி கிடைக்கப்பெறும் பெறுபேறுகளின் அடிப்ப டையில் மாகாண, மாவட்ட, வலய நிலைகள் கணிக்கப் படுகின்றன. அத்தகைய நிலையில் எமது வடக்கு மாகாணம் தொடர்ந்தும் இறுதி நிலையில் இருந்து வருவது மிகுந்த வேதனை யைத் தருகின்றது.

2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் இத்தகையதொரு நிலை வடக்கு மாகாணத் துக்கு இருந்ததில்லை. மத்திய அரசின் ஆளுகைக்கு உட்பட்டிருக்காத ஒரு கால கட்டத்தில் க.பொ.த. சாதா ரணதர மாணவர்களுக்கு விசேடமாக அமைக்கப்பட் டிருந்த கல்வித் தனி அல குக்கு ஊடாக அரச பொதுப் பரீட்சைக்கு முன்னராக விசேட முன்னோடிப் பரீட்சை வைக்கப்பட்டு, அதற்கு மிகுந்த முக்கியத்தவம் கொடுத்து வினாப்பத்திரங் கள் சரியான முறையில் திருத்தப்பட்டு பெறுபேறு கள் வெளியிடப்பட்டன.

ஆனால் துரதிஷ்டவசமாக தற்போது தெல்லிப்பழை அத்தகைய முன்னோடிப் பரீட்சை நடத்தப்படுவ தில்லை. இதைவிட இன்று மாணவர்களை கண்டிக்க வோ, தண்டிக்கவோ முடியாத அளவுக்கு ஆசிரியர்கள் உள்ளனர். பாடங்களில் கரி சனை செலுத்தாத மாணவர் களை என்ன செய்வது? பாடசாலைகளுக்குத் தொடர்ந்து சமூகமளிக்காத மாணவரை என்ன செய்வது? கொடுக்கப்படும் பயிற்சிக ளைச் செவ்வனே செய்யாத மாணவர்களை என்ன செய் வது? போன்ற வினாக்களுக்கு விடை தெரியாதவர்களாக ஆசிரியர்கள் உள்ளனர்.

எமது தமிழ்சமூக பண்பாட் டின் அடிப்படையில் வளர்ந்து ஆசிரியர்களாகி தமது கட மைகளைச் சரிவரச் செய்ய வேண்டும் என எண்ணுகின்ற பல ஆயிரக்கணக்கான ஆசி ரியர்கள் இன்று கைவிரித்துக் கைகட்டி வேடிக்கை பார்ப் பவர்களாக உள்ளனர். இத னால் கல்வியில் பின்னடைவு மட்டுமன்றி ஒழுக்க விழு மியங்களிலும் நாம் தொடர் பின்னடைவுகளைச் சந்தித்து வருகின்றோம்.

வன்முறைக் கலாசாரமும், வாழ்வுக்கு ஒவ்வாத நடை முறைகளும் நாளுக்குநாள் அதிகரித்தே செல்கின்றன.

தாங்கள் முன்னைநாள் நீதியரசர் என்ற நிலையை நாம் உணர்ந்து கீழ்வரும் பிரதானமான ஒரு விடயத்தை மட்டும் தற்போதைக்கு உடனடியாக நடைமுறைப் படுத்த வேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அதுவே க.பொ.த. சாதா ரணதர மாணவர்களுக்கு நடத்தப்படுகின்ற முன்னோ டிப் பரீட்சை. இதனை இந்த 2017 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்துமாறு மிகவும் விநயத்துடன் வேண்டி நிற்கின்றோம். - என்றுள்ளது. (ஐ)

## திருக்குட முழுக்கு

வடமராட்சி,ஏப்.30

அல்வாய் மாலுசந்தி வரதராஜ விநாயகர் ஆலய திருக்குடமுழுக் குப் பெருவிழா இன்று ஞாயிற் றுக்கிழமை காலை 9.08 மணி முதல் 10.59 மணி வரையான சுப வேளையில் நடைபெறும். புதிதாக அமைக்கப்பட்ட கோபு ரம், ஆலய மூலமூர்த்தி மற்றும் பரிவாரமூர்த்திகளுக்குத் திருக்குட முழுக்கு நடைபெறும். தொடர்ந்து நல்லை திருஞானசம்பந்த ஆதின குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் அருளுரை நிகழ்த்துவார்.

அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோயில் மற்றும் லண்டன் ஈழ பசுபதீஸ் வரர் ஆலயம் ஆகியவற்றின் முதன்மைக் குருவான சிவகாம பிரதிஷ்டா ஞானபானு சிவப் பிரம்ம ஸ்ரீ ஸ்தாசிவ கரேஸ்வர குருக்கள் முதன்மைக் குருவாக இந்தத் திருமுழுக்கை நடத்தி வைப்பார்.

* * *

தெல்லிப்பழை,ஏப்.30

தெல்லிப்பழை வீமன்காமம் பத்திகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் ஆலய திருக்குடமுழுக்கு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.08 தொடக்கம் 10.50 மணி வரையுள்ள சுபவேளை யில் நடைபெறும். (ச)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்,ஏப்.30

புன்னாலைக்கட்டுவன் தெற்கு ஸ்ரீ அண்ணமகேஸ்வரர் ஆலய அலங்காரத் திருவிழா கடந்த புதன் கிழமை ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது.

திருவிழாவில் தினமும் இரவு 7 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ.நித்தியானந்த சர்மா 'சிவனருட் செல்வர்' எனும் தலைப்பில் தொடர் இசைச் சொற் பொழிவு நிகழ்த்தி வருகிறார். (ஐ)

## செம்மணியில் உருண்டு புரண்டது ஓட்டோ!




யாழ். செம்மணியில் நேற்று முற்பகல் பயணிகளை ஏற்றி வந்த ஓட்டோ ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியை அண்டிய வயல் வெளியில் உருண்டு புரண்டு நின்றது. தெய்வாதீனமாக அதில் வந்தவர்களுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. முன் கண்ணாடி மட்டும் சேதமானது. (இ-ரி)

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு பொது அமைப்புகள் பலவும் உதவி!

தெல்லிப்பழை, ஏப்.30

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் தேவை கள் தொடர்பில் கேட்டறிந்து பொது அமைப்புகள் பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றன.

நோயாளர்கள் நலன்புரி சங்கத்தின் கோரிக்கைக்கு அமையவே இந்த உதவிகள் வழங்கப்பட்டுவருகின்றனஎன்று சங்கத் தலைவர் தெரிவித்துள் ளார்.

ஏழாலை களபாவோடை அம்மன் ஆலயத்தின் அனுச ரணையில் வைத்தியசாலைக் கான 24 மணிநேர ஆய்வு கூட சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு நோயாளர் பெரிதும் பயனடைந்து வருகின்றனர்.

தற்பொழுது மேலதிக உத வியாக அவர்களால் ஒரு தொகை தளபாடங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. பல சிறியளவிலான புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் துரித வளர்ச்சிக்கேற்ற வகையிலான தொடர்ச்சியாக ஆதரவை வழங்கி வரும் ஏழாலை அம்மன் ஆலய மானது அதற்கேற்ப பல முயற் சிகளை மேற்கொண்டுள்ளது.

இது தவிர நல்லூர் மற்றும் கொழும்புத்துறையைச் சேர்ந்த இரு மூத்த தம்பதியரால் குறிப் பிட்டளவு மருத்துவ உபகரணங் கள் அன்பளிப்பாக வழங்கப் பட்டுள்ளன.

திருமதி அமுதா கோபாலன் தலைமையிலான கொட்டாஞ் சேனை லயன்ஸ் கழகமும் உதவிகளைத் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றது.

புற்றுநோய்ப் பிரிவு, உளந லப் பிரிவு, மகப்பேற்றுப் பிரிவு, சத்திரசிகிச்சைப் பிரிவு, குழந்தைகள் நலப்பிரிவு, பொது மருத்துவப் பிரிவு என்பவற் றின் வளர்ச்சிக்குத் தேவையான நிதி மற்றும் பௌதீக உதவிகள் தொடர்ச்சியாக பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகளி டமிருந்து நோயாளர் நலன்புரி சங்கத்தால் எதிர்பார்க்கப்படு கிறது. - என்று மேலும் கூறப் பட்டது. (ஐ)

## மின்சாரம் தாக்கி இளைஞன் பலி!

வவுனியா, மன்னார் வீதி, சாம்பல் தோட்டத்தில் நேற்று முற்பகல் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா கப்பாச்சி செட்டிகுளத்தில் வசித்து வரும் சின்னச்சாமி விஜயகாந்தன் (வயது - 29) என்ற இளைஞர் வவுனியா சாம்பல் தோட்டம் சென்று கிணறு வெட்டும் பணியில் ஈடுபட்டு வந்தார். வழமை போன்று கிணறு வெட்டும் போது கிணறு வெட்டும் இயந்திரத்தில் மின்சா ரக்கசிவு ஏற்பட்டு மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

சடலம் மருத்துவப் பரிசோதனைகளுக்காக வவுனியா மாவட்டப் பொதுவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-100)

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மே தினம்

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மே தின நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற வுள்ளன.

கட்சியின் வடபிரதேச செயலர் கா. செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல், அரசியல் குழு உறுப்பினர்களான க. தணிகாசலம், சோ.தேவராஜா, புதிய ஜனநாயக இளைஞர் முன்னணியைச் சேர்ந்த த.ஸ்ரீ பிரகாஸ், கட்சியின் வன்னி மாவட்ட செயலர் என்.பிரதீபன், தொழிற்சங்கப் பிரதிநிதிகளான கா. பஞ்சலிங்கம், இ.தவராஜா, விவசாயிகள் அமைப்பைச் சேர்ந்த பொ.முருகேசு, சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பைச் சேர்ந்த ச.தனுஜன் ஆகியோர் உரையாற்றுவர்.

மே தினப் பேரணி பிற்பகல் 3 மணிக்கு கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தியில் ஆரம்பமாகி வீரசிங்கம் மண்டபத்தை வந்தடையும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஐ)

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம்,ஏப்.30

வயாவிளான் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்ட மும், புதிய நிர்வாகத் தெரி வும் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் வி.ரி. ஜயந்தன் தலைமையில் இடம் பெறவுள்ளன. (ஐ)




பொன்.வேணு கிருஷ்ணா

சீன அரசாங்கமோ ட்ரம்ப் நிர்வாகத்துடன் அனுசரித்து செல்ல பெரும் பிரயத்தனம் செய்து வருகிறது. கடந்த வாரம், அது வட கொரியாவின் நீண்ட கால ஒரு சில ஏற்றுமதிகளில் ஒன்றான நிலக்கரியை அதனிடமிருந்து கொள்முதல் செய்வதை நிறுத்துவதாகவும், மற்றும் அந்நாட்டிற்கு செல்லும் ஒரே சர்வதேச விமானத்தையும் இடை நிறுத்துவதாகவும் அறிவித்தது. பொதுவாக சீன கம்யூனிஸ்ட் கட்சி தலைமையின் கண்ணோட்டங்களை எதிரொலிக்கும் People's Daily மற்றும் Global Times போன்ற அரசுடைமை பத்திரிகைகள், அணு ஆயுத தயாரிப்புக்களுக்கான முயற்சிகளைக் கைவிடுமாறு வட கொரியாவை எச்சரித்துள்ளதுடன், அவ்வாறு செய்வதன் மூலமாக, வொஷிங்டனின் போருக்கான சாக்குப் போக்குகளை இல்லாமல் செய்ய



வலியுறுத்தி உள்ளன. Global Times குறைந்தபட்சம் அதன் ஒரு தலையங்கத்தில், மற்றொரு வட கொரிய அணுஆயுதச் சோதனையைத் தடுக்க சீனாவே இராணுவரீதியில் தலையீடு செய்யலாம் என்றும் அச்சுறுத்தியது.

''வட கொரியா மீது செல்வாக்கு கொண்டுள்ள வர்த்தக மற்றும் இராணுவ பங்காளியான சீனாவின் உதவியுடன் பியொங்யாங் மீது'' அதன் கொள்கை ''அழுத்தத்தை அதிகரித்து வருவதாக'' ட்ரம்ப் நிர்வாகம் ஓர் அறிக்கை வெளியிட்டு, வெளிப்படையாகவே பெய்ஜிங்கிற்கான ஒரு விட்டுக்கொடுப்புடன் விடையிறுத்தது. அதேநேரத்தில், போர் உட்பட ''சகல வாய்ப்புக்களும்'' மேசையில்'' உறுதியாக இருக்கின்றன என்று அதன் வலியுறுத்தல்களில் இருந்து வெள்ளை மாளிகை இன்னும் பின்வாங்கவில்லை.

### அமெரிக்கக் குண்டு வீச்சுக்களால் உயிரிழப்புகள்

*நியூ யோர்க் டைம்ஸுக்காக சாய்வு நாற்காலியில் அமர்ந்துள்ள போர்-பண்டிதர்களின்மூவரணியான நிக்கோலஸ் கிறிஸ்டோஃப், ரோஜர் கொஹென் மற்றும் தோமஸ் ஃபிரெட்மன் போலவே, மனித உரிமைகள்'' ஏகாதிபத்தியத்திற்கு வக்காலத்து வாங்கும் ஊடகங்களில் எதுவுமே கூட, மொசூலில் ஓடும் இரத்த ஆற்றைக்கண்டித்தோ அல்லது அமெரிக்க இராணுவப் படைகளால் நடத்தப்பட்ட வேறெந்த மிக மோசமான படுகொலைகளைக் கண்டித்தோ பெரும்பாலும் கட்டுரை பகுதிகளில் ஒரு துளி இடமும் செலவிடவில்லை.*

ஈராக்கிலும் சிரியாவிலும் அமெரிக்க விமானத் தாக்குதலில் இறந்தவர்களின் எண்ணிக்கை டொனால்ட் ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் நுழைவதற்கு முந்தைய கடைசி முழு மாதத்துடன் ஒப்பிடுகையில் மார்ச் மாதத்தில் அண்மித்துமூன்றுமடங்குஅதிகரித்திருப்பதாக பிரிட்டிஷ் கண்காணிப்பு குழு Airwars இன் ஓர் அறிக்கை கண்டறிந்துள்ளது. டிசெம்பர் 2016 இல் 465 ஆக பதிவான படைத்துறைசாரா மக்களின் உயிரிழப்பு எண்ணிக்கை மார்ச் 2017 இல் 1,754 ஆக உயர்ந்தது, இது 277 சதவீத உயர்வாகும்.

இந்த அறிக்கை, ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்ட ஏப்ரல் முதல் வார கடற்படை ஏவுகணைத் தாக்குதலுக்கு சாக்குப் போக்காக கூறப்படும் பஷர் அல்-அசாத்தின் சிரிய ஆட்சி தான் விஷவாயு தாக்குதல்களை நடத்தியது என்ற இட்டுக்கட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மீதான ஊடக விஷமப் பிரசாரத்திற்கு இடையில் வந்திருந்தது. செய்திகளில் கூறப்பட்ட கடந்த வார சிரிய இரசாயனதாக்குதலில்உயிரிழந்தவர்களைக் காட்டிலும், அமெரிக்கக் குண்டுவீச்சானது குழந்தைகள் உட்பட அதிக எண்ணிக்கையிலான அப்பாவி மக்களைக் கொன்றுள்ளது என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. இந்த காரணத்திற்காகவே, இந்த ஆய்வு தோற்றப்பாட்டளவில் அமெரிக்க ஊடகங்களில் குறிப்பிடப்படாமலேயே கைவிடப்பட்டுள்ளன.

ஈரான்-சிரியா போர்ப் பகுதிகளில் நடக்கும் வான்வழித் தாக்குதல்களில் உயிரிழப்பவர்களைஅட்டவணைப்படுத்தும் மற்றும் செய்திகளுக்கு ஆதரவான சாட்சியங்களின் பலத்தை மதிப்பீடு செய்யும் Airwars அமைப்பு, 2016 முழுவதிலும் இறந்தவர்களைக் காட்டிலும் மொத்தம் 2,826 பேர் உயிரிழப்போடு 2017 இன் முதல் மூன்று மாதங்களில் அதிக எண்ணிக்கையிலான அப்பாவி மக்கள் கொல்லப்பட்ட செய்திகள் வந்திருப்பதைக் கண்டறிந்தது. இந்த அதிகரிப்பு சொல்லப்போனால் 2016 இன் இறுதியில் இருந்தே தொடங்கி இருந்தது. அப்போது ஈராக்கிய இராணுவமும் அதன் அமெரிக்க இராணுவ ''ஆலோசகர்களும்'' கடந்த இரண்டரை ஆண்டுகளாக சுனி அடிப்படைவாத குழுவான ISIS ஆக்கிரமித்திருந்த மொசூல் நகர் மீது அவர்களது படுகொலைத் தாக்குதலைத் தொடங்கின.

*அறிக்கை ''முழுகுடும்பங்களும் உள்ளே இருக்கும் போதே ஒட்டு மொத்த வீடுகளையும் அழித்த அமெரிக்க தலைமையிலான கூட்டணியின் வான்வழித் தாக்குதல்களின் எச்சரிக்கையூட்டும் வடிவத்தை'' ஏப்ரல் முதல் வாரம் கண்டறிந்தது.*

மொசூலின் கிழக்கு பகுதியில் நடந்த அமெரிக்க விமானத் தாக்குதல்களில் தொடர்ச்சியான பெரிய படுகொலை குறித்து சர்வதேச பொது மன்னிப்புச் சபை விசாரணை நடத்தி உள்ளது, மொசூல் 2016 ஒக்ரோபரில் இருந்து டிசெம்பர் வரையிலான முதல் கட்டத் தாக்குதலின் போது திரும்பக் கைப்பற்றப்பட்ட நகரமாகும். ஏப்ரல் முதல் வாரம் வெளியான ஓர் அறிக்கை ''முழு குடும்பங்களும் உள்ளே இருக்கும் போதே ஒட்டுமொத்த வீடுகளையும் அழித்த அமெரிக்க தலைமையிலான கூட்டணியின் வான்வழித் தாக்குதல்களின் எச்சரிக்கையூட்டும் வடிவத்தை'' ஏப்ரல் முதல் வாரம் கண்டறிந்தது.

மொசூலில் உள்ள அக்குழுவின் மூத்த விசாரணையாளர் Donatella Rovera கூறுகையில், ''அத்தாக்குதலை வழி நடத்திய கூட்டணி'' படைகள், சர்வதேச மனிதாபிமான சட்டத்தை வெளிப்படையாக மீறி, அப்பாவி மக்கள் கொல்லப்படுவதைத் தடுக்க போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்பதையே அதிகளவிலானஉயிரிழப்புக்களின்எண்ணிக்கை எடுத்துக்காட்டுகின்றன'' என்றார். வீட்டில் மக்கள் நிரம்பி இருக்கிறார்கள் என்று அறிந்தும் அவற்றை இலக்கில் வைத்த குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து, அந்த அப்பாவி மக்களைத் தப்பியோடுமாறு கூறுவதற்கு பதிலாக ஈராக்கிய அதிகாரிகள் அவர்கள் வீடுகளில் அங்கேயே தங்கியிருக்குமாறு கூறுவதைக் குறிப்பாக அவர் மேற்கோடிட்டார்.

மேற்கு மொசூலில் நிலைமை இன்னும் மோசமாக உள்ளது, அங்கே அமெரிக்க-ஈராக்கியத் தாக்குதலின் இரண்டாம் கட்டம் இந்தாண்டு தொடக்கத்தில் தொடங்கியது. இரண்டு மில்லியன் மக்களைக் கொண்ட பண்டைய மையப்பகுதியை உள்ளடக்கிய இது, மிகவும் மக்கள் நிரம்பிய பகுதியாகும், அங்கே அடுக்கு வீடுகளின் மாடியில் துப்பாக்கியேந்தி நிற்பவர்களை அழிக்க வழமையாக விமானத் தாக்குதல்களுக்கு உத்தரவிடப்படுகிறது, இந்த நிகழ்முறையில் பெரும்பாலும் வீடுகளுக்குள் வசிப்பவர்களும் கொல்லப்படுகிறார்கள். அதுபோன்ற மார்ச் 17 அமெரிக்கத் தாக்குதல் ஒன்று ஏறத்தாழ 300 பேரைக் கொன்றது.

கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை விட, மார்ச் 17 இல் அமெரிக்க குண்டுகளால் கொல்லப்பட்ட அப்பாவி மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ மூன்று மடங்கு அதிகம். மார்ச் மாதம் அமெரிக்க குண்டுவீச்சில் உயிரிழந்த மொத்தஅப்பாவி மக்களின் எண்ணிக்கை அதிகபட்சம் 20 மடங்காகும்.

*அமெரிக்க ஊடகங்களில் இந்த அமெரிக்கக் குண்டுவீச்சு அட்டூழியங்கள் குறித்து ஏறத்தாழ எதுவுமே குறிப்பிடப்படவில்லை.*

ஆனால் அமெரிக்க ஊடகங்களில் இந்த அமெரிக்கக் குண்டுவீச்சு அட்டூழியங்களைக் குறித்து ஏறத்தாழ எதுவுமே குறிப்பிடப்படவில்லை. சிரியாவிற்கு எதிராக ட்ரம்ப் உத்தரவிட்ட டோமாஹாக் போர்கப்பல் ஏவுகணை வீச்சுக்கு அரசியல் மூடிமறைப்பை வழங்கிய இடைவிடாத பிரசார வீச்சுடன் நிச்சயமாக எதையும் ஒப்பிட முடியாது.

சாள்ஸ் சூமார் முதல் நான்சி பிலொசி, எலிசபெத் வாரென் வரையில், அமெரிக்க ''முப்படைகளின் தலைமை தளபதியாக'' ட்ரம்பின் முதல் மிகப் பெரும் நடவடிக்கையை பாராட்ட முண்டியடித்து சென்ற ஜனநாயகக் கட்சி அரசியல்வாதிகளில் எவருமே, மொசூலில் அப்பாவி மக்கள் தொடர்ந்தும் கொல்லப்படுவதற்கு எந்த ஆட்சேபனைகளையும் தெரிவிக்கவில்லை.

### நியூயோர்க் டைம்ஸுக்காக சாய்வு நாற்காலியில் அமர்ந்துள்ள போர்-பண்டிதர்களின் மூவரணி

நியூயோர்க் டைம்ஸுக்காக சாய்வு நாற்காலியில் அமர்ந்துள்ள போர்-பண்டிதர்களின் மூவரணியான நிக்கோலஸ் கிறிஸ்டோஃப், ரோஜர்கொஹென் மற்றும் தோமஸ் ஃபிரெட்மன் போலவே, மனித உரிமைகள்'' ஏகாதிபத்தியத்திற்கு வக்காலத்து வாங்கும் ஊடகங்களில் எதுவுமே கூட, மொசூலில் ஓடும் இரத்த ஆற்றை கண்டித்தோ அல்லது அமெரிக்க இராணுவப் படைகளால் நடத்தப்பட்ட வேறெந்த பெரும் படுகொலைகளைக் கண்டித்தோ பெரும்பாலும் கட்டுரைப் பகுதிகளில் ஒரு துளி இடமும் செலவிடவில்லை. அவர்களின் ஒரே அக்கறை எல்லாம்,



ஒரு சிரிய விமானத்தளம் மீது அமெரிக்க ஏவுகணைத் தாக்குதல்களுக்கு ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிடுவதற்கு சாக்குப்போக்காக இருந்ததும், பரந்தளவில் பிரசாரம் செய்யப்பட்டதுமான கான் ஷேக்கௌன் நகரம் மீதான சிரிய இரசாயன ஆயுதத் தாக்குதல் என்று குற்றஞ் சாட்டப்பட்ட தாக்குதலில் சிஐஏ மற்றும் பென்டகன் இலக்கில் வைக்கும் அரசாங்கங்கள் மற்றும் சக்திகளை பூதாகரமாகக் காட்டி, அவ்விதத்தில் அமெரிக்க ஏகாதிபத்திய தலையீட்டை அவர்களது உயர்தர நடுத்தர வர்க்க ஆதரவாளர்களுக்கு விற்பனை செய்வதாக உள்ளது.

(கேள்வி தொடரும்...)





# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




131

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### *வன்னி மீட்புச் சமர்: ஓயாத அலைகள் III*

பிரபாகரனின் நுட்பமான போர்த் திட்டத்துக்கு அமையத் தரையிறங்கிய படையணிகளின் ஒரு தொகுதி மூத்த தளபதி கேணல் பால்ராஜின் தலைமையில் கண்டி வீதி வரை நகர்ந்து நிலையெடுத்தது. இந்தப் படைத் தொகுதி பின்னர் இரு அணிகளாகப் பிரிந்து, ஆனையிறவை நோக்கியும் யாழ்ப்பாணத்தை நோக்கியும் இரு தரப்பு அரண்களை அமைத்து ஏ-9 நெடுஞ்சாலையைத் துண்டித்தது. முகமாலைக்குச் சமீபமாக, இத்தாவில் பகுதியில் நான்கு கிலோமீற்றர் தூரமும் ஒன்றரை கிலோமீற்றர் அகலமுமான சிறிய நிலப்பரப்பில், உள் தடுப்பு வெளித் தடுப்பு அரண்களை நிறுவி, சிங்கள இராணுவத்தின் பிரதான விநியோகப் பாதையைத் துண்டித்து எதிரியோடு மோதும் பொருது களத்தை அமைத்தனர் புலிப் படை வீரர்கள். கேணல் பால்ராஜின் வழி நடத்தலில், தளபதி லெப். கேணல் ராஜன் தலைமையில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி, மாலதி படையணி, சோதியா படையணி போன்ற புலிகளின் படைப் பிரிவுகள் வரலாற்றில் பதிவாகப் போகும் இத்தாவில் சமருக்குத் தயாராகி நின்றனர். இது இவ்வாறிருக்க, குடாரப்புவில் தரை இறங்கிய இன்னொரு படைத் தொகுதி கேணல் தீபன் வழிநடத்தலில், லெப். கேணல் விநோத்தின் தலைமையில் ஆண், பெண் அணிகளைக் கொண்ட கடற்புலிகளின்படையணிகள் தாளையடி - செம்பியன்பற்றுப் படைத் தளத்தை தாக்கியழிக்கும் சண்டைக்குத் தயாராகின. சிறிலங்கா இராணுவத்தின் 53 ஆவது டிவிசன் சிறப்புப் படையணிகளைக் கொண்டதும், வலுவான இறுக்கமான பாதுகாப்பு அரண்களைக் கொண்டதுமான இந்தப் படைத் தளம் தாக்கியழிக்கப்பட்டால்தான் தரையிறங்கிய புலிப் படையணிகளுக்குத் தரை மார்க்கமான விநியோகம் சாத்தியமாகும்.

பிரபாகரனின் போர்த் திட்டத்தின் படி இந்தப்படை முகாமைக் கைப்பற்றுவதன் அவசியத்தைக் கேணல் தீபன் நன்கு உணர்ந்திருந்தார். எனவே, தரையிறங்கிய அன்று (டிசெம்பர் மாதம் 27 ஆம் நாள்) காலையே புலிகளின் போரணிகள் இந்தப் படை முகாம் மீது உக்கிரமான சண்டையைத் தொடுத்தன. உறுதியான பாதுகாப்பு அரண்களையும், கட்டடத் தொகுதிகளையும் பின்பலமாகக் கொண்ட இராணுவத்தினர் கடும் எதிர்த் தாக்குதலை நடத்தி, நாம் கைப்பற்றிய பிரதேசத்தில் ஒரு பகுதியை மீண்டும் தம்வசப்படுத்தினர். சண்டையை இடைநிறுத்தி, அடுத்த கட்டத் தாக்குதலைப் புதிய தந்திரோபாய நகர்வுடனும், போர் உத்திகளுடனும் ஒழுங்கமைத்தார் கேணல் தீபன். 29 ஆம் நாள் அதிகாலை 3 மணிக்குப் புலிகளின் படையணிகள் இரு முனைகளில் மூர்க்கமாக மோதி முன்னேறின. புலிப் படையின் வீராவேசத் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத எதிரிப் படைகள் பின்வாங்கிச் சிதறி ஓடின. செம்பியன்பற்று, மருதங்கேணிப் பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன. தரையிறங்கிய எமது படையணிகளுக்குத் தரைவழி விநியோகம் சாத்தியமாயிற்று.

இதற்கிடையில் தரையிறங்கிய கரும்புலிப் படையணி ஒன்று, 27 ஆம் நாள் இரவோடு இரவாக பளைவரை நகர்ந்து சென்று, அங்கு அமையப் பெற்றிருந்த எதிரியின் பீரங்கித் தளங்களைத் தகர்த்து அழித்தது. திடீரென, எதிர்பார்க்காதவாறு பீரங்கித் தளங்கள் அழிக்கப்பட்டு பீரங்கிச் சூட்டாதரவு முடக்கப்பட்டதால் எதிரியின் தாக்குதல் சக்தி ஓரளவுக்கேனும் மட்டுப்படுத்தப்பட்டது.

தாளையடி - செம்பியன்பற்றுப் படைத்தளம் விடுதலைப் புலி வீரர்களிடம் வீழ்ச்சியடைந்த செய்தியால் ஏக்கமடைந்த சிங்களப் படைத் தலைமை, புலியணிகள் இத்தாவில் வரை முன்னேறி கண்டி வீதியைத் துண்டித்து அங்கு நிலையெடுத்திருப்பதை அறிந்து திகிலடைந்தது. ஆனையிறவின் விநியோக ஆணிவேர் அறுபட்டிருப்பது இராணுவத் தலைமைக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. பிரமாண்டமான ஆனையிறவுக் கூட்டுப் படைத்தளமும் அங்குநிலைகொண்டிருக்கும் பன்னீராயிரம் படை வீரர்களும் சுற்றி வளைக்கப்பட்டு, முற்றுகைக்கு ஆளாகி, விநியோகப் பாதை துண்டிக்கப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டு நிற்கும் போராபத்தைச் சிங்கள அரசு உணர்ந்து கொண்டது. எப்படியாவது, எந்த வழியிலாவது அரசபடைகளின் முழுமையான படைவலுவையும் பாவித்துப் புலிகளின் முற்றுகைச் சமரை முறியடிப்பதென சிங்கள அரசும் படைத்துறைத் தலைமையும் முடிவு எடுத்தன. இந்த முடிவை உடனடியாகச் செயற்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய, இத்தாவிலில் எமது போராளிகள் நிலையெடுத்த இரண்டாவது நாள், (மார்ச் மாதம் 28 ஆம் நாள்) மாலை நான்கு மணியளவில், சாள்ஸ் அன்ரனி படையணி நிலையெடுத்திருந்த கண்டி நெடுஞ்சாலைப் பகுதியில் சிங்களப் படையணிகள் தாக்குதலைத் தொடுத்தன. ஆனையிறவுப் பெருந்தளத்திலிருந்து முன்னேறி வந்த இராணுவத்தினர் டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் மூன்று முனைகளில் எமது முன்னணிப் பாதுகாப்பு அரண்களை உடைத்து எமது பாதுகாப்பு வலயத்தினுள் நுழைந்தனர். எதிரியின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்த எமது படையணிகள், எதிரியைத் திகைப்பூட்டும் வகையில் தீரமுடன் களமாடினார்கள். இரவு 11 மணிவரை கடும் சண்டை தொடர்ந்தது. இறுதியில், எதிரிப் படையணிகள் இழப்புகளுடன் விரட்டியடிக்கப்பட்டன. இத்தாவில் பகுதியில் எமது படைபலத்தையும், சுடுகலச் சக்தியையும், மனோதிடத்தையும் கணிப்பீடு செய்து பார்க்கவே இந்த ஊடுருவல் தாக்குதல் நடத்தப்பட்டது. எமது போர் வலுவை மதிப்பீடு செய்து கொண்ட சிங்கள இராணுவம் பெரும் எடுப்பிலான படை நடவடிக்கைகளுக்குத் திட்டமிட்டது.

விமானங்கள் குண்டுபொழிய, பீரங்கி மோட்டார் சூட்டாதரவுடன், டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் பெரும் எடுப்பில் மார்ச் மாதம் 30 ஆம் நாளன்று சிங்கள இராணுவம் மேற்கொண்ட தீவிரமான தாக்குதலுக்கு இந்த முறையும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படை முகம் கொடுத்தது. எமது போர் வியூகத்தை உடைத்து, பாதை மறிப்பை முறியடிக்க சிங்களப் படையணிகள் வெறிகொண்டு போராடின. அன்று காலை 6:30 மணிக்கு ஆரம்பமாகிய சண்டை, முன்னிரவு 7 மணிவரை நீடித்தது. ஒரு பகல் பூராக முக்கி முக்கிப் போராடியும் பிடித்த ஒரு காவலரண்களைக் கூட தக்க வைக்கமுடியாது பெரும் இழப்புகளுடன் பின்வாங்கியது சிங்களப் படை.

மார்ச் மாதம் 31 ஆம் நாள், யாழ்ப்பாணத்திலிருந்து டாங்கிகள், கவச வாகனங்களுடன் முன்னேறி வந்த எதிரிப் படைகளை கண்டி வீதியில் வைத்து வழி மறித்தனர் சோதியாப் படையணிப் போராளிகள். பல மணி நேரமாக நடைபெற்ற உக்கிரமான சண்டையின் பின்பு, சிங்களப் படையணிகளை பின்வாங்கி ஓடச் செய்தனர் எமது பெண் போராளிகள்.



புலிப் படையணிகளின் உடைக்க முடியாத உறுதியும், எதற்குமே அஞ்சாத துணிவும், அபாரமான போர்த் திறனும் சிங்களப் படைகளைத் திணறடித்தன. ஆயினும், இந்த முற்றுகைச் சமரை முறியடிக்காது போனால் ஆனையிறவு வீழ்ச்சியடைந்து யாழ்ப்பாணத்துக்குப் பேராபத்து எழலாம் என இராணுவம் அஞ்சியது. எனவே, என்ன விலை கொடுத்தும், இத்தாவில் சமரில் புலிகளின் முதுகெலும்பை முறித்து, முற்றுகையையும் உடைத்துவிடச் சிங்களப் படைத் தலைமை உறுதி பூண்டது. ஏப்ரல் மாதம் 2 ஆம் நாளன்று ஒரு புதிய தந்திரோபாய நகர்வுடன் தனது அசுர பலத்தைப் பிரயோகித்து, புலிகளுடன் பொருதியது சிங்களப் படை. ஆனையிறவிலிருந்து ஒரு படைத் தொகுதியும், யாழ்ப்பாணத்திலிருந்து இன்னொரு படைப் பிரிவுமாக ஒரே சமயத்தில் இத்தாவிலில் அமைந்த புலிகளின் வலயத்தை உடைக்க முயன்றன அந்தப் படை. என்றுமில்லாதவாறு இத்தாவில் சண்டை உக்கிரம் அடைந்தது. சண்டையின் உச்சக் கட்டத்தில், நீரேரிப் பகுதி ஊடாகப் புலிகளின் முன்னணிப பாதுகாப்பு அரண்களை உடைத்து, ஊடறுத்து, உள்நுழைந்தன சிங்களப் படைகள். டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் இத்தாவில் வலயத்துக்குள் புகுந்த அரச படையணிகள், எமது போரணிகளின் ஒரு பகுதியைச் சுற்றி வளைத்து முற்றுகையிட முனைந்தன. எதிரியின் தந்திரோபாய நகர்வை ஊகித்தறிந்த எமது வீரர்கள் மயிர்க்கூச்செறியும் சண்டைகளை நிகழ்த்தி எதிரியின் திட்டத்தை முறியடித்தனர். எமது படைகளை முற்றுகையிட முனைந்த எதிரி, எமது படைகளின் முற்றுகைக்குள் சிக்கிக்கொண்டு அங்கலாய்த்தான். எதிரியின் கவச வாகனங்கள் திசை தெரியாது அங்குமிங்கும் அலைந்து திரிந்தன. குழு மாடுகளாகப் பற்றைகளை உழுது திரிந்த டாங்கிகளை எமது கவச எதிர்ப்பு அணிகளின் உந்துகணைச் செலுத்திகள் தாக்கியழித்தன. அன்றைய நாள் கடும் சமரில் எமது ஆண், பெண் போராளி அணிகளின் அபாரமான போராற்றலைக் கண்டு எதிரிப் படைகள் திகைப்படைந்தன. அன்று நண்பகல் 12 மணிக்குத் தொடங்கிய சமர் இரவு வரை நீடித்தது. பல நூற்றுக்கணக்கான படையினரின் உடல்கள் அங்குமிங்குமாக அந்தப் பிரதேசம் எங்கும் சிதறிக் கிடந்தன. எஞ்சிய படையணிகள் இரவின் இருளில் தலை குனிவுடன் தலைமறைவாகின.



(தொடரும்...)



# திருமணத்துக்கு தயாராகும் மணமகளா?

கல்யாணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர் என்று சொல்வார்கள். அதனால் தான் அந்த நாளை மங்கலகரமாகக் கொண்டாடுகிறார்கள். திருமண வீட்டுக்குச் சென்றால் அனைவருடைய கண்களும் மணமகளின் அழகையே மொய்க்கும். மணப்பெண்ணுக்கு அலங்காரம் செய்வது என்பது மிக முக்கியமானது. சரி மணப்பெண்ணுக்கு என்னென்ன அலங்காரம் செய்வது என்று பார்ப்போமா?

**திருமணத்துக்கு முன்...**

★ அழகாகவும், மிடுக்காகவும் தோன்ற எளிமையான உடற்பயிற்சிகளைச் செய்து வரவேண்டும். நடப்பது கூட சிறந்த உடற்பயிற்சிதான். ரத்த ஓட்டத்தை சீராக்கும். அத்துடன் உடல் நிறையையும் குறைக்கும்.

★ தினமும் 2 பழங்களாவது சாப்பிடுங்கள். பப்பாசிப் பழத்தைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கிச் சாப்பிடலாம். அதன் மீது மிளகுப் பொடி தூவினால் பசி அடங்கும். சருமமும் பளபளப்பாக மாறும்.

★ முகத்துக்கு இயற்கையாகக் கிடைக்கும் பழங்களைக் கொண்டு பேஷியல் செய்துகொள்ளலாம். கால்களுக்கு (பாதப் பராமரிப்பு) பெடிக்யூர் செய்து வந்தால் திருமண சமயத்தில் அழகு கூடும்.

★ திருமணத்துக்கு ஒரு மாதத்துக்கு முன்பு கோல்டன் பேஷியல், தலைமுடி பராமரிப்பு ஆகியவற்றை செய்யலாம். முகப்பரு உள்ளவர்கள் இரண்டு வாரத்துக்கு முன்பே அழகுக்கலை நிபுணரிடம் சென்று சரி செய்துகொள்ளுங்கள்.

★ தலைமுடியை உறுதியாக சுத்தமாக வைக்க சூடான எண்ணெய்யை தேய்த்து மசாஜ் செய்துகொள்ளுங்கள். நல்ல நித்திரை அவசியம். தினமும் 8 மணித்தியாலம் தூங்குங்கள். தூக்கமும் அழகைக் கூட்டும்.

★ கண்ணுக்குகீழ் கருவளையங்கள் தோன்றினால், முட்டையின் வெள்ளைக் கருவை எடுத்து அந்த இடத்தில் தேய்த்து, உலர்ந்ததும் கஞ்சித் தண்ணீர் கொண்டு கழுவி விடுங்கள்.

★ திருமணத்துக்கு இரண்டு நாள்களுக்கு முன் கை, கால்களில் மருதாணி போட்டுக்கொள்ளலாம். ராஜஸ்தானி மெகந்தி, கறுப்பு மெகந்தி, அராபிக் மெகந்தி என்று பலவகையான டிசைன்கள் உள்ளன.

**அலங்காரம் (மேக் அப்) செய்வது எப்படி?**

★ மாலையில் நடைபெறும் வரவேற்பு (ரிசப்ஷன்) நிகழ்வுக்கு சற்று அதிகமாகவும், காலையில் மிதமாகவும் அலங்காரம் செய்து கொள்ளுங்கள். திருமண நாளன்று அதிகமாக வியர்த்துக் கொட்டும். அதனால், கிரீம் பேஸ் அலங்காரத்தை விட, பவுடர் அலங்காரம் செய்வதுதான் நல்லது. அலங்காரம் செய்வதற்கு முன் ஐஸ் கட்டிகளைக் கொண்டு முகத்துக்கு ஒத்தடம் கொடுங்கள்.

★ அவரவர் நிறத்திற்கேற்ப பவுண்டேஷன், பவுடர், லிப்ஸ்டிக் போட வேண்டும்.

★ கண்களைச் சுற்றி ஐ-லைனர் வரையும் போது கலைநயத்துடன் வரைய வேண்டும். நிறத்திற்கேற்ப 'ஐ-ஷடோ' வைத் தேர்ந்தெடுங்கள்.

★ அலங்காரத்தின்போது கழுத்து, கைகள் வரை ஒரே சீராகப் போடப்பட்டுள்ளதா என்று கவனிக்க வேண்டும்.

★ அலங்காரம் செய்யும்போது முகத்தில் உள்ள கரும்புள்ளிகள், தோலில் உள்ள சுருக்கங்கள் மறைந்து விட வேண்டும். நல்ல தரமான அலங்காரப் பொருள்களையே பயன்படுத்துங்கள். இல்லாவிட்டால், திருமண நேரத்தில் தோலில் ஒவ்வாமை ஏற்படும்.

**சிகையலங்காரம்**

மணப்பெண்ணின் அழகுக்கு மெருகூட்டுவது சிகையலங்காரம். முன்புறம் முகத்தின் மேற்புறம் சிகையலங்காரம் பொருந்தும் அளவில் தான் பின்புறம் தலையை அலங்கரிக்க வேண்டும்.

கொண்டை போடும்போது மணப்பெண்ணின் உயரம், நிறை, கழுத்தின் உயரம் போன்றவற்றைக் கணக்கிட வேண்டும். குட்டையான பெண்களுக்கு சற்று தூக்கியவாறு கொண்டையும், நீளமான கழுத்துள்ளவர்களுக்கு கழுத்தை மறைக்கும் அளவில் கொண்டையை இறக்கியும் போட வேண்டும். முகம் நீளமாக உள்ளவர்களுக்கு காதுகளை மறைக்கும் விதத்தில் சிறிது முடியை எடுத்து சுருட்டி விடலாம். அகலமான முகத்தை உடையவர்கள் முடியைத் தூக்கிக் கட்ட வேண்டும். நடுவகிடு எடுத்து அதில் நெற்றிச் சுட்டியை அணியலாம். அல்லது காதின் ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்துக்கு முடியை வாரி எடுத்துச் சென்று பின்குத்தி விட்டு, பின்னால் அழகாக கொண்டை போடலாம்.

**திருமணப் புடைவை**

திருமணப் புடைவை வாங்கும் போது, அவை குறைந்தது 2 ஆண்டுகளாவது அணிய வேண்டியிருப்பதால், தரமான புடைவையாகப் பார்த்து வாங்குங்கள். அவை நீங்கள் அணியும் நகைகளுக்கு பொருத்தமாக இருக்கின்றனவா என்றும் பார்க்க வேண்டும். உதாரணமாக, அரக்கு நிற சரிகைக் கரை போட்ட பட்டுப் புடைவை கறுப்பாக சற்று குண்டாக உள்ள பெண்களுக்குப் பொருத்தமாக இருக்காது. சிவந்த மேனியுடைய பெண்களுக்கு மிளகாய் பழ சிவப்பில் மெல்லிய சரிகைக்கரை போட்டபட்டுப் புடைவை எடுப்பாக இருக்கும்.

புகைப்படத்தில் பளிச்சென்று தெரியக்கூடிய வகையில் உடைகளைத் தேர்வு செய்யுங்கள். வாடாமல்லி, மயில் கழுத்து நிறம், தேன் நிறம் போன்ற நிறங்கள் வரவேற்பு (ரிசப்ஷன்) நிகழ்வுக்கு ஏற்றவை.

## 'மாங்கல்யம் தந்துனானே' மந்திரத்தின் அர்த்தம் தெரியுமா?




திருமணத்தில் பெண்ணின் கழுத்தில் மாங்கல்யத்தை அணிவிக்கும் போது கூறப்படும் மந்திரத்தின் அர்த்தம் என்ன என்பதை பலர் அறிந்திருக்க மாட்டார்கள்.

'மாங்கல்யம் தந்துனானே
மமஜீவன ஹேதுநா
கண்டே பத்நாமி ஸுபகே
த்வம்ஜீவ சரதஸ்சதம்' என்னும் மந்திரத்தின் பொருள்

'மாங்கல்யமான பெண்ணே! உன்னோடு இன்று நான் ஆரம்பிக்கும் இல்லறவாழ்வு நல்லமுறையில் இருக்க வேண்டும் என்று உறுதி பூண்டு, இந்த திருமாங்கல்யத்தை உன் கழுத்தில் அணிவிக்கிறேன்.

என் இல்லத்துணைவியாக என் சுகதுக்கங்களில் பங்கேற்று நிறைந்த யோகத்துடன் நீ நூறாண்டு காலம் வாழ்வாயாக' என்பதாகும்.

# கோடையை குளிர்ச்சியாக்க...





உஸ்... அஸ்... என்ற களைப்புப் பெருமூச்சுக்களின் ஒலி கேட்கத் தொடங்கிவிட்டது. இந்தக் கோடையை எப்படிச் சமாளிப்பது என்பதே இப்போது எல்லோருக்கும் அனலாய் வீசும் கேள்வி.

★ கோடை காலத்தில் அதிகாலை 5 மணிக்கு எழும் பழக்கத்தை மேற்கொள்வது நல்லது. வெயில் வரும் முன்னே சமையல், வீட்டு வேலைகளை பெண்கள் முடித்துவிடுவது நல்லது.

★ முதலில் உடலை இறுக்காத பருத்தி ஆடைகளை அணியவேண்டும். அந்த ஆடைகளின் நிறங்கள் வெண்மை கலந்தனவாக இருப்பது நல்லது. கறுப்பு, சிவப்பு மற்றும் பளிச் நிறங்கள் சூரிய ஒளியை உள்வாங்கும். இதனால் இவற்றைத் தவிர்ப்பது நல்லது.

★ அதிக நீர் அருந்த வேண்டும். இடைவெளி விட்டு நீர் அருந்துவது நல்லது. வெயிலின் தாக்கத்தால் உடலிலிருந்து அதிகளவு வியர்வை வெளியேறும். இதனால் உடலின் நீர்ச்சத்து குறைந்துவிடும். நீர் எரிச்சல், நீர் கடுப்பு போன்றவை உருவாகும்.

★ குளிர்பானங்கள் அருந்துவதை தவிர்த்து நீரை அருந்த வேண்டும். வெயிலில் அலைந்து வந்தவுடன் நீர் அருந்தக் கூடாது. எவ்வளவு தாகம் இருந்தாலும் 10 நிமிடம் கழித்து அருந்துவது நல்லது.

★ இளநீர், பனை நுங்கு உடல் வெப்பத்தைத் தடுத்து உடலுக்கு சக்தியைக் கொடுக்கும்.

★ தண்ணீரைக் கொதிக்க வைக்கும்போது அதில் சீரகம் கலந்து கொதிக்க வைத்து ஆறியபின் அருந்தலாம்.

★ கோடை காலத்தில் காலை உணவாகத் தோசை, ரொட்டி ஆகியனவற்றைத் தவிர்ப்பது நல்லது. காலையில் இட்லி, ஓட்ஸ் அல்லது கேழ்வரகு போன்றவற்றைக் கஞ்சியாக செய்து சாப்பிடலாம். இதனால் உண்ட உணவு எளிதில் ஜீரணமாகும்.

★ மதிய உணவில் அதிக காரம், புளி சேர்க்காமல் நீர்ச்சத்து நிறைந்த உணவுகளை சாப்பிடுவது நல்லது. பூசணிக்காய், சுரக்காய், வெள்ளரிக்காய் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

★ வாய்வைத் தூண்டும் உணவுகளை தவிர்த்தல் நலம். இரவு உணவு மென்மையாக இருக்க வேண்டும். எளிதில் ஜீரணமடையும் உணவுகளை உண்பது நல்லது.

★ தினமும் இருமுறை குளிப்பது நல்லது. வெயிலில் இருந்து திரும்பியவுடன் குளிக்கக்கூடாது.

★ வெளியில் செல்லும்போது முகம், கை, கால்களில் லேசாக எண்ணெய் தேய்த்துக்கொள்ளலாம். இதனால் சருமம் வறட்சியடையாமல் இருக்கும்.

★ வாரம் இருமுறை எண்ணெய் தேய்த்துக் குளிப்பது நல்லது.

★ நீரிழிவு நோயாளிகள் கோடை காலத்தில் அதிகம் வெயிலில் அலைவதைத் தவிர்க்க வேண்டும். கை கால்களுக்கு எண்ணெய் தடவ வேண்டும். உடலில் நீர்ச்சத்து குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

★ படுக்கையறை நன்கு காற்றோட்டமானதாக இருக்க வேண்டும். பருத்தியினால் தயாரிக்கப்பட்ட விரிப்புகளை பயன்படுத்துவது நல்லது.

★ வெளியே செல்லும்போது கறுப்பு நிற குடைகளைத் தவிர்த்து வெண்மை நிறக் குடைகளைப் பயன்படுத்துவது நல்லது. வெண்ணிற குடைகள் சூரிய வெப்பத்தை உள்வாங்காது.

# இமயமலைப் பகுதியில் வாழும் பனி மனிதர்கள்

இமய மலைப்பகுதியில் பல ஆச்சரியங் களும் அமானுஷ்யங்களும் இருப்பதாக நம்பிக்கை உண்டு. ஆனாலும் அங்கு இன்று வரையிலும் முழுமையாக ஆய்வுகள் செய்யப்படவில்லை.

இந்த நிலையில் இன்றும் இமய மலைப் பகுதியில் பனி மனிதர்கள் வாழ்ந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

இந்தப் பனி மனிதர்கள் தொடர்பில் பல்வேறு விதமான சர்ச்சைகள் தொடர்ந்து கொண்டே வருகின்றன. அதாவது அறிவியல் சார்ந்த ஒரு சிலர் இதனைப் பொய் என்று கூறுகின்றனர்.


ஆனாலும் நியண்டர்தால் எனப் படும் பனி மனிதர்கள் சுமார் 350,000 ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பாவில் வாழ்ந்தவர்கள். அடிப்படையில் அவர்கள் எம் மூதாதையர்கள்.

டாவின்சியின் கொள்கைப்படி பரிணாம வளர்ச்சி இப்போது மனிதன் வரை வளர்ந்துள்ளது. அதன்படி பரிணாமம் அடையாத உயிரினங்கள் இன்றும் இருக்கின்றன.

அப்படியாக பரிணாமம் அடையாத நியண்டர்தால் எனப்படும் இனத்தைச் சேர்ந்த பனிமனிதர்கள் இன்றும் இமய மலைப் பகுதியில் இருக்க முடியும் என்பதும் ஆய்வாளர்களின் கருத்து.

இதேவேளை இமயமலையைச் சுற்றியுள்ள கிராமப் பகுதி மக்களும் சுமார் 8 அடிக்கும் மேல் உயரம் மிக்க மனித குரங்குவடிவிலான மனிதர்களை இமயமலையில் தாம் கண்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

மேலும் பல்வேறு சுற்றுலாப் பயணிகள், மற்றும் தொல்பொருள் ஆய்வாளர்களும் பனி மனிதர்களைக் கண்டுள்ளனர் என்பதற்கான புகைப்பட ஆதாரங்களை வெளியிட்டுள்ளனர்.



அதன் படி ஆய்வு செய்த ஆய்வாளர்கள் இமய மலைப்பகுதியில் அதனை மெய்ப்பிக்கக் கூடிய வகையில் மண்டை ஓடுகளும், எலும்புகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட மரபணுச் சோதனையில் அவை நியண்டர்தால் இனத்தைச் சேர்ந்த உயிரினங்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.


ஒருபக்கம் சமயம் சார்ந்த நம்பிக்கைகளில் இமயமலையில் சித்தர்களும், கடவுள்களும் வசிக்கின்றனர் என்று கூறப்படுகின்றது. ஆனால் உண்மையில் அங்கு வாழ்பவர்கள் யார்?

புராணக்கதைகளில் கூறப்பட்ட வானரங்களுக்கு ஒப்பான இராட்சத உயிரினங்கள் இன்றும் வாழ்கின்றனரா? இந்தக் கேள்விக்கு ஆய்வாளர்கள் கூடிய விரைவில் பதில்களைக் கூறுவார்கள்.

இந்த உண்மைகள் கண்டறியப் படும் எனின் இன்றுவரை சர்ச்சைக்குரிய விடயமாக உள்ள டாவின் சியின் பரிணாமக் கொள்கைக்கு விடைகள் கிடைக்கும் என்பதால் ஆய்வுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.









# அனைவரையும் கவர்ந்த அசாதாரண பனிப்பாறை

அசாதாரணமான பனிப்பாறை ஆழமற்ற நீரில் சிக்கியிருந்த காட்சியால் நியுபவுன்லாந்தின் தென் கரையோர நெடுஞ்சாலை முழுவதும் போக்குவரத்துத் தடைப்பட்டது. நியுபவுன் லாந்தில் அவலொன் தீபகற்பத்தில் வெறிலொன்ட் கரையில் இந்த ரம்மியமான காட்சி தோன்றியது.

ஈஸ்டர் நீண்ட வார இறுதி தொடக்கம் மக்கள் கூட்டம் சொரிந்த வண்ணம் இருந்ததாகக் கூறப்படுகின்றது. பனிப்பாறையின் அதி உயரம் 46 மீற்றர்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. பனிப்பாறை சற்று நகர்ந்து உடைந்துள்ள போதிலும் அவ்விடத்தை விட்டு விரைவில் அகலும் என்று தெரியவில்லை எனக் கூறப்படுகின்றது.

காகம் வளர்ப்பின் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்தும் விதமாக லண்டனில் காகங்கள் உணவருந்த உணவகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

லண்டனைச் சேர்ந்த சார்ளஸ் கில்மோர் என்பவர் காகங்களின் மீது அதீத அன்பு கொண்டவர். இதன் காரணமாக, காகங்கள் உணவருந்துவதற்காக உணவகம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

அதில், காகங்களின் உணவான புழுக்கள் மற்றும் கரப்பான் பூச்சிகள் வைக்கப்பட்டுள்ளன.

மேலும் அந்த உணவகத்தை வேடிக்கை பார்க்க வரும் பொது மக்களுக்கு காகம் வடிவிலான பிஸ்கெட்டை தயாரித்துக் கொடுத்து வருகிறார்.



# காகங்கள் உணவருந்த லண்டனில் உணவகம்

# 3,500 ஆண்டுகள் பழைமை வாய்ந்த மம்மிகள் எகிப்தில்!

எகிப்தின் லச்சர் நகர் அருகே உள்ள பழங் கால கல்லறையில் இருந்து 8 மம் மிகளை தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

எகிப்தின் பண்டைய கால நாகரீகத்தில் அரச குடும் பங்களைச் சேர்ந்தவர்களின் உடல்களை பெரிய கல்லறைக்குள் பாதுகாப்பாக வைப்பது வழக்கம். இந்த உடல்கள் மம்மி என்று அழைக்கப்படுகின்றன.

தற்போது இது தொடர்பான ஆராய்ச்சிகள் எகிப்தில் நடந்த போது அதன் லக்சார் நகரத்தில் சுமார் 3500 ஆண்டுகள் பழைமை வாய்ந்த கல்லறையிலிருந்து 8 மம்மிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இது முக்கிய அரச குடும்பத்தின் மம்மியாகும்.

மம்மிகளுடன் சேர்ந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட பழங்கால பொருள்கள், மரத்தால் செய்யப்பட்ட வர்ணம் தீட்டிய பெட்டிகள், ஆயிரத்துக்கும் அதிகமான இறுதிச் சடங்குகளுடன் தொடர்புடைய சிலைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

எகிப்திய மம்மிகள் குறித்த ஆராய்ச்சியில், இந்த கண்டு பிடிப்பு முக்கியமானதாகக் கருதப் படும் நிலையில் இது தொடர்பான ஆராய்ச்சிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

*எகிப்தின் பண்டைய கால நாகரீகத்தில் அரச குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் உடல்களை பெரிய கல்லறைக்குள் பாதுகாப்பாக வைப்பது வழக்கம். இந்த உடல்கள் மம்மி என்று அழைக்கப்படுகின்றன.*







# தொழில்நுட்பக்கதிர்

## கூகுள் அறிமுகம் செய்யும் Copyless Paste வசதி



கணினியை கையாளும்போது கண்டிப்பாக Copy, Paste வசதி பயன்படுத்த வேண்டிய அவசியம் அதிக இடங்களில் இருக்கும்.

Copy, Paste எனும் இந்த இரண்டு செயற்பாட்டையும் Copyless Paste எனும் ஒரே செயற்பாடாக மாற்றும் முயற்சியில் கூகுள் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

தனது இயங்குதளத்தை அன்ராயிட்டின் குரோம் உலாவியிலேயே இந்த வசதி முதன் முறையாக அறிமுகம் செய்வதற்கு தீர்மானித்துள்ளது.


இது தொடர்பான பரீட்சார்த்த நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ் வசதி பயனுள்ள தகவல்களை தானாகவே Copy செய்வதுடன் அதனை Paste செய்வதற்காக பரிந்துரைக்கும்.

பயனர் தேவைப்படின் பரிந்துரைக்கு ஏற்ப குறித்த சொல்லை Paste செய்ய முடியும்.

இந்த வசதி உத்தியோகபூர்வமாக கூகுள் குரோமின் 60 ஆவது பதிப்பில் உள்ளடக்கப்படும் எனக் கூறப்படுகின்றது.

## மொழிப் பிரச்சினைகளுக்கு தீர்வாக புதிய சாதனம் அறிமுகம்








பல நாடுகளுக்குச் செல்பவர்கள் மொழி தெரியாமல் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இப் பிரச்சினைக்குத் தீர்வாக ட்ராவிஸ் எனும் மொழிமாற்றிச் சாதனம் அறிமுகமாகியுள்ளது.

ட்ராவிஸ், மொபைல் போன்று சிறிய வடிவம் கொண்டதாகும். நிகழ்நேர முறையில் மொழிமாற்றம் (Real Time Translator) செய்யக்கூடிய வகையில் ட்ராவிஸ் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் 80 வகையான மொழிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நம் மொழியில் சொல்லும் வார்த்தையை பிற மொழிகளில் அழகாக மாற்றம் செய்து கொடுக்கும் திறன் உடையது. இதுபற்றி இண்டிகோகோ (Indiegogo) எனும் இணையத் தள பக்கத்தில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

## Motorola வின் புதிய கைபேசி



முன்னணி ஸ்மார்ட் கைபேசி வடிவமைப்பு நிறுவனங்களுள் ஒன்றான Motorola, Moto G5 எனும் ஸ்மார்ட் கைபேசியை அண்மையில் அறிமுகம் செய்திருந்தது.

5 அங்குல அளவு கொண்டதும், 1920 x 1080 Pixel Resolution உடைய தொடுதிரையைக் கொண்ட இக் கைபேசி Snapdragon 430 Processor மற்றும் பிரதான நினைவகமாக 2GB RAM, 16GB சேமிப்பு நினைவகம் என்பவற்றைக் கொண்டு வடிவமைக் கப்பட்டுள்ளது.

இவை தவிர 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பவற்றையும் கொண்டுள்ளது இந்தக் கைபேசி.

## ZTE அறிமுகம் செய்யும் புதிய கைபேசி




சிறந்த கைபேசிகளை வடிவமைத்து அறிமுகம் செய்து வரும் ZTE நிறுவனம் மற்றுமொரு புதிய ஸ்மார்ட் கைபேசியை அறிமுகம் செய்யவுள்ளது.

ZTE Prestige 2 எனும் இக் கைபேசி 5 அங்குலத்தை உடையதும், FWVGA தொழில் நுட்பத்தைக் கொண்டதுமான திரையைக் கொண்டுள்ளது. இதில் 1GHz வேகத்தில் செயல் படக்கூடிய Quad Core Processor, பிரதான நினைவகமாக 2GB RAM, 16 GB சேமிப்பு நினைவகம் என்பன தரப்பட்டுள்ளன.

மேலும் இதன் சேமிப்பு microSD கார்ட்டின் உதவியுடன் 32GB வரை அதிகரிக்கும் வசதியும் காணப்படுகின்றது. மேலும் தலா 5 மெகாபிக்சல் களைக் கொண்ட பிரதான கமெரா மற்றும் வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா, 2035 mAh மின்கலம் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## Google Map தரும் புதிய வசதி



Google அறிமுகம் செய்யப்பட்ட Google Map சேவையை இன்று மில்லியன் கணக்கான பயனர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த அப்பிளிக்கேஷனில் புதிய வசதி ஒன்றை Google நிறுவனம் உட்புகுத்தியுள்ளது.

அதாவது, தமது வாகனங்களை நிறுத்தி (park) விட்டு அந்த இடத்தை மறந்து விடுபவர்களுக்காக இந்த வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி காரை நிறுத்தி வைத்திருக்கும் இடத்தையும் ஞாபகப்படுத்தி விடுகின்றது.


இவ் வசதி iOS மற்றும் Android சாதனங்களுக்காக அறிமுகம் செய்யப்பட்ட கூகுள் மேப் அப்பிளிக்கேஷனின் புதிய பதிப்பில் கிடைக்கின்றது.

மேலும் நிறுத்திய இடத்தின் புகைப்படத்தைச் சேமித்து வைத்திருப்பதுடன் வாகனம் நிறுத்தப்பட்ட இடத்தை நண்பர்களுக்கு அனுப்பும் வசதியும் காணப்படுகின்றமை விசேட அம்சமாகும்.

காலைக்கதிர்



# இலங்கையில் பாரதி




● முருகபூபதி - ஆஸ்திரேலியா


கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் (மாஸ்கோ) முன்னாள் வடபிரதேச செயலாளரும், கருத்து முரண்பாட்டினால் அதிலிருந்து விலகி **செந்தமிழர் இயக்கம்** என்ற அமைப்பை சிறிதுகாலம் நடத்திவிட்டு, தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஐக்கியமான வி.பொன்னம்பலம் இலங்கையில் மிகவும் எளிமையான அரசியல் தலைவர்.

முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரி, யாழ். ஸ்கந்தவரோதயா கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியர். யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான கல்விமான் ஒரேற்றர் சுப்பிரமணியத்தின் மீது அளவற்ற மரியாதை கொண்டிருந்தவர்.

இலங்கையில் 1983 நடுப்பகுதி வன்செயல்களுக்குப் பின்னர் தமிழகம் சென்று, அங்கிருந்து கனடாவுக்கு புலம்பெயர்ந்து ஒட்டாவா மாநிலத்தில் வாழ்ந்தார்.

கனடாவில் நடந்த ஒரேற்றர் சுப்பிரமணியம் நினைவுக்கூட்டம்தான் அவரது இறுதிக்கூட்டமாக அமைந்தது. அந்தக் கூட்டத்தில் அவர் உரையாற்றும்போதே மாரடைப்பு வந்து காலமானார்.

தோழர் வி.பி என கம்யூனிஸ்ட் கட்சியிலும் இதர இயக்கங்கள், கட்சிகளிலும், இலக்கிய அமைப்புகளிலும் அழைக்கப்பட்டவர். அவரின் சிம்மக்குரல் புலம்பெயர் மண்ணில் ஓய்ந்தது.



தராக்கி சிவராம்

இலங்கைத் தலைநகரில் அந்தக் குரலை இறுதியாக பாரதி நூற்றாண்டு மேடையிலேயே 20-03-1983 ஆம் திகதியன்று கேட்டோம்.

வி.பொன்னம்பலம் அன்று உரையாற்றுகையில், ''பாரதிக்கு இன்று நாம் நூற்றாண்டு விழா கொண்டாடுகின்றோம். நூறு ஆண்டுகள் கடந்துவிட்டன. அவரது கனவுகள் நனவாகிவிட்டனவா...? அவர் "தனிமனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினையே அழித்துவிடுவோம்" என்றார். அவர் வாழ்ந்த நாடு உட்பட இதர தேசங்கள் உணவில் தன்னிறைவு கண்டுவிட்டனவா...? தனிமனித சுதந்திரம் பெற்றுவிட்டோமா...? அவர் கண்ட கனவெல்லாம் நனவாகவேண்டும் என்றே காலங்காலமாக பாரதி பற்றிப்பேசும்போதெல்லாம் சொல்லிவருகின்றோம். அவரது கனவுகள் இன்றும் கேள்விகளாகவே தொடருகின்றன.'' என்றார்.

இக்கூட்டத்தில் எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் உரையாற்றுகையில்,''தமிழக மண்ணில் பிறந்த பாரதியை உலகமெல்லாம் கொண்டாடுகின்றோம். அதற்கு அவரிடமிருந்த சிந்தனைகள்தான் முக்கிய



Late Prof S.Vithiyananthan

காரணம். அதிலும் பிரதானமானது பெண்ணியம் சார்ந்து அவர் பேசியதும் எழுதியதும் தான். பெண்கள் கல்வியில் முன்னேறவேண்டும், அறியாமையிலிருந்து மீண்டெழ வேண்டும் என்றெல்லாம் அறைகூவல் விடுத்தவர். வீடும் நாடும் நன்மைபெறுவதற்கு பெண்கள் மீதான தடைகள் களையப்படவேண்டும் எனச் சொன்னவர் பாரதி. ஒரு தேசத்தின் முன்னேற்றம் அங்கு வாழும் பெண்களின் நிலையில்தான் பெரிதும் தங்கியிருக்கிறது என்று அன்றே சொன்ன தீர்க்கதரிசி அவர்'' என்றார்.

தொ.மு.சி. ரகுநாதன் உரையாற்றுகையில், ''இந்தியாவில் இமயம் முதல் குமரிவரையில் பாரதிக்கு விழா எடுத்திருக்கின்றோம். தமிழகத்தில் அவர் பிறந்த எட்டயபுரத்தில் மணிமண்டபம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர்தான் அவர் காலத்திற்கு முந்திய கம்பருக்கும் திருவள்ளுவருக்கும் இளங்கோவுக்கும் மணிமண்டபங்கள் நிர்மாணிக்கப்பட்டன.'' என்றார்.


பாரதி கவிதைகளை சிங்களத்தில் மொழிபெயர்த்திருக்கும் தமிழ் அபிமானி கே.ஜி. அமரதாச பேசுகையில், ''சிங்கள மக்கள் மத்தியில் பாரதியை அறிமுகப்படுத்தியதே எனது வாழ்வில் நான் பெற்ற பெரிய பாக்கியமாகும். பாரதி தமிழில் எழுதியிருந்தாலும், அவரது சிந்தனைகள் அனைத்து இனங்களுக்கும் தேசங்களுக்கும் பொதுவானவை. இனம், மொழி, தேசம், பொருளாதாரம் பற்றியெல்லாம் கவிதையில் - கட்டுரையில் எழுதியவர். அவை யாவும் எமது சிங்கள இனத்திற்கு மட்டுமல்லாமல் உலகத்தவர் அனைவருக்கும் பொதுவானதாகவே அமைந்திருப்பதனால்தான் அவர் உலக மகாகவியாக போற்றப்படுகிறார்.'' என்றார்.

அந்தப்பொதுக்கூட்டத்தில் சிங்கள அறிஞர்களும் சிங்கள மக்களும் அமர்ந்திருந்தமையால் தாம் சிங்களத்தில் மொழிபெயர்த்த சில பாரதி கவிதைகளையும் அமரதாச பாடினார்.

பேராசிரியர் இராமகிருஷ்ணன் உரையாற்றுகையில், ''தமிழ்க் கவிஞர் பாரதி தற்பொழுது அனைத்திந்திய மொழிகளிலும் சிங்களம், ஆங்கிலம், ரஷ்யா, செக் உட்பட ஐரோப்பிய மொழிகளிலும் அறியப்பட்டிருக்கிறார். மொழி, இனம், தேசம் கடந்து அவர் தமது அற்பாயுளில் சிந்தித்திருப்பது பேராச்சரியம். அவரது தீர்க்கதரிசனம் அனைவருக்கும் முன்மாதிரியானது. அவர் உலகெங்கும் தொடர்ந்து பேசப்படுவார். இந்த நூற்றாண்டு உலக வரலாற்றில் ஒரு மகாகவிஞனின் பாதையில் ஒரு சந்தி மாத்திரமே. இன்னும் தொடர்ந்து பல நூற்றாண்டுகள் பாரதி பேசப்படுவார்.'' என்றார்.

தலைநகரில் பாரதி நூற்றாண்டு நிகழ்ச்சிகள் நிறைவுற்றதையடுத்து, நாட்டின் இதர பாகங்களில் நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளிலும், அட்டாளைச்சேனை, மட்டக்களப்பு, கல்முனை, கண்டி, வவுனியா, யாழ்ப்பாணம் முதலான நகரங்களில் நடந்த பாரதி விழாக்களிலும் தமிழகப்பேச்சாளர்கள் கலந்துகொண்டனர்.

கொழும்பில் அன்றைய



LatePoobalasingam

எதிர்க்கட்சித்தலைவர் அ. அமிர்தலிங்கம், தமிழகப் பேச்சாளர்களை ஸ்ரீஜயவர்தன புரவில் அமைந்திருக்கும் புதிய நாடாளுமன்றத்திற்கு அழைத்து அச்சமயம் அங்கு நடந்துகொண்டிருந்த வரவு - செலவு (பட்ஜெட்) விவாதத்தையும் பார்வையிடச்செய்ததுடன் தமது சார்பில் மதிய விருந்தும் வழங்கினார்.

பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார அமைச்சர் செ.இராசதுரையும் தமது அமைச்சின் பணிமனைக்கு அழைத்து உபசரித்தார். கம்யூனிஸ்ட் கட்சி பொதுச்செயலாளர் பீட்டர் கெனமனும் பொரளையில் அமைந்திருக்கும் கட்சித்தலைமையலுவலகத்திற்கு வரவேற்று தேநீர் விருந்துபசாரம் வழங்கினார்.

கொழும்பில் சைவ முன்னேற்றச்சங்கம் மறைந்த நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா - திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் நினைவு தினம் நடைபெற்ற வேளையில் பேராசிரியர் எஸ். இராமகிருஷ்ணன் ''கம்பன் கண்ட மானுடம்'' என்ற தலைப்பில் உரையாற்றினார். ஜிந்துப்பிட்டி சுப்பிரமணிய சுவாமி கோயில் அறங்காவலர் வி.ரி. தெய்வநாயகம்பிள்ளை அவர்கள் ஒழுங்குசெய்த நிகழ்ச்சியில் இராமகிருஷ்ணனும் ரகுநாதனும் பாரதியின் சமய உணர்வு - ஆன்மீக உணர்வு பற்றி அறிவியல்பூர்வமாக உரையாற்றினர். இங்கு அவர்கள் விவேகானந்தரின் சிந்தனைகளை பாரதியின் எண்ணங்களுடன் ஒப்பிட்டு, பாரதியின் பால் பாசம் கொண்டிருந்த நிவேதிதாதேவி பற்றியும் உரையாற்றினர். பெண் விடுதலை பற்றிய கருத்தியலை பாரதியிடம் புகுத்தியவர் நிவேதிதாதேவி.

கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் கலை இலக்கியப் பத்திரிகை நண்பர்கள் அமைப்பு ஒழுங்குசெய்திருந்த கவிஞர் நீலாவணனின் வேளாண்மை - குறுங்காவியம், கல்வயல் குமாரசாமியின் சிரமம் குறைகிறது - கவிதை ஆகிய நூல்களின் வெளியீட்டு நிகழ்ச்சியில் இராமகிருஷ்ணன் உரையாற்றினார்.

தமிழகப் பேச்சாளர்கள், கொழும்பில் சில பத்திரிகையாளர் சந்திப்புகளிலும் கலந்துகொண்டனர்.

இலங்கைக்கு வருகைதரும் தமிழகப் பேச்சாளர்களுக்கு இங்கிருக்கும் அன்பர்கள் வழங்கும் வரவேற்பும் உபசரிப்பும் வந்தவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கியது. இலங்கைத் தமிழர்கள் உபசரிப்பதில் முன்னணியில் திகழ்பவர்கள் என்ற பாரம்பரியம் அவர்களின் அந்நிய புலப்பெயர்விலும் நீட்சிபெற்றுள்ளது.

''பாரதி சிங்களத்தீவிற்கு பாலம் அமைப்போம் என்றார். இலங்கைத் தமிழர்கள் உபசரிப்பால் இந்தியாவுக்கு பாலம் அமைத்து பெருமைபெற்றவர்கள்'' என்ற தொனி வந்திருந்த தமிழக பாரதியியல் ஆய்வாளர்களிடமிருந்து உதிர்ந்தது.

1983 மார்ச் மாதம் 23



அமரர் வி.தருமலிங்கம்

ஆம் 24 ஆம் திகதிகளில் கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியிலும், அட்டாளைச்சேனை மற்றும் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் மட்டக்களப்பு நகர மண்டபத்திலும், நூல் நிலையத்திலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் தொ.மு.சி ரகுநாதன், சுபைர் இளங்கீரன், முருகபூபதி ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப்பேரவையும் மாநகரசபையும் இணைந்து நகர மண்டபத்தில் நடத்திய விழாவில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் பாரதியின் உருவப்படம் வைக்கப்பட்டிருந்தது. இந்த



எம்.எச்.எம். அஷ்ரப்

நீண்ட ஊர்வலம் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் தொடங்கி நகரமண்டபத்தில் முடிவடைந்தது.

இந்த நிகழ்ச்சிகளுக்கு பின்னிருந்து உழைத்தவர்களான எழுத்தாளர்கள் எதிர்மன்னசிங்கம், அன்புமணி, மருதூர்க்கொத்தன், மருதூர்க்கனி ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர்கள். நீதியரசர் பாலகிட்ணர், மட்டக்களப்பு அரசாங்க அதிபர் அந்தோனிமுத்து, கவிஞரும் சட்டத்தரணியுமான அஷ்ரப், மற்றும் சிவராம், பஷீர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அஷ்ரப் பின்னாளில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை உருவாக்கி அமைச்சராகவும் பதவி வகித்தவர். சிவராம், தராக்கி என்ற பெயரில் பிரபல ஊடகவியலாளரானார். இவர்கள் இருவரும் அரச அதிபர் அந்தோனிமுத்துவும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கொல்லப்பட்டனர். பஷீர் இங்கிலாந்திலிருந்து எழுதிக்கொண்டிருக்கிறார். நீதியரசர் பாலகிட்ணர், அன்புமணி, மருதூர்க்கொத்தன், மருதூர்க்கனி, சுபைர் இளங்கீரன், ரகுநாதன், இராமகிருஷ்ணன், ராஜம் கிருஷ்ணன் ஆகியோர் மறைந்துவிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் 25-03-1983 ஆம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த விழாவுக்கு மானிப்பாய் எம்.பியான வி. தருமலிங்கம் தலைமை தாங்கினார். இவர் இலங்கை - சோவியத் நட்புறவுச்சங்கத்திலும் இணைந்திருந்தவர். இன்று நாடாளுமன்றில் எம்.பியாக இருக்கும் சித்தார்த்தனின் தந்தையார்.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், கலை இலக்கிய வாதிகள் பெருந்திரளில் கலந்துகொண்ட இவ்விழாவையடுத்து மறுநாள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மத்தியில் நடைபெற்ற நிகழ்ச்சியிலும் தமிழகப் பேச்சாளர்கள் உரையாற்றினார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

(18 ஆம் பக்கம் பார்க்க)

### இறைவனின் இரக்கம் என்றென்றும் உள்ளது

'இறைவனின் இரக்கம் என்றென்றும் உள்ளது. மூடிய கதவுகளுக்கு முன்னரும் அது சலிப்பின்றி நிற்கிறது. தந்தையின் இரக்கம் என்ற கிணற்றிலிருந்து இவ்வுலகிற்கு இரக்கத்தை அள்ளிச் செல்வதில் நாம் களைப்படையாமல் இருக்கும் வரத்திற்காக வேண்டிக்கொள்வோம்'.

காலைக்கதிர்
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

### திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் தகுதி பெற்ற கர்தினால்களின் எண்ணிக்கை இன்று 117

தனது 80 ஆவது வயதில் இறையடி சேர்ந்த கர்தினால் நிக்கோராவின் மறைவையடுத்து திருஅவையில் கர்தினால்களின் எண்ணிக்கை 222 ஆகவும் இவர்களில் திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் தகுதி பெற்ற கர்தினால்களின் எண்ணிக்கை 117 ஆகவும் உள்ளது.

# முன்னாள் ஆயர் தியோகுப்பிள்ளை பெயரில் கட்டடம் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் யாழ்.ஆயர் திறப்பு



யாழ் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் மறைந்த முன்னாள் ஆயர் தியோகுப்பிள்ளை கட்டடத்தை யாழ். ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை 27 ஏப்ரல் 2017 அன்று திறந்து வைத்தார். இவ்விடயம் தொடர்பாக யாழ் புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி அதிபர் அருள்திரு கலாநிதி ரீ.ஜே. கிருபாகரன் அடிகளார் 'காலைக்கதிர்' கிறிஸ்தவ செய்தி இதழுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது நீண்ட கால கனவாகவும் தேவையாகவும் இருந்த இந்த கட்டடத் தொகுதி இப்போது நனவாகியுள்ளது. இந்த புதிய கட்டடத் தொகுதியில் ஆயர் தியோகுப்பிள்ளை கட்டிடம் இறையியல் அருட்சகோதரர்களின் வதிவிடமாகவும் யோய் கிறிஸ்சோஸ்திரம் அரங்கம் மற்றும் நூல் நிலையத்தின் தொடர்ச்சியாக கற்றல் பகுதி வழங்குநர் பகுதி என்பனவும் அமைந்துள்ளன. 2015ஆம் ஆண்டு அடியிடப்பட்ட இக் கட்டடத் தொகுதியை யாழ் ஆயர் திறந்து வைத்துள்ளார் என்றார். யாழ்.மறை மாவட்ட குருத்துவ உருவாக்கலின் உயர் பீடமாக யாழ் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி விளங்குகிறது. 1983ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற இனக் கலவரத்தின் பின்னர் முழுமையான குருத்துவப்பயிற்சியும் இங்கேதான் வழங்கப்படுகிறது. இக்குருத்துவக் கல்லூரியை ஆயர்கள் தமது முதல் கவனத்தில் வைத்திருக்கின்றனர். ஓய்வுநிலை ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் தற்போது ஆயர்மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையும் இந்த வேளையில் நன்றியோடு நினைவு கூரப்பட வேண்டியவர்கள்.



## உண்மையின் எண்ணங்கள்

### யாழ் மறைமாவட்டத்தின் இதயம் கொழும்புத்துறை சவேரியார் குருத்துவக் கல்லூரி

யாழ் மறைமாவட்டத்தின் இதயமாகிய கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரி கடந்த 37 ஆண்டுகளாக (1980-2017) யாழ் மறைமாவட்டத்தின் குருத்துவ உருவாக்கலின் உயர் பீடமாகத் திகழ்ந்து 234 இற்கும் அதிகமான குருக்களை உருவாக்கித் தொடர்ந்தும் வீறுநடை போட்டுக்கொண்டிருக்கிறது. ஒக்ரோபர் மாதம் 1995ஆம் ஆண்டு இடம்பெற்ற பெரும் இடப்பெயர்வில் புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியானது மிருசுவில் - கிளிநொச்சி - மடு எனப் பல இடங்களுக்கு அலைய வேண்டியதாயிற்று. பின்னர் 2000ஆம் ஆண்டில் திரும்பவும் இடம் பெயர்ந்து பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் தங்கியிருந்தபின் 2002ஆம் ஆண்டு கொழும்புத்துறை திரும்பியது. போர் முடிந்து தற்போது குருத்துவ உருவாக்கலிலும் கட்டட அமைப்பிலும் முன்னேறி வரும் குருமடத்தை இயக்கி வரும் யாழ் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் அருள்திரு கலாநிதி ரீ.ஜே. கிருபாகரன் அடிகளார் மற்றும் குருத்துவ பயிற்றுவிப்பாளர்கள் அனைவரையும் 'காலைக்கதிர்' கிறிஸ்தவ செய்தி இதழ் வாழ்த்தி மகிழ்கிறது.

# ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலய வளாகத்தில் குடிதண்ணீர் சுத்திகரிப்பு தொகுதி அங்குரார்ப்பணம்



தீவுப் பகுதியின் தண்ணீர் பஞ்சத்தை சிறுவயது முதல் அனுபவ ரீதியாக உணர்ந்தவர் தீவுப் பகுதி மண்ணின் மைந்தர் யாழ். ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அண்மையில் வாழ்த்திப் பாராட்டப்பட வேண்டிய ஒரு பணியைச் செய்துள்ளார். யாழ் ஆயரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக கடற்படையினரால் ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலய வளாகத்தில் மார்ச் 2017 இல் ஆரம்பிக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதி அமைக்கும் வேலைத்திட்டப்பணிநிறைவு செய்யப்பட்டு 16 ஏப்ரல் 2017 ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா அன்று யாழ்.ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் வடபகுதி கடற்படைத்தளபதி மற்றும் கடற்படை அதிகாரிகள், குருக்கள், மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

# உயிர்ப்புப் பெருவிழாவை அடுத்துவரும் 'வெள்ளைஞாயிறு' பாரம்பரியத்தின் பின்னணியை விளக்கினார் திருத்தந்தை

உயிர்ப்புப் பெருவிழாவுக்கு அடுத்துவரும்ஞாயிறு 'வெள்ளை ஞாயிறு' என அழைப்பதன் பின்னணியை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் விளக்கினார். புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அல்லேலூயா வாழ்த்தொலி உரை வழங்கிய திருத்தந்தை உயிர்ப்பு பெருவிழாவன்று திருமுழுக்கு பெற்றவர்கள் தொடர்ந்து ஏழு நாள்கள் வெள்ளை உடையணிந்து வந்தனர் என்றும் உயிர்ப்புக் காலத்தின் 2ஆம் ஞாயிறன்று தங்கள் வெள்ளை உடையைக் களைந்து வேற்று உடைகளுடன் இறைமக்களின் குழுமத்தில் ஒருவராக இணைந்தனர் என்றும், 'வெள்ளை ஞாயிறு' பாரம்பரியத்தைக் குறித்து விளக்கமளித்தார். மேலும் இந்த ஞாயிறை இறை இரக்கத்தின் ஞாயிறாக, திருத்தந்தை புனித 2ஆம் ஜோன்போல் அவர்கள் நிறுவியுள்ளதைக் குறித்தும் தன் உரையில் எடுத்துரைத்தார்.

# முதல்தடவையாக யாழ்ப்பாணம் வந்த நெடுந்தீவு ஆரம்பப் பாடசாலை மாணவர்கள்



கியூடெக் கரித்தாஸ் இயக்குநர் எஸ். இயூஜின் பிரான்சீஸ் அடிகளாரின் திட்டமிடலிலும் அனுசரணையிலும் நெடுந்தீவு ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் 21 ஏப்ரல் 2017 அன்று தங்கள் ஆசிரியர்களின் துணையுடன் யாழ்ப்பாணத்திலுள்ள முக்கிய இடங்களுக்கு ஒரு 'சுற்றுலாவை மேற்கொண்டனர். யாழ்ப்பாணத்திற்கு முதற் தடவையாக வருகை தந்த நெடுந்தீவு ஆரம்ப பாடசாலை மாணவர்களின் மறக்கமுடியாத நினைவுகளை பதிவு செய்யும் படம் இது.

# இரக்கம் குறித்து வலியுறுத்தும் திருத்தந்தையர்கள்

திருத்தந்தை புனித 2 ஆம் ஜோன்போல் அவர்களும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் தங்கள் சொந்த நாடுகளில் இடர்கள் நிறைந்த சமுதாயச் சூழலில் வளர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் இருவரும் இறைவனின் இரக்கம் குறித்து வலியுறுத்தி வருவது வியப்பைத் தரவில்லை. உயிர்ப்பின் வழியே இறைவனின் இரக்கம் சக்தி மிகுந்த வகையில் வெளியாகிறது என்பதை உணர்த்தும் வகையில் இறை இரக்க ஞாயிறை உயிர்ப்பு ஞாயிறுக்கு அடுத்த ஞாயிறாக திருத்தந்தை புனித 2ஆம் ஜோன்போல் அறிவித்தார். இறைவனின் நீதியை விட அவரது இரக்கம் மென்மையான பண்பு என்பதைத் திருமடலில், திருத்தந்தை புனித 2ஆம் ஜோன்போல் அவர்கள் கூறியுள்ளதை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பலமுறை தன் உரைகளிலும் மடல்களிலும் பயன்படுத்தியுள்ளார் என போலந்து நாட்டு அருள்பணியாளர் வத்திக்கான் வானொலிப்பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர், 891 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0777165147, info@tcnlnet.com

காலைக்கதிர்
Kalaikkathir





# ஊர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

# திட்டமிட்டு சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டு வரும் போலிச் செய்திகள்!

**வ**ழக்கமாக மற்றவர்கள் வரும் முன்னரே சந்தியடிக்கு வந்துவிடும் செல்லாச்சி, அன்று மற்றைய எல்லோரும் வந்த பின்னரும் வரவில்லை.

அதனை அவதானித்த ஜீவன், ''செல்லாச்சியை எங்கே காணவில்லை?'' என்று கேட்டான்.

அப்போது வியர்த்து விறுவிறுக்க, கச்சான் கடகத்துடன், அவசரமாக வந்தமர்ந்து, வியர்வையை, சேலை முந்தானையால் துடைத்தாள் செல்லாச்சி. பிறகு கச்சான் கடகத்தை அவிழ்த்து வியாபாரத்தையும் ஆரம்பித்தாள்.

''கிழவி யாரோடையோ சண்டை பிடிச்சுப் போட்டு வாற மாதிரி இருக்கு'' என்று ரூபனின் காதைக்கடித்தான் ஜீவன்.

செல்லாச்சியின் பாம்புக் காதுக்கு அது தப்பவில்லை.

அதனால் உடனேயே ''நான் ஒன்றும் கொளுவல்பட்டுப் போட்டு வரேல்லை. உன்னைப் போலை கைபேசியுக்குள்ளையே நாள் முழுவதும் தலையை நுழைச்சுக் கொண்டு கிடக்கிற ஒருத்தன் 'வீட்டுத் திட்டத்துக்கு விதானையாரிடம் பதியச்சொல்லி,இணயத்திலை போட்டிருக்கு' என்று சொன்னவன். அந்த இழவு விழுவானை நம்பி அங்கே போனால், 'இதை நம்பி வந்தனியோ?' என்று கேட்டு விதானையார்சிரிக்கிறார். அதெல்லாம் பொய்யாம்''என்று ஆற்றாமையுடன் சொன்னாள் செல்லாச்சி.

''தேவையில்லாமல் போலியாக ஒரு செய்தியை இணையத்தில் பரப்புவதால் , எவ்வளவு கஷ்டம் பாருங்கோ'' என்று செல்லாச்சிக்காகப் பரிந்து கதைத்தார் ஏரம்பர்.

''வீட்டுத்திட்டம்என்றவுடன் விழுந்தடிச்சுக் கொண்டு ஓட முதல், அது உண்மையோ பொய்யோ என்று பார்த்திட்டுப் போயிருக்க வேணும்'' என்று வாதிட்டான் ஜீவன்.

''சும்மா, சப்பைக்கட்டுக் கட்டாதை மச்சான். சமூக ஊடகம், 'மணலை திரிக்கும்; வானத்தை வளைக்கும்' என்றெல்லாம் இணையத்தை விடிய விடியப் புளுகிப் போட்டு, இப்ப பிரச்சினை என்றவுடனே மற்றவை மேலை பழியைப் போடாதை''என்று நண்பனைக் கண்டித்தான் ரூபன்.

மற்றவர்கள் கதைப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த வாத்தியார், ''சமூக ஊடகங்களிலை, தாங்கள் பார்க்கிற தகவல்களையும் ஒளிக்கீற்றுக்களையும் கொஞ்சம் கூடச் சிந்திக்காமல், போகிற போக்கிலை பகிர்ந்து போட்டுப் போகினம். அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளைப் பற்றி எவரும் யோசிக்கிறதுமில்லை. கவலைப்படுவதுமில்லை'' என்று யதார்த்தத்தைச் சொன்னார். . ''இதிலை 'நீங்கள் தமிழராக இருந்தால் இதனைப் பகிருங்கள்'என்று போட்டு, விட்டால் போதும், உள்ளுக்குள்ளை என்ன கிடக்கு என்று கூடப் பார்க்கிறதில்லை.அப்பிடியே பகிர்ந்து விட்டிருவினம்'' என்று நக்கலாகச் சொன்னான் ரூபன்.

''சாதாரண சனம் ஏமாறுவதைச் சொல்லுறீங்கள். பேப்பர்காரரே எத்தனை தரம் ஏமாந்திருக்கினம்.இணையத்திலை இருக்கிறதைநம்பிப்போட்டிட்டு, பிறகு அது போலிச் செய்தி என்று தெரிய வரும்போது,முழி பிதுங்கிப் போடும்'' என்று தங்கள் பக்கத்தைச் சொன்னான் பேப்பர்தம்பி.

''நான் கூடக் கிட்டடியிலை எங்கேயோ வாசிச்சனான்''என்று சொல்லத் தொடங்கினார் ஏரம்பர்.

''ஒரு நகரத்திலை பிரபலமான உணவகம் இருந்தது. ஒரு நாள் ஒரு புகைப்படமும் செய்தியும் சமூக வலைதளங்களில் வேகமாகப் பரப்பப்பட்டது.. குறிப்பிட்ட உணவகத்தில் இருந்து காகங்களின் இறைச்சியைப் பொலிஸார் கைப்பற்றியதாகச் சொன்ன செய்திதான் அது. எப்போதும் கூட்டம் நிரம்பிவழியும் அளவுக்குப் பிரபலமான அந்த உணவகம், அடுத்தடுத்த நாள்களில் வெறிச்சோடிப்போனது. சமூக வலைத்தளங்களில் பரவிய அந்தச் செய்தியால் சுகாதார அதிகாரிகள், உடனே அந்த உணவகத்தின் உணவு மாதிரிகளை எடுத்து, சோதனைக்கு உட்படுத்தினார்கள்.. இறுதியில் அந்தச் செய்தி போலியானது எனத் தெரியவந்தது. பிறகு அந்தப் போலிச் செய்தியைப் பரப்பின ஆளைக் கண்டுபிடிச்சிட்டினமாம்.''என்று சொல்லிவிட்டு மூச்சு வாங்கினார் ஏரம்பர்.

''ஏனாம் அப்பிடிச் செய்தவன்?'' என்று கேட்டாள் செல்லாச்சி.

''வேறென்ன, தொழில் போட்டிதானாம். போட்டி உணவகத்தின் உரிமையாளர் ஒருவர்தானாம் ,இப்பிடிச் செய்யச் சொல்லி அந்த ஆளுக்குக் காசு கொடுத்தவர்'' என்று சொன்ன ஏரம்பர், மிகுதிக் கதையைத் தொடர்ந்தார்.

''ஆளைப் பிடிச்சினம்; தண்டனை கொடுத்திச்சினம், சமூக வலைதளங்கள் வேறு செய்திகளுக்குப் பின்னால் போய்விட்டன. ஆனால், அந்த உணவகத்தின் வியாபாரம், நம்பகத்தன்மை அனைத்துமே ஒரே நாளில் சீர்குலைஞ்சு போயிட்டுதாம். சாப்பிட வாற ஆக்களும் குறைஞ்சு, கடைசியிலை கடையை இழுத்து மூட வேண்டியதாகப் போட்டுதாம்'' என்று சொல்லி முடித்தார் ஏரம்பர்.

''இதேமாதிரி ,எங்கடை ஊர் உணவகம் ஒன்றைப் பற்றி ஒரு செய்தி பரவியிருந்தால், எங்கடை ஆக்களும்,முன்னை பின்னை யோசிக்காமல், இதேமாதிரித்தான், அதைப் பரப்பியிருப்பினம்.தவறிழைக்காத அந்த உணவகமும் பூட்டப்பட்டிருக்கும்'' என்று கூறினான் ரூபன்.

''பார்த்த அடுத்த வினாடியே, எதைப்பற்றியும் யோசிக்காது, பகிரப்படும்செய்திகளால்,வரும் விளைவுகள், பெரிய அளவில் கவனத்துக்கு வருவதில்லை. ஆனால், அதில் பாதிக்கப்படுபவர்களின் நிலைதான் மிகவும் பரிதாபகரமானது'' என்றான் பேப்பர்தம்பி.

''நீங்கள் சொல்லுறது சரியெண்டுதான் நினைக்கிறேன்'' என்று மெதுவாகச் சொன்ன ஜீவன்,கைபேசியை நிறுத்திவிட்டு,பேச்சில் கலந்து கொண்டான்.

''இதிலை இருக்கிற பல செய்திகள் பலவருடங்களாகவே, இணைய வெளியில் சுத்திவருகின்றவைகளாகத்தான் இருக்கின்றன., வெளிநாட்டுக் காசில் பிரபாகரனின் படம் போட்டிருக்கு,இராவணனின் எலும்புக் கூடு கண்டுபிடிக்கப்பட்டது, பிரபலமான குளிர்பானத்தில் எய்ட்ஸ் நோயாளியின் ரத்தம் கலந்து விட்டது, தமிழகத்தின் திருநள்ளாறு கோயிலின் மேலே வரும்போது செயற்கைக்கோள் இயங்காமல் போய்விடும், இன்று இரவு காஸ்மிக் கதிர்கள் தாக்கும் என நாசா அறிவிப்பு, இந்தக் குழந்தையின் புகைப்படத்தை பகிர்ந்தால் 'பேஸ்புக்' நிறுவனம் ஒரு ரூபா கொடுக்கும், இந்த கடவுள் படத்தைப் பகிர்ந்தால் நல்லது நடக்கும், இலங்கைத் தமிழர்களுக்காக ஐ.நா.சபை வாக்கெடுப்பு நடத்துகிறது, என்றெல்லாம் பலவருடங்களாக வதந்திகள் சமூக ஊடகங்களில் சுத்தி வருகின்றன.'' என்று தெரிந்ததைச் சொன்னான் ஜீவன்.

''இதையெல்லாம் பார்த்தாலே பொய்யென்று தெரியுதே, பிறகு யார் உதுகளையெல்லாம் பரப்பப் போகினம்?''என்று கேட்டாள் செல்லாச்சி.

''இதைப் பரப்பிறவை பாமரர் இல்லை. படிச்சவைதான் அதிகம் பரப்புகினம் என்பதுதான் வேதனையான விசயம்'' என்றான் ஜீவன்.

அதனைத் தலையாட்டி ஆமோதித்த வாத்தியார் ''ஜீவன் முதல் சொன்னவையெல்லாம், உணர்வுரீதியாகப் பரபரப்பை ஏற்படுத்தக் கூடிய கதைகள். இவற்றால் பெரிய சிக்கலில்லை. ஆனால், இதேபோல பத்துரூபா தாள்கள் செல்லாது என்று இலங்கை மத்திய வங்கி அறிவிச்சிட்டுது என்று ஒரு வதந்தி இப்படிப் பரவ, கனபேர் அந்தக் காசை வாங்காமல் விட்டிட்டினம் அதுவும் இந்தியாவிலை சில தாள்காசுகள் செல்லாது என்று சட்டம் வந்த கையோடை ,இலங்கையிலை இந்த வதந்தி பரவியதாலை, கனபேர் நம்பியிட்டினம்''என்றார்.

''சமூக ஊடகங்களிலை பொழுதைக் கழிக்கிறவர்கள், உண்மை என்ன என்று அறியாமல், யார் அனுப்பினார்கள் என்றே தெரியாமல், அது யாரைப் பாதிக்கும் என்ற தெளிவு கூட இல்லாமல், பகிரும் செய்திகள், எங்கோ இருக்கும் ஒருவரைப் பாதிக்கிறது. போலிச் செய்திகளின் மீது இருக்கும் ஈர்ப்பு மற்றும் சுவாரஸ்யம் காரணமாக மக்கள் மத்தியில் விரைவாகப் பரவியும் விடுகிறது. எது பொய், எது உண்மை எனப் பகுத்தறியும் குணம் எங்களிடையே மங்கிவிட்டதோ என்று கவலையாக இருக்கிறது'' என்று வேதனையுடன் சொன்னான் ரூபன்.

''முன்னரெல்லாம் வேடிக்கையாகத் தனிநபர்களால் இந்த மாதிரிப் போலிச் செய்திகள் உருவாக்கி பரப்பப்பட்டன. ஆனால், இப்போது உண்மைக்குப் புறம்பான செய்திகளை, நிஜமான செய்தி போன்றே சமூக வலைதளங்கள், இணைய தளங்கள் மூலமாகப் பரப்பி, மக்களை ஏமாற்றி சுயலாபம் அடைவதையே நோக்கமாகக் கொண்டு பலர் இயங்குவதுதான் ஆபத்தை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு போயிருக்கு''என்று சொன்னான் பேப்பர் தம்பி.

''இதைப்பற்றி நானும் கேள்விப்பட்டனான்'' என்று தொடங்கிய ஜீவன், ''இதில் வர்த்தக, அரசியல் இலாபங்களும் இருக்கின்றன. தற்போது கூகுள், ஃபேஸ்புக் போன்ற தளங்கள் இவற்றை எதிர்த்து நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. என்று முடித்தான்.

''பொடிபெட்டையள் எல்லாம் போனுக்குள்ளை முகத்தைப் புதைச்சுக் கொண்டு திரியுதுகள். அதிலை இவ்வளவு ஆபத்து இருக்கோ?'' என்று ஆச்சரியப்பட்டாள் செல்லாச்சி.

''நடக்கிறதை விளங்கிக் கொண்டால் ஆபத்திலை சிக்காமல் இருக்கலாம்'' என்று சொன்ன வாத்தியார் ''ஒரு கட்சி தன்னை நல்லவிதமாகக் காட்டிக்கொள்ள, தனது கொள்கைகளை மட்டுமே பரப்ப வேண்டும் என்பதெல்லாம் இல்லை. எதிர்க்கட்சிகளின் மீது இது போன்ற கீழ்த்தரமான செய்திகளைப் பரப்பினாலே போதும். அந்தக் கட்சிக்கு புனித அந்தஸ்து கிடைத்து விடும். ஒரு நிறுவனம் தன்னை விளம்பரப்படுத்திக் கொண்டு தான் சந்தையில் வெல்ல வேண்டும் என்பதில்லை. இது போல போட்டி நிறுவணங்களின் மீது, வீண் அவதூறுகளைப் பரப்பினாலே வாடிக்கையாளர்களை ஈர்த்துவிடலாம். வணிகம், அரசியல், வன்மம் என வெறுப்புகளாலும், ஏதேனும் பலனை எதிர்பார்த்துமே இந்தப் போலிச் செய்திகள் உருவாகின்றன'' என்று விளக்கினார்.

அப்போது ஜீவன் ''இப்படி உருவாகும் அனைத்து செய்திகளுமே எங்கடை உணர்ச்சியை மையப்படுத்தியே உருவாக்கப்படுகின்றன. நமது தேசபக்தி, பாரம்பரியங்கள் மீதான பெருமித உணர்ச்சி ஆகியவற்றைக்கொண்டுதான் இவை வலம் வருகின்றன.'' என்று உண்மையைப் போட்டுடைத்தான்.



''உண்மைதான் என்று சிலாகித்த ரூபன்'' முன்பு ஒரு பொருளை விற்க வேண்டுமென்றால், அதன் பெருமைகளைச் சொல்லி விளம்பரம் செய்வார்கள் ஆனால் இப்போது, 'இந்தப் பொருளை நீங்கள் வாங்கினால், எங்கோ இருக்கும் ஒரு குழந்தை உணவு உண்ணும்', 'எங்கள் பொருள்களை வாங்கி, முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்துக்கு உதவுங்கள் , எனக்கூறி நமது தேசபக்தியையோ, மனிதாபிமானத்தையோ சுண்டிவிட்டு அவர்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். அதே நோக்கம்தான் இந்த போலிச் செய்திகளின் பின்னணியிலும் இருக்கின்றன. ஒன்று எங்களை ஏமாற்ற வேண்டும்; அல்லது எங்களைப் பயன்படுத்தி இலாபம் அடைய வேண்டும்.'' என்றான்.

''இனிமேலாவது, சமூக ஊடகங்களில் நேரத்தைச் செலவிடுவோர், அவற்றில் தங்களை வந்தடைகின்ற தேவையற்ற, அவதூறு பரப்புகின்ற, படுபொய்யான, நம்ப முடியாத செய்திகளையோ அல்லது ஒளிக்கீற்றுகளையோ, அடுத்தவர்களுக்குப் பகிராமல் இருந்தாலே போதும்.இந்த ஆபத்திலிருந்து விடுபட்டு விடலாம்.''என்று சொன்ன வாத்தியார்,எழுந்து நடக்கத் தொடங்கினார்.

மற்றவர்களும் அவரைத் தொடர்ந்தனர்.

கச்சான் கடையைக் கட்டத் தொடங்கினாள் செல்லாச்சி.

# மாணிக்கமடு புத்தர் சிலை அகற்றுவதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸ் வேண்டுகோள்



கொழும்பு, ஏப். 30

இறக்காமம் மாணிக்கமடு பிரதேசத்தில் இனவாதிகளால் கட்டப்படவுள்ள கட்டடத்தை தடுத்து நிறுத்துவதுடன் அங்கு வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை உடனடியாக அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் பிரதி விளையாட்டுத்துறை அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இல்லாத விடயம் ஒன்றை உருவாக்கி சிறுபான்மையின மக்களை இனவாதத் தீயில் சிக்க வைப்பதற்கான சூழ்ச்சிகளின் நிகழ்ச்சி நிரலாகவே மாணிக்கமடு பிரச்சினையை நாம் பார்க்கின்றோம்.

இந்நாட்டு முஸ்லிம்களுக்கு எதிராக பல வழிகளிலும் பிரச்சினைகளை ஏற்படுத்தி வரும் பொதுபலசேனாவும் அதன் செயலாளர் ஞானசார தேரரும் சில தினங்களுக்கு முன் இறக்காமத்திற்கு விஜயம் செய்தமை முஸ்லிம்கள் மத்தியில் பெரும் அச்ச நிலையைத் தோற்றுவித்துள்ளது.

மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரச அதிபருடன் பேச்சு நடத்தி சில தீர்வுகளை எட்டுவதற்கும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் இங்கு இணக்கம் காணப்பட்டதாக அறிகின்றோம்.

இங்குள்ள முஸ்லிம், தமிழ் மக்களின் காணிகளை சுவீகரிப்பதற்கான திட்டமாகவே இதனைப் பார்க்கின்றோம். இவர்களுக்கு இதற்குரிய அதிகாரத்தை வழங்கியது யார் என்ற கேள்வி எழுகின்றது.

நாட்டில் இனவாத பிரச்சினைக்குத் தூபமிட்டுள்ள ஞானசாரவுக்கு மாவட்ட அரச அதிபரை கட்டுப்படுத்தி உத்தரவிடும் பொறுப்புக்கள் நல்லாட்சி அரசு வழங்கியுள்ளதா? என்ற நிலைப்பாட்டில் இளைஞர்கள் ஆத்திரமடைந்துள்ளனர். இளைஞர்களின் நியாயத்தை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

நல்லாட்சி அரசில் முஸ்லிம்களுக்கு புறக்கணிப்புக்கள் ஆரம்பித்துள்ளன என்கின்ற விடயம் பேசப்பட்டு வருகின்ற நிலையில் இறக்காமம் மாணிக்கமடு புத்தர் சிலையும், புதிய கட்டடம் கட்டப்படும் விவகாரமும் இதற்கு இன்னும் வலுச்சேர்ப்பதாக அமைந்துள்ளன.

நல்லாட்சி உருவாக்கத்தில் முஸ்லிம் சமூகம் குறிப்பாக அம்பாறை மாவட்ட மக்கள் பெரும் பங்கு வகித்துள்ளனர். நல்லாட்சி அரசின் தோற்றத்திற்கு முழுமையான எதிர்ப்பை இனவாதத்தைக் கொண்டு வெளிக்காட்டிய பொதுபலசேனா இன்று முஸ்லிம்களை இனவாதத் தீக்குள் அகப்பட வைப்பதற்காக அம்பாறையில் களமிறங்கியிருப்பது மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் இறக்காமம் மாணிக்கமடு விடயத்தில் தலையிட்டு முஸ்லிம்களுக்கு அநீதி இடம்பெறாமல் தடுப்பதுடன் அங்கு வைக்கப் பட்டுள்ள புத்தர் சிலையை உடனடியாக அகற்றுவதற்கான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்.

இதன் மூலம் அரசின் நல்லெண்ணத்தையும், செயற்பாட்டையும் வெளிப் படுத்துவதற்கு வாய்ப்பாகவும் அமையும்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் பாரதி...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் கொட்டடியில் அமைந்த புத்தகக் கடை பூபாலசிங்கம் அவர்களின் இல்லத்தில் எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் தலைமையில் நடந்த எழுத்தாளர்களுடனான சந்திப்பிலும் தமிழகப் பேச்சாளர்கள் கலந்துகொண்டனர்.

வவுனியாவில் கல்வி அதிகாரி கவிஞர் இ. சிவானந்தனின் ஏற்பாட்டிலும், வடமராட்சியில் எழுத்தாளர் தெணியானின் ஏற்பாட்டிலும் கம்பர் மலை சனசமூக நிலையம், வதிரி தமிழ் மன்றம் முதலானவற்றிலும் தென்மராட்சியில் டிறிபேக் கல்லூரியிலும் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் தமிழகப்பேச்சாளர்கள் கலந்துகொண்டனர்.

அவர்கள் மூவரும் வருகை தந்து இலங்கையில் நின்ற நாள்களில் தமிழ் ஊடகங்களில் தொடர்ச்சியாக பாரதி நூற்றாண்டு செய்திகளே வெளிவந்தன.

இவ்வாறு இலங்கைத் தலைநகர் உட்பட மலையகம், வடக்கு, கிழக்கு எங்கும் பாரதியின் புகழ் பரவியிருந்த குறிப்பிட்ட 1983 ஆண்டின் முற்பகுதி மூவினத்தையும் சேர்ந்த கலை, இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் அறிஞர்களுக்கு வசந்த காலம் தான்.

இன நல்லிணக்கம், தேசிய ஒருமைப்பாடு, மனித உரிமை, மனிதநேயம் பற்றியெல்லாம் பாரதியின் சிந்தனைத்தூக்கத்திலிருந்து நாடெங்கும் பேசப்பட்ட காலம்.

அந்தக் குறிப்பிட்ட பசுமையான நினைவுகளுடன் வாழ்ந்தவர்களுக்கு பேரிடியாக வந்தது 1983 நடுப்பகுதியில் நடந்த கோரமான வன்செயல் சம்பவங்கள். கறுப்பு ஜூலை என்ற சொற்பதம் இலங்கை வரலாற்றில் அழுத்தமாக பொறிக்கப்பட்டது.

"பாரதியின் கனவுகள் நனவாக்கப்படல் வேண்டும் என்ற கருத்தியல் தீவிரமாக இலங்கைப் பொது அரங்கில் பரவவேண்டும்" என்று அன்றைய காலப்பகுதியில் அறைகூவல் விடுத்து உரையாற்றிய பலர் காலப்போக்கில் எதிர்பாராத விதமாக மறைந்தனர். அவர்களில் சிலர் இயற்கை மரணம் எய்தினர். சிலர் அநியாயமாக கொல்லப்பட்டனர். அவர்களின் மூச்சில் பாரதி வாழ்ந்து கொண்டேயிருந்தார்.

இலங்கையில் பாரதி பற்றிய தொடரில், பாரதி நூற்றாண்டுக்கு முன்னரும் பின்னரும் பாரதியின் சிந்தனைகளுக்கு எழுத்திலும் பேச்சிலும் உயிரூட்டிய அந்த அமரர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் சிரம் தாழ்த்தி அஞ்சலி செலுத்துவோம்.

(தொடரும்)

# காரைநகரில் உள்ள நன்னீர்க் கிணற்றில் படையினர் தண்ணீர் எடுப்பது தடுக்கப்படும்!

## பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்





காரைநகர், ஏப். 30

காரைநகரில் உள்ள நன்னீர்க் கிணற்றில் படையினர் நீரை எடுத்துச் செல்வதால் மக்கள் தண்ணீர் எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனக் கூறப்பட்ட நிலையில், அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் தொடக்க உரையாற்றியமையைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இணைத் தலைவருமான ஈ.சரவணபவன் உரையாற்றினார். அதைத் தொடர்ந்து துறைசார்ந்த விடயங்கள் ஆராயப்பட்டன. சுகாதாரம், விவசாயம், கடற்றொழில், வீட்டுத் திட்டங்கள், குடிதண்ணீர் போன்ற விடயங்கள் முதன்மைப்படுத்தப் பட்டு ஆராயப்பட்டன.

காரைநகரில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு மேலதிகமாக 2017 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களிலும் கவனம் செலுத்தப்பட்டது.

முக்கியமாக, காரைநகரில் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக ஆராயப்பட்டபோது, அங்கு நீர்த்தாங்கி ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது எனவும் அதன் வேலைகள் நிறைவடையும் தறுவாயில் உள்ளன எனவும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை உத்தியோகத்தரால் தெரிவிக்கப் பட்டது.

ஆனாலும், அந்த தாங்கிக்கான நீர்வழங்கல் தொடர்பாக இணைத் தலைவரால் வினவப்பட்டபோது, இரணைமடு, மருதங்கேணி நீர் விநியோகத் திட்டங்கள் மூலம் நீர் வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது எனக் கூறப்பட்டதே தவிர, அதற்கு உறுதியான முடிவு எதையும் அவர் கூறவில்லை.

காரைநகரில் கால்நடைகள் களவாடப்படுகின்றமை தொடர்பாக ஆராயப்பட்டபோது, அத்தகைய திருட்டுக்களைத் தடுப்பதற்கு வலந்தலைச் சந்தியில் பொலிஸ் காவலரண் ஒன்றை அமைக்க பொலிஸாரிடம் கோருவது எனவும் முடிவெடுக்கப்பட்டது.


இந்தக் கூட்டத்தில், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான திருமதி அனந்தி சசிதரன், சிவயோகன் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், துறைசார் அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ம)

# வடகொரியாவின் ஏவுகணைப் பரிசோதனை மீண்டும் தோல்வி!









வடகொரியா மேற்கொண்ட மற்றுமோர் ஏவுகணைப் பரிசோதனை மீண்டும் தோல்வியில் முடிந்துள்ளது என்று அமெரிக்கா பாதுகாப்பு தரப்பு வெளியிட்டிருக்கும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையும், சர்வதேச நாடுகளும் வடகொரியாவின் ஏவுகணைப் பரிசோதனைக்கு கண்டனம் வெளியிட்டிருந்தன. அத்துடன், பல்வேறு எதிர்ப்புக்களும் தெரிவிக்கப்பட்டன.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா போன்ற மிக முக்கிய நாடுகள் வடகொரியாவின் செயற்பாட்டுக்குக் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டன.

எனினும், தன்னுடைய பாதுகாப்புக்கும், தன் நாட்டின் தற்காப்புக்குமாகவே இவ்வாறான பரிசோதனைகளில் தாம் ஈடுபடுவதாக அந்நாடு தெரிவித்து வந்தது.

இதுவரை, இரண்டு அணுகுண்டு பரிசோதனைகளையும், 24 கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளைப் பரிசோதனைகளையும் வடகொரியா மேற்கொண்டுள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் வடகொரியா தன்னுடைய ஏவுகணைப் பரிசோதனை செய்தது. அது தோல்வியில் முடிவடைந்ததாக அமெரிக்கா தெரிவித்தது.

எனினும், தாங்கள் இந்த முயற்சியில் இருந்து பின்வாங்கப்போவதில்லை என்றும், அடுத்த சில நாள்களில் மீண்டும் ஏவுகணைப் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபடுவோம் என்றும் வடகொரிய ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், வடகொரியாவின் இந்தச் செயற்பாடுகளால் அமெரிக்காவின் போர்க்கப்பல்கள் வடகொரிய தீபகற்பத்திற்கு விரைந்தன.

உலகப் போர் வெடிக்கும் என்றும், அழிவுகள் ஏற்படக்கூடும் என்றும் அச்சம் வெளியிட்டப்பட்டது.

இந்த நிலையில், நேற்றைய தினம் வடகொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனையை மேற்கொண்டது. ஆனால், அது வழமையைப் போன்று சிறிது தூரம் சென்ற நிலையில் வெடித்துச் சிதறியது என்று அமெரிக்கப் பாதுகாப்பு தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இம்முறை வடகொரியா பரிசோதனைக்குப் பயன்படுத்திய ஏவுகணை எவ்வகையானது, அதன் எடை, அதன் தாக்கம் தொடர்பான எந்தத் தகவல்களையும் அது வெளியிடவில்லை.

ஆனால், அது நடுத்தர அளவிலான பாலிஸ்டிக் ஏவுகணை சோதனை தான் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அண்மைய நாள்களாக போர் பதற்றத்தில் இருந்து வந்த சூழலில், வடகொரியாவின் இந்த சோதனையின் தோல்வி அந்நாட்டுக்கு ஏற்பட்ட பெரும் பின்னடைவாகவே பார்க்கப்படுகின்றது.

இந்த சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட தரப்பினர் சற்று குழப்பமடைந்துள்ளனர்; நிலைகுலைந்துள்ளனர் என்று அமெரிக்க தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை, இது குறித்து இதுவரை வடகொரிய அரசு எந்தவித மான உத்தியோகபூர்வ தகவல்களையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## சூறையாடப்பட்ட மாசிடோனியா நாடாளுமன்றம்!

ஸ்கோப்ஜி, ஏப். 30

மாசிடோனியா நாடாளுமன்ற சபாநாயகர் தேர்தலில் அல்பேனிய கட்சியைச் சேர்ந்த தலாத் சபெரி வெற்றி பெற்றமையில் ஆத்திரம் அடைந்த வி.எம்.ஆர்.ஓ-டி.பி.எம்.என்.இ. கட்சி ஆதரவாளர்கள் நாடாளுமன்றத்தை சூறையாடியுள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான மாசிடோனியாவில் கடந்த ஆண்டு நடந்த தேர்தலில் ஆளும் கட்சிக்கு (வி.எம்.ஆர்.ஓ-டி.பி.எம்.என்.இ) பின்னடைவு ஏற்பட்டது.

அல்பேனிய கட்சிகளுடன் கூட்டு சேர்ந்து ஆட்சியமைக்க வேண்டிய நிலை உருவான போது, ஆளும் கட்சி அதைத் தவிர்த்தது.

இதையடுத்து சமூக ஜனநாயகக் கட்சி தலைவர் ஷோரான், அல்பேனிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து ஆட்சியைக் கைப்பற்ற முயற்சித்து வருகிறார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, வி.எம்.ஆர்.ஓ-டி.பி.எம்.என்.இ. கட்சியினர் போராட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையில், அங்கு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற சபாநாயகர் தேர்தலில் சமூக ஜனநாயகக் கட்சி ஆதரவுடன் அல்பேனிய கட்சியைச் சேர்ந்த தலாத் சபெரி வெற்றி பெற்றார்.

இதில் ஆத்திரம் அடைந்த வி.எம்.ஆர்.ஓ-டி.பி.எம்.என்.இ. கட்சி ஆதரவாளர்கள் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்து சூறையாடினர். நாற்காலி, மேஜைகளை உடைத்து துவம்சம் செய்தமையுடன், எம்.பி.க்களைத் தாக்கியுள்ளனர்.

சமூக ஜனநாயகக் கட்சித் தலைவர் ஷோரான் முகத்தில் இரத்தம் சொட்ட சொட்ட நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேறியுள்ளார். இந்த சம்பவம் மாசிடோனியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## ஏமனில் அமெரிக்கா விமானத் தாக்குதல்!

### 8 அல்குவைதா தீவிரவாதிகள் சாவு!!

வொஷிங்டன், ஏப். 30

ஏமன் நாட்டில் அமெரிக்கா நடத்திய விமானத் தாக்குதலில் 8 அல்குவைதா தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்று பெண்டகன்தகவல்தெரிவித்துள்ளது.


ஏமன் ஜனாதிபதி அலி அப்துல்லா சால்வின் ஆட்சிக்கு முடிவு கட்டும் வகையில் அந்நாட்டிலுள்ள ஹவுத்தி இன மக்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதேசமயம், ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சவூதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படையும் வான்வெளித் தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.

இதில் அமெரிக்காவும் இணைந்து கொண்டுள்ளது.

இந்நிலையில், ஏமன் நாட்டில் அமெரிக்கா நடத்திய வான்வெளி தாக்குதலில் 8 அல்குவைதா தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்று பெண்டகன் தகவல் தெரிவித்துள்ளது. இதில் முக்கியமான தலைவர் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார்.

ஏமனின் ஷப்வா மாகாணத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று அமெரிக்கா விமானப் படையின் செய்தி தொடர்பாளர் ஜெப் டேவிஸ் தெரிவித்துள்ளார்.



## பங்களாதேஷில் பொலிஸாரின் தேடுதல் வேட்டையில் 4 தீவிரவாதிகள் பலி!

டாக்கா, ஏப். 30

பங்களாதேஷில் அதிரடிப் படைப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது 4 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

பங்களாதேஷில் தீவிரவாதிகளுக்கு எதிரான தேடுதல் வேட்டையை பல்வேறு பாதுகாப்புப் படைகளும் தீவிரமாக நடத்தி வருகின்றன.

இந்நிலையில், சபாய் நவாப் கஞ்ச் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் தீவிரவாதிகள் பதுங்கி இருக்கின்றனர் என்று அதிரடிப்படைப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.




இதையடுத்து இரவில் அங்கு சென்ற பொலிஸார் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். தீவிரவாதிகளும் பதில் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

விடிய விடிய இந்தச் சண்டை இடம்பெற்றுள்ளது. ஒரு கட்டத்தில் எதிர்தரப்பில் இருந்து தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை. இதையடுத்து பொலிஸார் அந்த வீட்டுக்குள் நுழைந்து பார்த்தபோது, 4 பயங்கரவாதிகள் தங்கள் உடலில் கட்டி வைத்திருந்த வெடிகுண்டுகளை வெடிக்க வைத்து உயிரிழந்து கிடந்தமை தெரியவந்துள்ளது.

# 14 நாள்களில் 3 பேர் மட்டுமே சந்திப்பு சிறையில் சாதாரண கைதியானார் சசி!

பெங்களூர்,ஏப்.30

சிறையில் உள்ள சசிகலாவை ஏப்ரல் 15 ஆம் திகதியில் இருந்து வெறும் மூன்று பேர் மட்டுமே சந்தித்தனர் என 'டைம்ஸ் ஒப் இந்தியா' செய்தி வெளியிட்டுள்ளது.



இரட்டை இலைச் சின்னத்தைப் பெற தேர்தல் ஆணையத்துக்கு லஞ்சம் கொடுக்க முயற்சி செய்த வழக்கில் அ.தி.மு.க. அம்மா கட்சியின் துணை பொதுச்செயலாளரும், சசிகலாவின் அண்ணன் மகனுமான டி.டி.வி. தினகரனை டில்லி பொலிஸ் கைது செய்துள்ளனர். இந்நிலையில், தினகரன் கைதால் சசிகலா சிறையில் அதிர்ச்சியடைந்தார் எனத் தகவல்கள் வெளியாகின.

சாதாரண கைதிகளின் விதிமுறைகளின்படி உறவினர்கள் 15 நாள்களுக்கு ஒரு முறை மட்டுமே பார்க்க முடியும். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவலின்படி சசிகலாவின் வசட்டத்தரணிகள் தவிர்த்து 19 பேர் மார்ச், ஏப்ரல் மாதங்களில் சிறையில் அவரை சந்தித்துள்ளனர். இதனை அடுத்து,பிரமுகர் கைதி அந்தஸ்து மறுக்கப்பட்ட சசிகலாவைச் சந்திக்க வருபவர்களுக்கான அனுமதி எண்ணிக்கை குறைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கடந்த சில நாள்களாக வெறும் மூன்று பேர் மட்டுமே சசிகலாவைச் சந்தித்துப் பேசியுள்ளனர், அதில் ஒருவர் சென்னையைச் சேர்ந்த வைத்தியர் என தகவல்கள் தெரிவித்துள்ளன.

சொத்துக் குவிப்பு வழக்கில் சிறையில் அடைக்கப்பட்ட இளவரசி உடல்நலக் குறைவு காரணமாக சிறை மருத்துவமனையிலே அதிக நேரத்தை கழிக்கிறார். அவர் சுவாசப் பிரச்சனை காரணமாக சிகிச்சை பெற்று வருகிறார். எனவே, சசிகலா சிறையில் தனியாகவே உள்ளாராம். அத்துடன், சிறையில் சசிகலா எப்போதும் டிவியையே பார்த்துக் கொண்டிருக்கிறார் என சிறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

# இரட்டை இலைச் சின்னத்தை எவருக்கும் வழங்கக் கூடாது!

## அ.தி.மு.க. தொண்டர்கள் அணி மனு

அ.தி.மு.க. பொதுச் செயலாளருக்கான தேர்தலை நடத்தும்வரை இரட்டை இலைச் சின்னத்தை எந்த அணிக்கும் வழங்கக் கூடாது என்று அ.தி.மு.க. தொண்டர்கள் அணி தேர்தல் ஆணையகத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அ.தி.மு.க. இரு அணிகளாகப் பிரிந்தன. இரு அணிகளும் இரட்டை இலைச் சின்னத்துக்கு உரிமை கொண்டாடி வந்தன. இந்நிலையில், தேர்தல் ஆணையகத்தால் இரட்டை இலைச் சின்னம் முடக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இரு அணியினரும் சின்னத்தைத் தங்களுக்கு வழங்கக்கோரி உரிய ஆதாரங்களையும், பிரமாண பத்திரங்களையும் தாக்கல் செய்து வருகின்றனர். இதுதொடர்பான விசாரணை நிலுவையில் இருந்து வருகிறது.

இந்நிலையில், தற்போது அ.தி.மு.க. தொண்டர்கள் அணி என்ற புதிய அணி உருவாகி இருக்கிறது. தொண்டர்கள் இயக்கம் தொண்டர்களுக்கே என்ற கொள்கை கோஷத்தோடு உருவாக்கப்பட்டுள்ள இந்தப் புதிய அணியைச் சேர்ந்த சென்னை புகழேந்தி, கடலூர் டி.செல்வநாயகம் உள்பட 5 பேர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை டில்லி சென்று தேர்தல் ஆணையகத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர். இந்த மனுவில் அ.தி.மு.கவைச் சேர்ந்த ஆயிரத்து300 உறுப்பினர்களிடம் கையெழுத்து பெற்ற ஆவணங்களையும் அவர்கள் தாக்கல் செய்தனர். (ச)

# கொலை வழக்கில் தேடப்பட்ட 'ஜெ'யின் சாரதி விபத்தில் சாவு!

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் வாகன சாரதியான கனகராஜ் சேலம் மாவட்டத்தில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற வீதி விபத்தில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் கொடநாடு பங்களாவின் காவலாளி ஓம்பகதூர் என்பவர் கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கில் தேடப்பட்டு வந்த நிலையில் கனகராஜ் உயிரிழந்துள்ளமை வீதி விபத்து தொடர்பில் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 24 ஆம் திகதி ஜெயலலிதாவுக்குச் சொந்தமான கொடநாடு பங்களாவில் காவலில் ஈடுபட்டிருந்த நேபாளத்தைச் சேர்ந்த ஓம்பகதூர் என்ற காவலாளி கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஈழத்தமிழருக்காகக் குரல் கொடுப்பது இந்திய அரசின் தார்மீகக் கடமை!

## கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ராஜா வலியுறுத்து



சென்னை,ஏப்.30

ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுக்க வேண்டிய தார்மீகக் கடமை இந்திய அரசுக்கு இருக்கின்றது. ஆனால், அதனைச் செய்யாமல் இந்திய அரசு மௌனமாக இருக்கிறது.

-இவ்வாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி. ராஜா தெரிவித்தார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-


2009 ஆம் ஆண்டு நடந்த போரில் பல லட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டனர். இலங்கை அரசு புரிந்த போர்க்குற்றம், மனித உரிமை மீறல் ஆகியன தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்த அண்மையில் ஜெனீவாவில் நடந்த மனித உரிமைகள் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளவது தொடர்பில் விவாதிக்கப்பட்டது.

விசாரணை நடத்த 2 ஆண்டுகள் அவகாசமும், வெளிநாட்டு நீதிபதிகள் மூலம் விசாரணை நடத்தக் கூடாது என்றும் இலங்கை கேட்டுக் கொண்ட நிலையில், கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் இந்திய அரசு மௌனம் சாதிக்கிறது. தமது கடமையை செய்யாமல் தட்டிக்கழித்து வருகின்றது.

அதுமட்டுமன்றி, இலங்கை இராணுவத்தால் தொடர்ச்சியாக இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டு வருகின்றனர். எனவே, கச்சத்தீவு உடன்படிக்கையை இந்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். -என்றார்.

# பா.ஜ.கவில் இணைந்தனர் 4 காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள்!

## ராகுல் அதிர்ச்சி



இம்பால்,ஏப்.30

மணிப்பூரில் காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர்கள் நான்கு பேர், அந்தக் கட்சியிலிருந்து விலகி பாரதீய ஜனதாக் கட்சியில் இணைந்தனர்.

மணிப்பூரில் அண்மையில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்றது. இதையடுத்து, அந்த மாநிலத்தின் முதல்வராக பா.ஜ.கவைச் சேர்ந்த என். பிரேன் சிங் பதவியேற்றுள்ளார்.


இந்நிலையில், அந்த மாநிலத்தின் காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர்களான நிகம்தங் ஹாகிப், ஒவை. சுர்சந்திர சிங், எஸ். பீரா சிங், ஓ. லூகோய் சிங் ஆகியோர் அந்தக் கட்சியிலிருந்து விலகி பா.ஜ.கவில் இணைந்தனர்.

சட்டப்பேரவை உறுப்பினர்களின் இந்தக் கட்சித் தாவல் காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்திக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# ஆந்திராவில் படகு கவிழ்ந்து விபத்து; 9 சிறுவர்கள் உட்பட 14 பேர் சாவு!

ஆந்திராவில் ஏரியில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 9 சிறுவர்கள் உட்பட 14 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 4 பேர் காணாமற் போயுள்ளனர்.

ஆந்திர மாநிலம் வைட்டி செருவு ஏரியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 19 பேர் படகில் பயணம் செய்தனர். அப்போது திடீரென படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது . இதில் ஒருவர் மட்டும் நீந்திக் கரைசேர்ந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.



மேலும், காணாமற்போன 4 பேரை தேடும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர். சம்பவத்தில் வயதில் மூத்தவர்களின் இறப்புக்கு தலா 3 லட்சம் ரூபாவும், சிறுவர்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபாவும் நிவாரணம் வழங்கப்படும் என ஆந்திர அரசு அறிவித்துள்ளது. (ச)

# திருமண மண்டபக் கூரை இடிந்து விழுந்து 9 பேர் சாவு!

ராஜஸ்தான் மாநிலத்தில் நடைபெற்ற திருமண விழாவின் போது அலங்காரத்துக்காக அமைக்கப்பட்டிருந்த கூரை இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானதில், 9 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இதில் காயமடைந்த 6 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ராஜஸ்தான் மாநிலத்தின் பரத்பூர் மாவட்டத்தில் உள்ள பிதி கிராமத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற திருமண விழா ஒன்றில் ஏராளமானோர் பங்கேற்றிருந்தனர். திருமணவிழாவுக்கு முன்னதாக சில சடங்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது விழா பந்தலில் அலங்காரத்துக்காக அமைக்கப்பட்டிருந்த கூரை திடீரென்று இடிந்து பார்வையாளர்கள் மீது விழுந்தே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

# டில்லி அணியை வீழ்த்தியது கொல்கத்தா நைட் ரைடர்ஸ்!




கொல்கத்தா, ஏப். 30

சொந்த மண்ணில் நாங்கள் சிங்கம் என டில்லியை வீழ்த்தி மீண்டும் நிரூபித்துள்ளது கொல்கத்தா அணி.

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் இரண்டு ஆட்டங்கள் நடைபெற்றன. முதல் ஆட்டம் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்றது. இதில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - டெல்லி டேர்டெவில்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி களத் தடுப்பைத் தேர்வு செய்தது. அதன்படி டில்லி டேர் டெவில்ஸ் அணியின் சஞ்சு சாம்சன், கருண் நாயர் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள்.

டில்லி அணியின் ஓட்டப் பெறுதி 4.5 ஓவரில் 48 ஓட்டங்களாக இருக்கும் போது கருண் நாயர் 15 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார்.

அடுத்து, சஞ்சு சாம்சன் உடன் ஷ்ரேயாஸ் அய்யர் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அரைச்சதம் அடித்த சாம்சன் 38 பந்துகளில் 4 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 60 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார்.

அப்போது டில்லி அணி 14 ஓவர்களில் 123 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அடுத்து வந்த பந்த் 6 ஓட்டங்களிலும், அய்யர் 47 ஓட்டங்களிலும் வெளியேறும் டில்லி அணியின் ஓட்டப் பெறுதி உயர்வில் மந்த நிலை ஏற்பட்டது.

கிறிஸ் மோரிஸ் 11 ஓட்டங்களும், கோரி அண்டர்சன் 2 ஓட்டங்களும், அங்கித் பவ்னி ஆட்டம் இழக்காமல் 12 ஓட்டங்களும் எடுக்க டில்லி அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 160 ஓட்டங்களை எடுத்தது. கடைசி 36 பந்துகளில் 37 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

பின்னர் 161 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா அணியின் சுனில் நரைன், கம்பீர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். சுனில் நரைன் 4 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரபாடா பந்தில் ஆட்டம் இழந்தார். அடுத்து உத்தப்பா களம் இறங்கினார்.

6 ஆவது ஓவரை ரபாடா வீசினார். இந்த ஓவரின் 3 ஆவது பந்தை உத்தப்பா லெக் சைட் திசையில் தூக்கி அடித்தார். பந்து எட்ஜ் ஆகி வானத்தை நோக்கி பறந்தது. மிஸ்ரா மற்றும் சஞ்சு சாம்சன் பந்தை பிடிக்க ஓடினார்கள். இருவரும் ஒருவருக்கு ஒருவர் நான் பிடித்துக் கொள்கிறேன் என்று சைகை காட்டி ஓடி வந்தனர். பந்து அருகில் வரும்போது இருவரும் பிடிக்காமல் அப்படியே நின்று விட்டனர். இதனால், 10 பந்துகளில் 8 ஓட்டங்களோடு வெளியேற வேண்டிய உத்தப்பா கண்டத்தில் இருந்து தப்பினார்.


அப்போது கொல்கத்தா அணி 5.3 ஓவர்களில் 37 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்தது. தனக்குக் கண்டம் தப்பியதையடுத்து உத்தப்பா ருத்ரதாண்டவம் ஆடினார். அந்த ஓவரில் ஒரு பவுண்டரி விளாசிய அவர், 8 ஆவது ஓவரில் இரண்டு சிக்ஸர்கள், ஒரு பவுண்டரி என பறக்க விட்டார். கம்மின்ஸ் வீசிய 9 ஆவது ஓவரிலும் ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி.

அத்துடன், 24 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். தொடர்ந்து விளையாடிய உத்தப்பா, 33 பந்துகளில் 55 ஓட்டங்கள் எடுத்து 'ரன்அவுட்' ஆனார். அவரது ஓட்டப் பெறுதியில் 5 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கும். பிடியெடுப்பிலிருந்து இருந்து தப்பிய உத்தப்பா, 25 பந்துகளில் 47 ஓட்டங்கள் குவித்து விட்டார்.

உத்தப்பா ஆட்ட இழப்பைத் தொடர்ந்து மணீஷ் பாண்டே களம் இறங்கினார். மறுமுனையில் கம்பீர் 39 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் அரைச்சதம் அடித்தார். அணி யின் ஓட்டப் பெறுதி 139 ஓட்டங்களாக இருக்கும் போது மணீஷ் பாண்டே ஆட்டம் இழந்தார். 4 ஆவது விக்கெட்டுக்கு கம்பீர் உடன் ஜாக்சன் ஜோடி சேர்ந்தார்.

இந்த ஜோடி அணியை வெற்றி நோக்கி அழைத்துச் சென்றது. கொல்கத்தா அணி 16.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 161 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. கம்பீர் 71 ஓட்டங்களுடனும், ஜாக்சன் 12 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இந்த வெற்றியின் மூலம் கொல்கத்தா அணி 9 போட்டிகளில் 7 வெற்றிகளை ருசித்துள்ளது.

# பஞ்சாப் அணியை வீழ்த்தி ஐதராபாத் 5 ஆவது வெற்றி!



மொகாலி, ஏப் 30

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கு எதிரான போட்டியில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 33 ஆவது லீக் போட்டியில் சன்ரைசர்ஸ் ஐதராபாத், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி முதலில் பந்துவீசத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஐதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 207 ஓட்டங்களைக் குவித்தது. அந்த அணியில் தவான் (77 ஓட்டங்கள்), வில்லியம்சன் (54 ஓட்டங்கள்), வோர்னர் (51 ஓட்டங்கள்) ஆகியோர் அரைசதம் விளாசினர்.

பின்னர் 208 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய பஞ்சாப் அணியில் 3 ஓட்டங்களுக்கு வோக்ரா ஆட்டமிழந்தார். சிறிது நேரம் அதிரடி காட்டிய குப்டில் 11 பந்துகளில் 23 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய மேக்ஸ்வெல் சந்தித்த 2 ஆவது பந்தில் 'டக் அவுட்' ஆகி வெளியேறினார்.

விக்கெட்டுக்கள் ஒருபுறம் விழுந்தாலும் ஷான் மார்ஸ் மட்டும் நிலைத்து நின்று அதிரடி காட்டினார்.


ஆனால், அவருக்கு எந்தவீரரும் ஒத்துழைப்பு அளிக்கவில்லை. மோர்கன் மட்டும் 26 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதிரடியாக விளையாடிய மார்ஸ் 50 பந்துகளில் 84 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். மார்ஸ் ஆட்டமிழந்ததும் அந்த அணியின் தோல்வி கிட்டத்தட்ட உறுதி ஆனது.

இறுதியாக 20 ஓவர்கள் முடிவில் பஞ்சாப் அணி 9 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 181 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. இதனால் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஐதராபாத் அணியில் நெக்ரா மற்றும் கவுல் தலா 3 விக்கெட்டுக்களை எடுத்தனர். அந்த அணியின் ரஷித் கான் 4 ஓவர்கள் வீசி 16 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார். ரஷித் கானுக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது.

இதுவரை 9 போட்டிகளில் விளையாடியுள்ள ஐதராபாத் அணி தனது 5 ஆவது வெற்றியை பதிவு செய்துள்ளது. 8 போட்டிகளில் விளையாடியுள்ள பஞ்சாப் தனது 5 ஆவது தோல்வியை அடைந்தது.

# மலிங்க பழைய பலத்துடன் மீண்டு வருவார்: பார்த்தீவ் பட்டேல் நம்பிக்கை



மும்பை, ஏப் 30

மும்பை இந்தியன்ஸ் வீரர் லசித் மலிங்க முழு பலத்துடன் பழைய 'போர்முக்கு' விரைவில் திரும்புவார் என்று பார்த்தீவ் பட்டேல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். போட்டிகளின் நடப்புத் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணி சிறப்பாகச் செயற்பட்டு வந்தாலும் அந்த அணியின் வீரர் லசித் மலிங்க பெரிய அளவில் சோபிக்கவில்லை.

இது குறித்து பேட்டியளித்துள்ள மும்பை வீரர் பார்த்தீவ் பட்டேல், மலிங்க காயங்களிலிருந்து விடுபட்டு வருவார் என்றும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மலிங்க தற்போது சிறந்த 'போர்மில்' இல்லாதது குறித்து நாங்கள் கவலைப்படவில்லை.

அவர் விரைவில் முழுப் பலத்துடன் 'போர்முக்கு' திரும்புவார். எங்கள் அணி தனிப்பட்ட வீரரை மட்டும் சார்ந்து இருக்கவில்லை.

மேலும், மும்பை அணியின் பயிற்சியாளராக இருக்கும் மஹேல ஜெயவர்தன அந்தப் பதவிக்கு தகுதி யானவர்.

இருபதுக்கு 20 போட்டிகளில் அவருக்கு அதிக அனுபவம் உள்ளதால், அது எந்தளவுக்குக் கடினமானது என அவர் புரிந்து வைத்துள்ளார்.- என்றும் அவர் கூறியுள்ளார்.

# முள்ளிக்குளம் மக்களின் காணிகளை நேற்று விடுவித்தனர் கடற்படையினர்!



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆவது நாளான நேற்று காணிகள்விடுவிக்கப்பட்டுள்ளன.

கடற்படை ஆக்கிரமித்துள்ள காணிகளில் 27 குடும்பங்களின் காணிகளைத்தவிரஏனையகாணிகளில் மக்கள் மீள்குடியேற முடியும் எனவும் 27 குடும்பங்களின் காணிகளும் ஆறு மாத காலத்தினுள் விடுவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன தலைமையில் முள்ளிக்குளம் கடற்படை முகாமில் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலைத் தொடர்ந்தே மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டனஎன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

காணிகள்விடுவிக்கப்பட்டதை தொடர்ந்து அந்தக் காணிகளை அடையாளப்படுத்தும் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன. இன்றைய தினம் அங்குள்ள தேவாலயத்தில் பூசை வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் தாங்கள் மீள்குடியேறுவார்கள் என மக்கள் தெரிவித்தனர்.

கடற்படையினர் முள்ளிக்குளம் பிரதேசத்தை கடந்த 2007 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி ஆக்கிரமித்திருந்தனர். மூன்று நாள்களுக்கு வீடுகளில் இருக்கவேண்டாம் என்றும் அதன் பின்னர் வாருங்கள் எனவும் அறிவுறுத்தி, கடற்படையினர் தங்களை வெளியேற்றினர் என மக்கள் தெரிவித்தனர். அதன் பின்னர்தாங்கள்அந்தஇடத்தைப் பார்க்கவே இராணுவம் அனுமதிக்கவில்லை எனவும் அவர்கள் கூறினர்.

10 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் தமது சொந்த இடங்களில் குடியேறவோ தொழில்களைச் செய்யவோ அனுமதிக்கப்படவில்லை எனவும் அவர்கள் கூறினர்.

தங்களை வெளியேற்றிய பின்னர்தமதுமுழுமையானகிராமத்தையும் ஆக்கிரமித்த கடற்படையினர் தமது வடமேற்கு பிராந்திய கட்டளைத் தலைமையகத்தை அங்கு நிர்மாணித்துள்ளனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை முள்ளிக்குளம் விடுவிப்பு தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவிக்கையில்–

கடந்த வாரம் பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற அவசர கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரம் இரு வாரங்களுக்குள் அவசர கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் இன்று (நேற்று) கடற்படைத் தளபதி முள்ளிக்குளம் கடற்படை முகாமிற்கு விஜயம் செய்து அவசர கலந்துரையாடலை நடத்தினார். இதன் பின்னர் மக்களின் காணிகள் இன்று(நேற்று)முதல்அவர்களிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

முள்ளிக்குளம் காணி விடுவிப்பிற்கு ஜனாதிபதி முழுமையாக செயற்பட்டதுடன் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் கடந்த வாரம் அவசர கூட்டத்தைக் கூட்டியதன் பலனாகவே வெற்றி கிடைத்துள்ளது.

தற்போது முள்ளிக்குளம் கிராமத்தில் உள்ள சொந்த நிலத்தில் மீள் குடியேறவுள்ள மக்களுக்கு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன்தற்காலிகவீடுகள்அமைப்பதற்கான உதவிகளை வழங்குவார் என உறுதியளித்துள்ளார். – என செல்வம் அடைக்கலநாதன் கூறினார்.

கடற்படைத் தளபதி தலைமையில் நேற்று இடம்பெற்ற அவசர கலந்துரையாடலில் முசலிப் பிரதேசச் செயலாளர் எஸ்.கேதீஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர்அன்ரனிவிக்டர்சோசை, மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்கஒன்றியத்தின்தலைவர் அன்ரன்புனிதநாயகம்ஆகியோர் கலந்து கொண்டனர். (ம–8)

## பகிரங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலையற்ற பட்டதாரிகள் மேற்கொண்டுவரும் சத்தியாக்கிரகப் போராட்டம் 68 ஆவது நாளாகவும் நேற்று நடைபெற்றது.

தமது தொழில் உரிமையை வலியுறுத்தி மட்டக்களப்பு காந்தி பூங்காமுன்பாகதொடர்ச்சியான சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பட்டதாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை திருகோணமலை, கிழக்கு மாகாண சபைக்கு முன்பாக கிழக்கு மாகாணபட்டதாரிகள்இணைந்து முற்றுகைப்போராட்டம்ஒன்றை நடத்தியிருந்தனர்.

அந்தப்போராட்டம்தொடர்பில் நீதிமன்ற கட்டளையொன்றை பொலிஸார் வழங்கியபோது பட்டதாரிகள்சிலரால்அந்தக்கட்டளை கிழித்தெறியப்பட்டது.

இது தொடர்பில் திருகோணமலை சட்டத்தரணிகள் நேற்று முன்தினம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை யும்மேற்கொண்டிருந்தனர்.

இந்த விடயம் தொடர்பில் பட்டதாரிகள் கூறுகையில் –

தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் பட்டதாரிகள் மிகவும் உளைச்சல் மத்தியில் இருந்து வருகின்றனர். அதன் காரணமாகவே இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

அதற்காககிழக்குமாகாணத்தில் உள்ள ஒட்டுமொத்த பட்டதாரிகள் சார்பாகவும் பகிரங்க மன்னிப்பைக் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், தமது செயற்பாடுகள் சட்ட வல்லுநர்களுக்கு மன வருத்தத்தை ஏற்படுத்தியிருந்தால் அதற்காகவும் அவர்களிடம்மன்னிப்புக்கோருகின்றோம் – எனக் கூறியுள்ளனர். (இ–ச)

## நாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பள்ளிவாசல்கள்என்றுஏதாவது ஒரு பிரச்சினையைக் கையில் எடுத்துக் கொள்வார்கள் அவர்கள். இன்றைய நிலைமை இதுதான்!

–இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மட்டக்களப்பு – ஓட்டமாவடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின்நூற்றாண்டைமுன்னிட்டுநடைபெற்றசகாப்தவிழா நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயேஅவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்தொடர்ந்துஉரையாற்றுகையில் :–

பௌத்த, இந்து, இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ மதப் போத்னைகளில் எவ்வித பிரச்சினைகளும் இல்லை. ஒவ்வொரு பிரச்சினைகள் ஏற்படும் போதும் சம்பந்தபட்ட எல்லோரும் முன்னேவருவதால்முரண்பாடுகள் ஏற்படுகின்றன. இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களும் ஒற்றுமையுடன் வாழ வேண்டியதுமிகவும்அவசியமாகும். இந்த ஒற்றுமையைச் சீர்குலைப்பதற்குக் கடும் போக்காளர்கள் சதி செய்கின்றார்கள்.

இந்தச்சிறியநாட்டில்சிங்கள, தமிழ், முஸ்லிம்மக்கள்சகோதர உணர்வுடன் வாழவேண்டும். இந்த சகோதரத்துவத்தை உருவாக்குவதற்கு அரசியல்வாதிகளால் மாத்திரம் முடியாது, அனைத்து தரப்பினருடன் பேசிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும். பௌத்த, இந்து, இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்கள் ஒன்றிணைந்து பேசிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும்.

**மோடியின் வருகை குறித்துத் தவறான தகவல்கள்**

சர்வதேச வெசாக் தின விழாவில் கலந்துகொள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வரவுள்ளார். வெசாக் தின இறுதி நாள் நிகழ்வில் கலந்துகொள்ள நேபாளத்தின் ஜனாதிபதியும் வருகைதரவுள்ளார். இந்தியப் பிரதமர் பல ஒப்பந்தங்கள் செய்வதற்கு வருகை தரவுள்ளார் என்று சமூக வலைத்தளங்களில் தவறான செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. ஆனால், அவர் வேறு எந்த நிகழ்விலும் கலந்து கொள்ளப்போவதில்லை. – என்றார். (இ–ச)

## ஜி.சீ.ஈ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீள் திருத்தத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட நிலையில் அதன் பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்டன.

பெறுபேறுகளை, www.doenets.lk/exam அல்லது www.results.exams.gov.lk ஆகிய உத்தியோகபூர்வ இணையத்தளங்களில்பார்வையிட முடியும் எனப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம)

## பொன்சேகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டகருத்துக்குபல்வேறுவிளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன.

வேலை நிறுத்துப் போராட்டங்கள் பற்றிப் பேசியபோது, 'இந்த நிலைமைகளை அமைச்சர் பொன்சேகாவினால் கட்டுப்படுத்த முடியுமா' என்று ஜனாதிபதி நகைச்சுவையாகத் தான் கேட்டார் என்றும் அமைச்சர் ஜோன் செனிவிரத்ன தெரிவித்துள்ளார். (இ–ச)

## பேரினவாதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டுப்படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் சிவராமின் (தராகி) 12 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். ஊடக அமையத்தின்ஏற்பாட்டில் கிளிநொச்சி பாரதி ஸ்ரார் மண்டபத்தில் நடைபெற்றது.

ஊடக அமையத் தலைவர் ஆ.சபேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற அந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே வடக்கு முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிவராமின் பணிகள் தொடர்பாக வடக்கு முதல்வர் நீண்ட உரையொன்றை ஆற்றினார்.

சிவராம் சிங்களப் பேரினவாத அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக தனது சிந்தனையையும்எழுத்தையும்முன்வைத்து வந்தார். அவர் மிகத் துணிச்சலானதொருஊடகவியலாளர். அவரின் எழுத்துக்கள் கூடுதலாக ஆய்வு முறையான ஊடகவியலாகவேஅமைந்தன. எவ்வகையான நெருக்கடிச் சூழ்நிலைகளிலும் எதற்கும் அஞ்சாது துணிச்சலாக செய்திகளையும்அரசியல்கருத்துக்களையும் முன்வைத்தவர் என முதலமைச்சர் தெரிவித்திருந்தார்.

ஊடகவியல்துறையுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுவிடாது தமிழ்அரசியல், இலக்கியம், இலங்கையின் சிக்கலான வரலாறு ஆகியவை தொடர்பிலும் இவருடைய ஆய்வுகள் தொடர்ந்தன.

சரித்திரவியலாளர்கள், அரசியல் அறிவியலாளர்கள், ஆதி மக்கள்வளர்ச்சிபற்றிய அறிவியலாளர்கள் , சட்டவல்லுநர்கள், புவியியலாளர்கள் ஆகிய அனைத்துத் துறை விற்பன்னர்களுடனும் தர்க்க ரீதியான கருத்துப் பரிமாற்றங்களை கைக்கொண்டிருந்தமையால் உள்நாடுகளில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் இவரின் அரசியல் ஆய்வுகள்பெரும்வரவேற்பைப் பெற்றன.

1990 களில்பலஅரசாங்கங்களும், மனித உரிமைகள் நிறுவனங்களும்,தன்னார்வத்தொண்டர்களும், இலங்கையின் அரசியல் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான சிவராமின் கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்காக முன்வந்தனர்.

இதனால் அவர் ஐரோப்பிய, ஆசிய, வடஅமெரிக்க நாடுகள் பலவற்றிற்கு இராஜதந்திரக் குழுக்களுடன் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்காக பல முறைசென்றுவந்தார். அவரின் இறப்புஏற்பட்டதினத்தில்கூடஜப்பானிய அரசாங்கத்துடன் கலந்துரையாடல் ஒன்றுக்காக செல்ல இருந்தார்.

எமது நாட்டில் பல பத்திரிகையாளர்கள் அரச மிரட்டல்கள், அரச வன்முறை போன்றவற்றிற்குப் பலியாகி வந்துள்ளனர். தமிழ் ஊடகவியலாளர்கள் வரிசையில், நடராஜா அற்புதராஜா, பாலநடராஜஐயர், ஐயாத்துரை நடேசன், மயில்வாகனம் நிமலராஜன், கே.எஸ்.இராஜா, ரேலங்கி செல்வராஜா, ஐ.சண்முகலிங்கம், எஸ்.சிவமகாராஜா, சுப்பிரமணியம் சுஜிர்தராஜன் போன்ற பலருடன் தராகியின் பெயரும் இணைக்கப்படவேண்டி வந்தது எமது துரதிர்ஷ்டமே.– என்றார் முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

இந்த நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் இணைப்பாளர் கலாநிதி சி.ரகுராம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச் சந்திரன், ஊடகவியலாளர்களான மாணிக்கவாசகர், இ.தயாபரன் ஆகியோர் உரையாற்றினர்.

மேலும்,சிவராம்ஞாபகார்த்தமாக யாழ்.ஊடக அமையத்தின் விருது அமரத்துவமடைந்த ஊடகவியலாளர் அஸ்வின்சுதர்சனுக்குவழங்கப்பட்டது. அவரது பெற்றோரை வடக்கு முதலமைச்சர் கௌரவித்தார்.

மேலும், நெருக்கடியான காலகட்டத்தில் ஊடகப் பணியாற்றிய ஊடகவியலாளர்கள் ஏழு பேருக்கு ஊடக விருதுகளும் வழங்கப்பட்டன. (ம–07)

## தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மங்கள அங்கு மேலும் கூறியவை வருமாறு:–

வெளிநாட்டுத் தலையீட்டைத்தமிழ்த்தலைமைகள் சில கோரிவருகின்றபோதும்அவ்வாறான தேவை இல்லாமல் உள்ளக ரீதியிலேயே தீர்வை வழங்குவதற்குஅரசுநடவடிக்கைஎடுத்து வருகின்றது. சர்வதேச நீதிபதிகளை அனுமதிக்கின் றோமா இல்லையாஎன்பதுஇப்போதைய பிரச்சினை அல்ல. தமிழர்களுக்கு விரைவில் நீதியைப் பெற்றுக் கொடுப்பதுவே இப்போதுள்ள முக்கிய பிரச்சினை.

**அன்றைய நீதித்துறையில் அரசியல் தலையீடு; இன்று நிலைமை வேறு**

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தவுள்ள உள்ளகப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் உள்வாங்கப்பட வேண்டும் என்பதன் அர்த்தம் எமது நீதித்துறையில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லையென்பதாகும். மஹிந்தராஜபக்ஷவின் 10வருட ஆட்சியில் இடம்பெற்ற நிகழ்வுகளே இவ்வாறான கோரிக்கையை இன்று வெளிநாடுகள் முன்வைக்கக் காரணம். அவரது ஆட்சியில் நீதித்துறை எவ்வாறு அரசியல் மயமாக்கப்பட்டிருந்தது என்பதை உலகம் அறியும். ஆனால் இப்போது நீதித்துறை அரசியல் தலையீடின்றி சுதந்திரமாக இயங்கத் தொடங்கிவிட்டது.

**எல்லோரும் இந் நாட்டு மக்கள் தான்**

எதிர்காலத்தில் கடந்த கால ஆட்சியைப் போன்ற மோசமான நிலைமை ஏற்படாது. தெற்கோ, வடக்கோ எல்லோரும் இந்த நாட்டு மக்கள். அவர்கள் பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பது அவசியமாகும். அதைத்தான் நாம் செய்ய முற்படுகின்றோம். இந்த அரசு மீது நம்பிக்கை இழந்துள்ள வடக்கு - கிழக்குத் தமிழர்களின் நம்பிக்கையை இதன் மூலம் வென்றெடுப்போம். அனைத்துத் தமிழருக்கும் நீதி கிடைக்கும்.

நாம் நீதியை பெற்றுக் கொடுக்க வேண்டும்என்று கூறுவது வேறு நாட்டு மக்களுக்கு அல்ல. எமது நாட்டு மக்களின் ஒரு பகுதியினருக்குத்தான் இந்த நீதியைப் பெற்றுக் கொடுக்க முற்படுகின்றோம். இந்த நாட்டில் போரால் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு பிரிவினருக்கான நீதியை பற்றியே நாம் பேசுகின்றோம். அவர்கள்பாதிப்புக்குள்ளானார்கள்.பல துன்பங்களை அனுபவித்தார்கள்; உயிர்களை உடைமைகளை இழந்தார்கள் என்பதை எவராலும் மறுக்க முடியாது.அவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பது தான் ஒரு ஜனநாயக அரசுக்கு அழகு.

வடக்கிலுள்ள சில இனவாத தரப்பினர் மனித உரிமை மீறல் விசாரணையில் எப்படியாவது சர்வதேச தலையீட்டை ஏற்படுத்த வேண்டும்என்று விரும்புகின்றனர்.நாம் சர்வதேச தலையீட்டுக்கான தேவையை ஏற்படுத்தாமல் இந்த பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள நடவடிக்கைஎடுத்துள்ளோம்.இந்த அரசு மீது நம்பிக்கையின்றிக் காணப்படும்வடக்கு,கிழக்குதமிழர்களின்நம்பிக்கையைஇதன் மூலம் வென்றெடுப்போம். அனைத்து தமிழர்களுக்கும்நீதி கிடைக்கும். – என்றார் மங்கள. (இ–ச)

# அரசின் பிரதான அமைச்சுக்களின் செயலாளர்கள் விரைவில் நீக்கம்!

கொழும்பு, ஏப்.30

அரசின் பிரதான அமைச்சுக்களின் 6 செயலாளர்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் 15 தலைவர்கள் அடுத்த இரண்டு வாரங்களில் பதவி நீக்கப்படவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

செயலாளர்களைப் பதவி விலகுமாறு ஏற்கனவே உத்தியோகபூர்வமற்ற வகையில் அறிவிக்கப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனங்களின் தலைவர்களுக்கும் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, இலங்கை மின்சார சபை, இலங்கை மன்றக் கல்லூரி உட்பட பல அரச நிறுவனங்களின் தலைவர்களுக்குப் பதிலாக புதிய தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய நிறுவனங்களுக்கு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதி செயலகத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரச ஊடகத்துறையில் விரிவான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட உள்ளது என்றும் ஊடகத்துறை அமைச்சு மற்றும் இரண்டு அரச ஊடகங்களின் பதவிகளிலும் மாற்றங்கள் செய்யப்பட உள்ளன எனவும் கூறப்படுகிறது.

ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் பதவியிலும் மாற்றங்கள் செய்யப்பட உள்ளதாகக் கூறப்படுகிறது. அதே வேளை, ஜனாதிபதி செயலகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றின் உயர் பதவிகள் சிலவற்றிலும் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் தற்போதைய செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி, ஜேர்மனிக்கான இலங்கையின் தூதுவராக நியமிக்கப்படவுள்ளார்.

எவ்வாறாயினும் நீக்கப்படும் நிறுவனங்களின் பிரதானிகள் வேறு நிறுவனங்களின் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளதுடன் சிலர் ஜனாதிபதியின் செயலகத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

---

### பாலியல் குற்றச்சாட்டு விவகாரம்;

## இலங்கை இளைஞன் ஒருவருக்கு லண்டனில் 14 ஆண்டு சிறை!

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட இளைஞன் ஒருவருக்கு லண்டனில் 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஹிருஷ ஹென்ரிக்ஸ்(வயது-25) என்ற இளைஞனுக்கே இவ்வாறு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

10 ஆண் சிறுவர்களுக்கு எதிராக பாலியல் குற்றங்களை புரிந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் இவருக்கு 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர் 16 வயதுக்குக் குறைந்த சிறுவர்களை, போலிச் சமூக ஊடகங்கள் ஊடாகத் தமது சொந்த பாலியல் மன நிறைவுக்காக பயன்படுத்தியுள்ளார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டு தங்கள் படங்கள் மற்றும் வீடியோக்களை இணையம் மூலம் காட்டுமாறும், இணையம் ஊடாக பாலியல் செயல்களில் ஈடுபடுமாறும் அவர் தூண்டியுள்ளார்.

அவர் தனது அடையாளத்தை மறைக்க பெண் பெயர்களைப் பயன்படுத்தியுள்ளார், 2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இவர் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்பின்னர் அவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரது கணினி மற்றும் தொலைபேசிகள் அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் அவரது தவறான செயற்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அவர் மீதான குற்றச்சாட்டு உறுதியானதன் பின்னர் அவருக்கு 14 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ)



## இலங்கையின் வளங்கள் விற்பனை செய்து பலப்படுத்தப்படமாட்டாது வெளிநாட்டு உறவு!

### இராஜாங்க அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.30

வெளிநாடுகளுடன் நெருங்கிய உறவை முன்னெடுப்பதற்காக இலங்கையின் வளங்கள் ஒருபோதும் விற்பனை செய்யப்படமாட்டா.

சீனா, இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளுடன் நெருங்கிய உறவுகளை பேண இலங்கையின் வளங்கள் ஒரு போதும் விற்பனை செய்யப்படமாட்டா என்று இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

மாத்தறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன இதனை குறிப்பிட்டார்.

கண்டியில் இடம்பெறும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான மேதினக் கூட்டத்துக்குத் தேவையான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் இதன்போது கூறினார்.

மாத்தறை மாவட்டத்துக்கென 167 பஸ்கள் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இருப்புக்காக தலைமைத்துவத்தால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களை எவரும் விமர்சிக்க முடியாதென்றும் வரலாற்றில் இவ்வாறான முன் மாதிரியே காணப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ)

## மானிப்பாயில் வாள்வெட்டு குடும்பஸ்தர் படுகாயம்!

மானிப்பாய் பகுதியில் வாள்வெட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மானிப்பாய், கூழாவடியில் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதில் கூழாவடி பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய ரங்கராஜா செல்வகுமார் என்ற குடும்பஸ்தர் மீதே வாள்வெட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இனந்தெரியாத நபர் களால் வாள்வெட்டுக்கு இலக்காகிய குடும்பஸ்தர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வாள்வெட்டை மேற்கொண்ட நபர்கள் தப்பிச்சென்ற நிலையில் சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

## ஐக்கிய தேசியக் கட்சியின் 2020 திட்டம் இதுதான்?

கொழும்பு, ஏப்.30

நாட்டில் நடைமுறையில் உள்ள முறையான மற்றும் திட்டமிட்ட வேலைத் திட்டங்கள் ஊடாக 2020 ஆம் ஆண்டில் தமது கட்சியின் அமைச்சர்களை உள்ளடக்கிய அமைச்சரவையுடைய அரசை ஏற்படுத்துவதே தமது நோக்கம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேபால ஹெட்டியாராச்சி கூறியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

வேலைத் திட்டங்கள் இல்லாத அனைத்து பிரிவுகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தி, அதனூடாக முறையான வேலைத் திட்டங்களைத் தற்போதைய நல்லாட்சி அரசு முன்னெடுத்துள்ளது. இதனூடாக அரசு மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் தனியான அரசாக ஆட்சி அமைப்பதற்கு மற்றும் கட்சியை மேலும் மேலும் பலப்படுத்துவதற்கு விருப்பமுள்ள அனைவரும் பிரதமர் தலைமையில் இடம் பெறும் மேதின நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ)

## 22 வருடங்களை சிறையில் கழித்து விட்ட எங்கள் மகனை விடுதலை செய்யுங்கள்!

### ஜனாதிபதியிடம் வயோதிப பெற்றோர் உருக்கமான வேண்டுகோள்





மத்திய வங்கி குண்டுவெடிப்பில் குற்றம் சாட்டப்பட்ட விக்னேஸ்வரநாதன் பார்த்திபன் ஏற்கனவே 22 வருடங்களை சிறையில் கழித்துவிட்ட நிலையில் கருணை அடிப்படையில் அவரை விடுதலை செய்யுமாறு பார்த்திபனின் பெற்றோர் ஜனாதிபதியிடம் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

விக்னேஸ்வரநாதன் பார்த்திபன் மத்திய வங்கி குண்டு வெடிப்பு சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளார் எனக் கூறி 1996 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 13 ஆம் திகதி அன்று கொழும்பில் பேக்கரி ஒன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டார். 16.5.2002 அன்று பார்த்திபனுக்கு 20 வருட கடூழிய சிறைத் தண்டனையும் ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டன. பார்த்திபன் தான் ஏற்கனவே 22 வருடங்களை சிறைக்குள் கழித்து விட்டார். அதனால் தன்னை விடுதலை செய்ய வேண்டுமெனக் கோரி மேன்முறையீடு செய்துள்ளார்.

பார்த்திபனின் பெற்றோரான 83 வயதான விக்னேஸ்வரநாதனும் 81 வயதான ராஜேஸ்வரியும் தாங்கள் தமது தள்ளாத வயதில் முதுமையுடனும் பாரிசவாதத்துடனும் சிரமப்பட்டு வருகின்றனர் எனவும் தாங்கள் இறக்க முன்னர் தமது மகனைப்பார்க்க விரும்புகின்றனர் எனவும் கூறியுள்ளனர். மேலும் தங்களது ஒரு மகன் முள்ளிவாய்க்காலில் இறந்து விட்டார் எனவும் இன்னொரு மகன் அங்கவீனமுற்றுள்ளார் என்றும் மற்றொரு மகன் காணாமற்போனோர் பட்டியலில் உள்ளார் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

தங்களது மகன் கைது செய்யப்படும் போது அவருக்கு ஏதும் அறியாத 17 வயது. பார்த்திபன் (பிறந்த திகதி 1.4.1977) என்று கூறும் பார்த்திபனின் பெற்றோர் மத்திய வங்கி குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட அப்பாவிப் பொது மக்களுக்காக தாங்கள் வருந்துகின்றனர் என்றும் அவர்களின் குடும்பங்களுக்கு தமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர் என்றும் கூறியுள்ளனர்.

(இ)

# அட்சய திருதியை நாளில் யாழ். நகரில் நகைகள் வாங்க முண்டியடித்தனர் மக்கள்






ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் 12 ஆவது ஆண்டு நினைவு தினம் யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நேற்று கிளிநொச்சி பாரதி ஸ்ரார் மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சிவராமின் திருவுருவப் படத்திற்கு பிரதான பொதுச் சுடர் ஏற்றுவதையும் பொது மக்கள் அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் - எஸ்.நிதர்ஷன்)

# மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று



மட்டக்களப்பு, ஏப். 30

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை மட்டக்களப்பு அமெரிக்க மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் மட்டக்களப்பில் நடைபெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கலந்துகொண்டார்.

மத்திய குழுவில் உள்ள வடக்கு, கிழக்கு மாகாணத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் இக்கூட்டத்தில்கலந்து கொண்டனர்.

இதன்போது கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள் மற்றும் தமிழ் மக்கள் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன.

அத்துடன், வடக்கு, கிழக்கில் இடம் பெற்றுவரும் போராட்டங்கள் அவற்றைத் தீர்த்துவைப்பதற்கு அரசுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்பாடுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் உள்ள காணிப் பிரச்சினைகள், அபிவிருத்தி சார்ந்த பிரச்சினைகள் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் அங்கு பரிமாறப்பட்டன என்று தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார். (இ-ச)

**Mobile Phone**
**Repairing Course**



Smart & All Mobile Phones
Hardware , Software and unlocking
12th Batch start on
06.05.2017
Weekend Batches
✔ செயல்முறையுடன் கூடிய வகுப்புக்கள்.
✔ மட்டுப்படுத்தப்பட்ட ஆசனங்கள்.
✔ குறைந்த செலவு.... நிறைந்த பயன்.....
iCS EDUCATION 076-7013060 , 021-7306000

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்**
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவை



எமது சேவை 365 நாட்களும்

விரைவாகவும் பாதுகாப்பாகவும் 72 மணி நேரத்தில் உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும் (EXPRESS SERVICE)

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் ஏற்கப்பட்டு வெளிநாடுகளில் ஒப்படைக்கப்படும் (Door to Door Service)



அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர்வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
இல.10, புதிய மாநகரசபைக் கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 3536